12 ௧௬-ஜூன், 1960 உ-3

# தமிழ்ப் பொழில்


DIGITIZED

ZZ3311,N49
N60.12.2-3
4017

# அமிர்த[illegible]னி

## தெய்வீக மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| மலர் 12 | சார்வரி ௵ வைகாசி ௴ | [illegible] சந்தா |
| இதழ் 2 | மே—ஜூன் | ரூ. 3-00 |



மூப்பொழுதும் திருமேனி தீண்டுவார்

சித்திர விளக்கம் பக்கம் 53

23 JUL 1960
MADRAS

# உள்பொருள்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பக்தர் மனதுற்ற சிவம் | (திருப்புகழ் மணி) ... | 45 |
| 2. | முப்போதும் திருமேனி தீண்டுவார் | (கி. வா. ஜகந்நாதன்) | 53 |
| 3. | கபில முனிவர் | (ரஸபதி) ... | 55 |
| 4. | மனத்துக்கு உபதேசம் | (கி. வா. ஜ.) ... | 64 |
| 5. | "உனைத்தினந்தொழுதிலன்" திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) ... | 65 |
| 6. | பாம்பவடிகளும் பன்னிருகைப் பெருமானும் | (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) | 73 |
| 7. | உள்ளத்தே விளையும் கள் | (அ. ராமமூர்த்தி) ... | 77 |
| 8. | திருவெழு கூற்றிருக்கை | (இலங்கையடிக் கவுணிய வித்துவான் இராஜசிவ சாம்பசிவ சர்மா) ... | 80 |
| 9. | அன்பரும் அன்பனும் | (ஆ. கி. ரங்கராஜன்) ... | 85 |
| 10. | Krishna & Skanda | *(Thiruppugal Mani)* ... | 91 |


## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

*சித்திரை*மீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.


# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 12 | சார்வரி ஞு வைகாசி மீ | இதழ் 2 |
|---|---|---|
| | மே-ஜூன்—1960 | |


## பக்தர் மனதுற்ற சிவம்

(திருப்புகழ் மணி)

எங்கும் நிறைந்த பிரம்மத்தின் சக்தி, துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூன்று உருவங்களாக வெளிப்படுகிறது. அந்த சக்திகளின் அருளை, விநாயகப் பெருமான் வீதிகள்தோறும் உட்கார்ந்துகொண்டு தன் திருவடியை வணங்குவோர்க்கு வாரி வாரி வழங்கிக் கொண்டே யிருக்கிறாம். அதை வாங்குவதெப்படி? ஹ்ருதய புண்டரீக பூக்கொண்டு வாங்க வேண்டுமாம். நமக்குப் பெரியவர்கள் ஒரு பொருளைக் கொடுத்தால், மரியாதையுடன் வணக்கம் சொல்லி வாங்கிக் கொள்ளுகிறோமல்லவா? அதுபோல் ஆண்டவன் கொடுக்கும் அருளை அன்புடன் அவன் நாமங்களைப் பாடி மனத்தை நிறுத்தி அதில் வாங்கிக் கொள்ள வேண்டும். இக் கருத்தையே துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார்வார் தமக்கு வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம், மாமல

வாயிடம்போய்க் கைஉணவை வழங்கும் அதுபோல்,
தக்கார் துதிவிரும்பாது உதவுபவர் தக்கோர். (நன்னெறி.)

ராள் நோக்குண்டாம் என்ற பாட்டால் ஔவையார் விளக்கி யுள்ளார்.

கணபதி யென்ருல் ஓங்கார மூர்த்தி யென்றே பொருள். முதலும், நடுவும், ஈறுமற்று, காக்கும் பொருளுக்குக் கைகால் முதலிய அவயவங்கள் வேண்டுவதில்லையே. ஆனுல், உலகெங்கும் நிறைந்த ஓங்கார மூர்த்தியுடன் ஒன்றுவதற்காக வைக்கப்பட்ட "ஸ்விச்" தான் பாதாரவிந்தம். பாதாரவிந்தத்தை மனத்தினுல் தொட்டால் ஓங்கார மூர்த்தியுடன் கலக்கலாம்.

அந்த ஓங்காரப் பொருள்தான் பல மூர்த்திகளாகக் காட்சி யளிக்கிறது. அந்த மூர்த்திகளனைத்தும், ஓங்காரமாகிய ப்ரும்மானந்தக் கடலில் கலக்கும் கால்வாய்கள் போன்றவை. எந்த மூர்த்தியை நினைத்தாலும் அது ப்ரம்மானந்தக் கடலில்தான் சேர்க்கும்.

பிரம்மத்திற்கு உருவமுண்டா எனில், உண்டு. ரூபமும், அரூபமுமா யிருக்கும் பொருளுக்கு ரூபமில்லை யென்று சொல்வதெப்படி? எங்கும் நிறைந்து ஓம்காரமாகிய பிரம்மஸ்வ ரூபமே லிங்க வடிவில் இருக்கிறது.

இந்த பிரம்ம ஸ்வரூபத்தைத்தான் புருஷ ஸூக்தம் ஸபிரம்ம ஸசிவ ஸஹரிஸேந்த்ர ஸோக்ஷர: பரம ஸ்வராட் அதாவது அந்த ஓங்காரப் பொருளே பிரம்மா, சிவம், ஹரி, இந்திரனென்று அழைக்கப் படுவது என்று கூறுகிறது.

அந்த பிரம்ம ஸ்வரூபமே உலகெங்கும் ஒன்ருகி நிறைந்திருக்கும் பொழுது வேங்கடாசலபதியா யிருக்கிறதென்றும், எல்லா ஜீவராசிகளின் இதயத்திலும் அருள்முகமாய் வெளிப்படும் பொழுது ஆறுமுகனுய்க் காட்சி யளிக்கிற தென்றும் ஒரு புராணம் கூறுகிறது.

---

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனிது; ஏனையவர் பேசுற்ற இன்சொல் பிறிதென்க.(ஏனையர்-வன்னெஞ்சர். பிறிது-துன்பம்.)



முருகனைச் சிவகுமாரன், சக்தி புத்திரனென்பர். அதாவது சிவாம்சம், சக்தியமிசம் இரண்டும் கொண்டவன்.

உலகங்களில், பற்பல பேத உருவங்களைக் கொண்ட ஜீவராசிகளனைத்தும், நான் எனது என்ற வேற்றுமை நீங்கி ஒன்றுபடும் இடம் எதுவோ, அதையே மாணிக்கவாசகர் அம்மை யப்பனென்ருர். அருணகிரியார் முருகனென்ருர். அம்மையும் அப்பனும் ஒன்றுபடும் இடம் குழந்தைதான். அவ்வாறு ஒன்றிய சிவசக்தி அல்லது அம்மை யப்பனின் தோற்றமே, கணபதியும் முருகனும்.

சிவ சுவரூபம் தேஜோமயமானது. சக்தி ஸ்வரூபம் கருணை மயமானது. இரண்டும் கலந்த வடிவம் தான் உலகங்களனைத்தும். இதைத்தான் வள்ளலார் "அருட்பெருஞ் சோதி, தனிப்பெருங் கருணை" யென்ருர்.

அந்த அம்மை யப்பனுகிய சிவன் தீர்த்தக் கரைகள் தோறும் விளையாடிக் கொண்டிருப்பவனும். நடமாடும் கோயிலாகிய மனித உள்ளத்தில் ஒரு சிறிதளவு அன்பெனும் நீர் சுரந்துவிட்டால், அந்த தீர்த்தக் கரைகளாகிய இதயங்களில் போய் விளையாடிக் கொண்டிருக்கிருன். அவன் அன்புக்கு அவ்வளவு ப்ராதான்யம் கொடுப்பவன். உலக முழுவதும் காத்து ரக்ஷிப்பது அந்த அன்புதான். அன்பினுல் பிணைக்கப்பட்டு எல்லாரும் ஒன்ருவது பஜனையினுல்தான்.

"சிவமெனும் ஜோதி யுணர்கின்ற வாழ்வு சிவம், பக்தர் மனதுற்ற சிவம்" என்ருர் அருணகிரியார். சிவம் என்பது அன்பாகையால், அதற்குத் தானுன அன்பு தெரியாதென்று, முருகன் குருநாதனுகி, அப்பா!

---

கல்லால் அடித்த சாக்கியர்க்குக் கதியளித்த சிவபெருமான் பூவால் அடித்த மன்மதனைப் பொசுக்கியதும் ஏனேயோ?. (கருதுக)

ஓங்காரம் என்பது அன்பு. அந்த அன்புதான் நீ. அது தான் பக்தர்கள் மனத்தின் அன்பு தீர்த்தத்தில் விளையாடும் சிவம். "பக்தர் மனதுற்ற சிவம்" என்று உபதேசித்தாராம். அர்ஜுனனை அச்சமற வைத்த பொருளாகிய கீதா ரகஸியம் அதுவே. அப்படிப்பட்ட ஓங்காரப் பொருள்தான் முருகன்.

*முத்துநவ ரத்னமணி பக்நிறை சத்நியிட*
*மொய்த்தகிரி முத்திதரு வெனஓதும்*
*முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்*
*முப்பத்து மூவர்க்கசுர ரடிபேண*
*பத்துமுடி தத்தும்வகை யுற்றகணை விட்டஅரி*
*பற்குனனை வெற்றிபெறக் கதமூறும்*
*பச்சைநிற முற்றபுயல் அச்சமற வைத்தபொருள்*
*பக்தர்மன துற்றசிவம் அருள்வாயோ*

என்று ஓங்காரப் பொருளைத் தனக்கு உபதேசிக்க வேண்டுமென்று முருகனை வேண்டுகின்றார் அருணகிரியார்.

அவனை "துரியநிலையே கண்ட முத்தர் இதய கமலத்தில் விளைகின்ற அற்புத சுபோத சுகம், சுயபடிக மாவின்ப பத்மபதம்", "பரசுடரொளியதாய் நின்ற நிட்கள சொரூபமுதல் ஒரு வாழ்வு" என்று பாராட்டுகிறார்.

முத்தர் யார்? உலக விஷயங்களிலுள்ள பற்றை விட்டு முருகனைப் பற்றியவர் யாரோ அவரே முத்தர். அவர் இதயத்தில் படிகம் போன்ற இன்பமாய்த் தெளிவாய் பிரகாசிக்கின்றனும் முருகன்.

பகவத் பாவம், இசைந்து நிற்பதுதான். நான் என்பதை விட்டால், உலகமெல்லாம் ஒன்றிய அன்

---

கன்றைக் காட்டிப் பசுப்பால் கறப்பாரைப் போலே
உதவார்கைப் பொருளை, அவர்க்கு உரியார் வழிப்பெறுவர்.



பாம் சிவமாய் விடுகிறது. நானென்றமையை அழித்து விட்டால் தானென்ற ஜோதி ப்ரகாசிக்கிறது. (மை (My) யை) நானை அடித்துத் திருவடியின் கீழ்த் தள்ளும் நிலைதான் அடிமை. அந்த ஜோதி, உலகம் நிறைந்த பிரேமை சுவரூபமாய் விளங்குகிறது. அதைப் பற்றுவ தெப்படி? நாதத்தால் நாமத்தால் தான் பற்றமுடியும். ஏனெனில் அதனுடைய சொரூபம் ஜோதி மயமானது. சரீரமோ நாதமாகிய நாமம். ஆகாரம் அல்லது வடிவமோ ப்ரணவம். ஆதலால் "ஜோதி சொரூபா! நாத சரீரா! ப்ரணவாகாரா" என்று பாடுவோம்.

சுபம்.

---

# முப்போதும் திருமேனி தீண்டுவார்

(கி. வா. ஜகந்நாதன்)

சிவபிரானால் அருளிச் செய்யப் பெற்றவை இருபத்தெட்டு ஆகமங்கள். அவற்றைச் சைவ சமயத்தின் அடிப்படை நூல்கள் என்பர். அவ்வாகம வழியே இறைவன் திருக்கோயில்களில் பூசை நடைபெறும். பூசைகள் நித்தியம், நைமித்திகம் என்று இருவகைப்படும். இவற்றைத் திருவள்ளுவர் பூசனை என்றும் சிறப்பு என்றும் கூறுவர். நாள்தோறும் இறைவனைப் பூசித்தல் நித்தியம்; விசேஷ காலங்களில் உற்சவம் முதலியன செய்தல் நைமித்திகம். நித்தியத்தில் உண்டாகும் வழுக்களைப் போக்கும் பொருட்டு நைமித்திகத்தை விதித்திருக்கிறார்கள்.

ஆகம வழியே பூசை செய்வதற்குரியவர்கள் சிவவேதியர்கள். அவர்களை ஆதிசைவர் என்றும் கூறுவர். அவர்

---

கடல்நீரைக் கொள்மேகம் பயனாகப் பெய்வதுபோல்
உதவாதார் செல்வம், ஒறுப்பார் எடுத்தளிப்பார்.

களே இறைவன் திருமேனிகளைத் தீண்டும் உரிமை உடையவர்கள். அபிடேக ஆராதனை செய்யும் தொழிலும் ஆகம அறிவும் உடையவர்கள் அவர்கள்.

இறைவனுடைய திருமேனியைத் தீண்டும் இந்தப் பெருமை இன்று நேற்று வந்தது அன்று; பழங்காலத்தி லேயே அவர்கள் இந்த உரிமையை உடையவர்களாக இருந்தார்கள். இன்றும் அவ்வுரிமையை உடையவர்களாக இருக்கிறார்கள். வருங்காலத்திலும் அந்த உரிமையுடன் இருப்பதற்குரியவர்கள்.

காலை, நண்பகல், இரவு என்னும் மூன்று போதும் இறைவன் திருமேனியைத் தீண்டிப் பூசைபுரியும் அவர்கள், மூன்று காலங்களிலும் அவ்வுரிமையைப் பெற்றவர்கள். அவர்கள் பெருமையைச் சேக்கிழார் பின்வருமாறு பாடு கிறார்.

"தெரிந்துணரின் முப்போதும்
செல்காலம் நிகழ்காலம்
வருங்காலம் ஆனவற்றின்
வழிவழியே திருத்தொண்டின்
விரும்பியஅர்ச் சனைகள்சிவ
வேதியர்க்கே உரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை
யாம்புகழும் பெற்றியதோ!"

---

நெல்லினுமி நீங்கிப்பின் மூடினும் திண்மைகெடும்;
நல்நண்பர் பகையாய்ப்,பின் நட்டாலும் சுகமில்லை.



கணபதி தாஸர்கள் 14.

# கபில முனிவர்

## (ரஸபதி)

அருந்தமிழ் நாட்டு மன்னர் அபிசித்து. அவர் தேவி குணவதி. அவள் தங்க விக்ரகமான தையல். வனிதையின் அழகு, மன்னரை வசீகரித்தது. மணந்த நாள்முதல், சதா அவள் மனனந்தான். அழகை ரசிக்கலாம். ஓயாது அதைப் புசிக்க நினைப்பது புத்திசாலித்தனமல்ல. பூபதிக்கு அது புரியவில்லையே.

வரவர, மகப்பேற்றில் இருவர்க்கும் மனம் சென்றது. நினைத்தபடியே எல்லாம் நிறைவேறுகிறதா! மகவு மகவு என்று எண்ணி மனம் கண்ணினர். கருதும்போ தெல்லாம் கண்ணீர் சிந்தினர். ஒருநாள் குலகுருவை அணுகினர்.

நாட்டை ஆள, எதிர்கால நரபதி யில்லையே! எண்ணு கிறேன்; நெஞ்சம் இடிகிறதே ஆசார்ய! என்று அலறி யழுதார் அரசர். குமுறிப் பொருமினள் குணவதி.

அபிசித்து! எழுதாக் குறைக்கு அழுதால் ஆகுமா? இல்லை யென்று ஏங்குவது இயற்கைக்கு விரோதம். அதற் கென்று முயல்வதுவோ அராஜகம். அவரவர் வினையின் அவரவர் வருவார். யார்க்கு யார் துணை? ஆண்டவன் திருவுளம்போல் எதுவும் ஆகும். வருந்தாதே என்று, ஆறுதல் மொழிகள் ஆயிரம் கூறினார் குலகுரு.

மகப்பேற்று ஆசை, உபதேசத்தை மறுத்தது. வரவர ஏக்கம் வலுத்தது. தூக்கம் தொலைந்தது. மேனி நலிந்து மெலிந்தது.

ஆசாரியர், அதை அறிந்தார். நரபதியைப் பார்த்து நகைத்தார்.

மன்னா! சொன்னால் உனக்குப் புரியவில்லை. சரி. ஒன்று செய். ஒருவர் துணையும் வேண்டா. தனித்துப் புறப்படு. கடலில் பாம்பாறு கலக்கிறது அல்லவா. அதை

---

கண்ணிரண்டும் ஓர்பொருளைக் காணும்; அதுபோல்
கண்ணும் சதிபதிகள் ஓர்கருத்தர் ஆதல்நலம்.

யடுத்துளது ஒரு ஆரண்யம். அதன் நடுவில், புனிதமானது ஒரு பொய்கை. ஆறு மண்டலம், அதன் கரையில் ஐந் தெழுத்தை உருவேற்று. இடத்தின் சார்பால், உரு ஏறும் இயல்பால், நின் எண்ணம் நிறைவேறலாம் என்ருர். நல்லது என்று வணங்கினர் நரபதி.

பிரியமான மனேவியைப் பிரிய மனம் வரவில்லே. அவளே மட்டும் துணையாக அழைத்துக் கொண்டு, பூபதி உடனே புறப்பட்டார். எவர் துணேயும் வேண்டாம் என்ருரே குருநாதர். அவர் மொழியை மீறுகிருேமே என்ற நினேவு, குறுகுறுத்து மனத்தைக் குமைத்தது.

* * *

புனித வனத்தில், குறித்த பொய்கையை அணுகினர். வேந்தர் அதனில் வைதிகம் செய்தார். அமர்ந்தார். ஓயாது ஐந்தெழுத்தை உருவேற்ற லாயினுர். குறித்த காலங்களில் குணவதி, பழங்களேக் காய்களேப் பறித்தாள். அன்புக் கணவர்க்கு அருத்திளுள். இப்படியே நாள்கள் பல இடையில் நடந்தன.

ஜெபம் செய்யும் அரசர், சிரம பரிகாரம் செய்ய, எழுவார். சிறிது நேரம் உலவுவார். வனப்பு மிக்கது அந்த வனம். வனப்பே உருவானவள் அரசி. அது யாரும் அற்ற தனியிடம். விரத கால வைதிக தர்மம், வேந்தர் அறிந்ததுதான். பாழும் அழகு மனத்தைப் பாழ்படுத்து கின்றது. கலேயும் சிந்தனேயைக் கட்டுப் படுத்துகின்ருர். விரதம் கெடும் என்பது கருதித்தான் குருநாதர், வேறு துணே வேண்டா என்ருர். அவர் அருளியபடி வந்திருந் தால், இந்த விகாரத்திற்கு இடமிராது அல்லவா!

நேரிழையர் மென்மைச் சாயல், எரியும் நெருப்பைப் போல்வது. பஞ்சு போல்வது ஆடவர் ஆண்மை. ஆதலின், விரத காலங்களிலும், பெரும்பான்மை எப்போதும், இதை உணர்ந்திருப்பதுதான் உத்தமம்.

எவ்வளவு சிறந்தவர் அபிசித்து. சீச்சீ! அவர் வரலாறுமா இப்படி? என்று, படபடப்பதில் பயனில்லே.

---

குறுமுனிவர் பெருங்கடலேக் குடித்தனராம்; அஃதேபோல்
அதிகம்கற் றேம்என்ருல், அவமானப் படநேரும்.



அவர் வரலாறு, ஆஸ்திக உலகிற்கே ஒரு அறிவிப்பு. அவ்வளவுதான்.

விரத கால சம்பந்தம், அறிவை அழிக்கும். உடல் உரத்தை ஒழிக்கும். வித்தகத் தவசித்தி விரையமாய்விடும். அறிந்தும் அரசர் அறிவை இழந்தார். மதி சிதைந்தவர்க் குத் தர்மம் மறந்து போகுமோ என்னவோ?

பார்த்திபர் பாபம் படபடத்தது. அதர்ம கர்ப்பம் எய்தினள் அரசி. உலக கோளாறுகள் பல, இப்படித் தான் உதயம் ஆனதோ என்று, உணரும் போதே உள்ளம் நோகிறதே! வீணுன ஆகாமிய விளேவு இது.

நிருபர் அதன்பின் நீராடினுர். அனுட்டித்தார். பழையபடி ஜெபத்தில் மனம் பதிந்தது.

குரு குறித்த ஆறுமண்டல கால அளவு தீர்ந்தது. அரசர், தேவியுடன் நாட்டை யடைந்தார். அரண்மனே புகுந்தார். அரசி கருவெய்தினள் என்று, மன்னர் மகிழ்ந் தார். குடிகள் யாவரும் குதூகலித்தனர்.

பிரசவ காலம் பிறந்தது. பிறந்தது ஒரு பிள்ளே. கண்கட்கு இனிய வனப்பும் கம்பீரமுமான சேய்க்கு, பெற்ருேர் கணன் என்ற பெயரை யிட்டனர்.

பூபதி செய்த புண்ணியம், கணனிடம் அளவிலாத ஆற்றலாகி அமைந்தது. அவர் செய்த பாபம், அவனுக்கு அசுர ஆவேசத்தை அளித்தது. தந்தையே மைந்தனுகிருன் என்ற கீதையின் தர்மத்தை, எவரும் இங்கு எண்ணலாம் அல்லவா!

'தக்கார் தகவிலர் என்பது, அவரவர்
எச்சத்தால் காணப் படும்'

என்று பொதுமறை புகல்வதில், எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது! இப்படியே உருண்டு பல ஆண்டு கள் ஓடின.

* * *

மங்கை ஒருத்தியை, மன்னர் கணனுக்கு மணமுடித்து வைத்தார். ஆட்சியை அவன்பால் ஒப்படைத்தார். குண வதியுடன் ஓய்வு கொண்டார்.

---

அணேகட்டி வெள்ளத்தை அடக்குமவர் போலே,
மனம்கவர்ந்த கோபத்தை மாய்ப்பதுவே தர்மம்.

கணன், காமிய புத்தியுடன் அரிய விரதம் பல அனுட்டித்தான். அளவிலாத ஆற்றலை அதனாலும் பெற்றான். அசுர புத்தியால், அநியாய நாடகங்கள் ஆடினான். திக்கு விஜயம் செய்தான். எந்நாட்டிற்கும் தானே அதிபதி என்று இறுமாந்தான்.

ஒருநாள் தேரில் ஏறினான். நெடுந்தூரம் சென்றான். ஒரு ஆரண்யம். அங்கு ஒரு ஆஸ்ரமம். கடுந்தவக் கபிலர், உள்ளிருந்து வெளிவந்தார். பரம கம்பீரமான அவர் திரு மார்பில், சிந்தாமணி பளபளத்தது.

கணன் கண்டான். கண்கள் கூசின. அதிசயித்தான். கபிலரை அணுகினான்.

ஸ்வாமி! நமஸ்காரம். பரிதி ஒளிபோல் பளபளக்கும் இம்மணி, உமக்கு எங்கே கிடைத்தது?

கணா! ஆனைமுகர் நம் அத்தர். ஒருநாள் அவர் வழிபாடு முடிந்ததும், எழுந்தேன். எதிரில் இந்திரன் இருந்தான். என்ன நினைத்தானோ அறியேன்; கணபதி பக்தர் நீர். மேலோரைத் தரிசித்துவிட்டு வாளா போவது மரபல்ல; எளியேன் காணிக்கை இது என்று சொல்லிக் கொண்டே, தகவுடைய இதை என் மார்பில் தரித்தான். குறித்து நினைத்த எதையும், இது கொடுக்கும் திறத்தது.

அப்படியா செய்தி! ஸ்வாமி! நீர் துறவி. கடலில் பெய்த மழைபோல், எவர்க்கும் பயன் இல்லாமல், இது உம்மிடம் இருக்கிறது. என்னிடம் இருந்தால், பலர்க்கு இதனால் பயன் விளையும்!

கணா! மழையால் கடலிற்குப் பயன் இல்லை என்று யார் சொன்னார்கள்? நீர் வாழ் உயிர்கள் பல, அதனால் நீடிக்கின்றன. அதை நீ யறியாய். என் போன்ற முனிவர் கட்கு, இதனால் எவ்வளவோ பயன் விளைகிறது. வீண் பேச்சு வேண்டா. உயிரினும் மேலாக நான் இதை உணர்கிறேன்.

அப்படியா! எனக்கா மறுப்பு? என்று கர்ஜித்தான் கணன். தாடியைப் பிடித்தான். ஐயோ! அவரை நெட்டித்

---

பரன்முடியிற் பாம்பு பருங்கருடற் கஞ்சா;
வலியவர்சார் மென்மையர்கள், வன்மிண்டர்க் கஞ்சார்.



தள்ளினான். மல்லாந்து விழுந்தார். அவர் மார்மேல் பாய்ந்தான். சிந்தாமணியைப் பிடுங்கினான். ஹஹ்ஹாஹா என்று கோர நகை செய்து கொக்கரித்தான்.

கதறினார் கபிலர். ஏ துராத்மா! அராஜகத்தை ஆண்டவன் பொறுக்க மாட்டான். திடீர்ப் பிரகாச தீபம், அணைந்து போவதற்கே அறிகுறியடா! என்று அலறினார்.

அசுர புத்தி, அருந்தவர் சாபத்தை அசட்டை செய்தது. அவன் ஏறிய தேர், உருண்டு நிலமதிர ஓடியது.

நகரடைந்த கணன், சிந்தாமணியின் துணையால், குடிகள் ஒவ்வொருவரையும் குபேரர்கள் ஆக்கினான். தீராத எவர் நோயையும் தீர்த்தான். எண்ணிய தெல்லாம் எய்தினான். இறுமாந்தான்.

வாய் திறந்தால் போதும்; வருவதெல்லாம் பிரசாதம் என்பார்போல், நல்ல காரியம் செய்தான் கணன் என்று, நாலு புறத்திலும் குரல் எழலாம். சிந்தித்துப் பேசாத பேச்சுக்களைக் கேட்டு, கோணைக் குறும்பர் பலர் குதி போடலாம். தப்புத் தாளத்தைக் கைவிட்டு, தர்மத்தை நினைப்பதுதான் தகுதி.

குடிசை வீடுகள் பல; கோபுர வாழ்க்கை சில. ஏற்றமும் இறக்கமும் இயற்கையின் நியதி. பாவ புண்ணியத்தின் பயன். அதை மாற்றி யமைக்க நினைப்பவர்கள், மட்ட ரகம் ஆனவர்கள். அதனால் ஆணவந்தான் குதி போடும். அராஜகந்தான் அதிகரிக்கும். அசுர வேகத்தில் பேசுவோர்க்கு, இதை நினைக்க நேரம் ஏது?

ஜீவ மாணிக்கத்தை இழந்த சர்ப்பம்போல், கபிலர் உயிர்க்கிறார்; கண்ணீர் உதிர்க்கிறார். அடடா அவரைப் பார்க்க சகிக்கவில்லை. கவலை மிகுந்தவர் கடவுளை நினைப்பர்; மாதவர் அவர்க்கோ அதுவும் மறந்தது. பிறக்கும் பொழுது உடன் பிறந்ததா? இறக்கும் பொழுதேனும் தொடருமா? இடையில் வந்தது; வந்தபடி மறைந்தது. அவ்வளவுதானே செய்தி. அரிய இம் மெய்ம்மையைக்

---

தன்குறையைத் தீர்க்காமல், தளரும் பிறர்குறையைக்
கண்டு மனம்வருந்திக், கைகொடுப்பார் நல்லோர்.

கபிலர் அறியாரா? அறிவார். மற்று ஏன் இந்த மயக்கம்! அதுதான் ஆத்ம சுபாவம் என்பதா! அடபாவமே! ஒரு நாள்,

“திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.”

என்ற வாக்கு, அவரையும் அறியாமல், அவர் வாயில் இருந்து வந்தது. திடுக்கிட்டது மனம்.

என்ன வியப்பு இது! நானா பாடினேன்! என் வாக்கில் எப்படி இப்பாடல் பிறந்தது? கருணையே உருவான கணபதியெம் .பெருமானை, மாபெருந் தீவினையேன் மறந்திருந்தேனே! ஏழ்மை வாழ்வு எவ்வளவோ உயர்ந்தது. இடைவந்த வாழ்வு, சிந்தாமணிச் செய்தி. பூரித்தேன். இது கண்டு புளகித்தேன். மதமதத்தது மனம். அப்பாவந்தான் கணனை அனுப்பி வைத்தது. ஒழிந்தது மணி. கழிந்தது கன்மம் என்று கருதாது கலங்கினேன்.

கண்களே! சேவித்தற்கு உரிய செவிகளே! நயன் இருந்த நாவே! அரிய கரசரணாதி அவயவங்களே! நெஞ்சே! ஏ மனித சமுதாயமே! என் வாழ்க்கையைக் கண்டேனும் எச்சரிக்கையா யிருங்கள்!

‘விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து’

என்று கதறினார்.

உடனே நீராடினார். பஞ்ச சுத்தி செய்தார். கணபதியை அபிடேகித்தார். தூய மொழிகளால் துதித்தார். ஆரம்பத்தில் ஓம். அடுத்தது விநாயகர் திருநாமம். இறுதியில் நம: பேஷ். எட்டு பத்து லட்சம் உரு ஏறியது. அதன் மூலம் அமைதி பெற்றது மனம்.

---

தன்களங்கம் தீர்க்கத் தான்கருதா வான்மதிதான்
உலகஇருள் தீர்த்து உவகையடை கின்றதுவே.



ஆம். போலி நாடகம் புறவுலகம். அமைதிதான் அக உலகின் அனுபவம். என்ன அதிசயம்! மந்திர நாதமும், மனத்தின் செம்மையும், அருளாளர் பெருமானை ஆவலிக்கச் செய்ததா! ஆ! ஆ!!

பல அணிகள் பளபளக்க, ஓம குண்டத்தி லிருந்து கணபதி உதயம் ஆயினர். குண்டலங்கள் செவிகளில் குலுங்குகின்றன. புனித கருணையை, கண்கள் பொழிகின்றன. அஞ்சாதே கபிலா! என்று, ஐந்து கரங்களும் அறிவிக்கின்றன.

கற்பகமான திருவடிகளைக் கண்ட மனம் கரைந்தது. கபிலர் எழுந்தார். விமலன் திருவடியில் விழுந்தார். அத்தா! கரிமுக வரதா! கணநாதா! எத்தனை நாள் மறந்திருந்தேன் ஏழை! பிழை செய்தேன்; பொறுத்தாய். பிரபோ! என்று விசித்து விசித்து வெம்பினார்.

கபிலா! கவலை வேண்டா. இனியும் எம்மை மறவாதபடி, நீங்காது உன் மனத்தில் நிற்பம் யாம்! என்று, புன்னகை செய்தார் புனித கணபதி.

அப்படியானால், இனி வாழ்ந்தேன் பெரும! என்று கபிலர் வணங்கினார்.

“யானை முகத்தான், பொருவிடையான் சேய்,அழகார்
மான மணிவண்ணன் மாமருகன்—மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன்”

என்று பரிவொடு அவர் வாய் பாடியது.

* * *

கணன் நள்ளிரவில், ஒரு பயங்கர கனவு கண்டான். வீரிட்டு அலறி விழித்தான். திடுக்கிட்ட மெய்க்காப்பாளர்கள், அவன்பால் வந்து அணுகினர். விவரம் தெரியாமல் விழித்தனர். அரசன் அறிவித்தபடி, அதே நேரத்தில் அமைச்சர்களும் அணுகினர்.

என்னைக் கபிலர் எடுத்து விழுங்குகிறார். இப்படியுமா கனவு இருக்கும்? அதிர்கிறது இதயம். என்ன செய்யலாம் என்றான் கணன்.

---

சூறாவளி கல்தூணைச் சுழற்றா; அதுபோல்
ஐம்புலநோய், அறிவின்ஆற்றலரைப் பற்றாவே.

நிலத்தில் இட்ட வித்து, சலத்தொடு சேரில், முதலில் முளைக்கும்; பின் மரமாகிக் கிளைக்கும். பிற நாட்டவர் இதய நிலத்தை அதிர வைத்தாய். அதனோடு, சாந்தர் கபிலர் சாப நீரும் சார்ந்தது. அன்று முளைத்த வினைமுளை, இன்று இவ் விபரீதத்தை எழுப்பியதோ என்னவோ! அவரோடு சமாதானம் ஆவதுவே நலம்! என்றார் முதல் அமைச்சர்.

அடுத்த அமைச்சன் சிரித்தான். அரசே! சுகத்தை அனுபவிக்கும் சூழ்நிலையை, பாவம் புண்ணியம் பார்த்து விரையப் படுத்துவது வீணர் செயல். கோபம் சாபம் என்று பயப்படுவது, கோழைகளின் கொள்கை. வீணான இந்த வறட்டு வேதாந்தம் வேண்டா. கொடியவன் கபிலனைக் கொன்றுவிடுவம். அதன்மூலம், தலையமைச்சர் போன்றார் அச்சப் பேயும் அகன்றுவிடும் என்றான்.

பாதக சாதகர் பலர், ஆம். அதுதான் சரி என்று ஆமோதித்தனர்.

தாயும் தந்தையும் விவரம் உணர்ந்தனர். விரைந்து வந்தனர். சிந்தாமணி வந்த நாள் முதல், ஏதோ விபரீதம் இருக்கிறது என்று எண்ணினோம். எண்ணியபடியே ஆயிற்று. கணா! சிந்தாமணியை இப்போதேனும் கபிலரிடம் கொடுத்துவிடு என்று மன்றாடினர்.

கணன், தந்தை சொல்லை மறுத்தான். முதலமைச்சர் சொற்களை வெறுத்தான். பெரும் படையுடன் புறப்பட்டான். அட அநியாயமே!

* * *

வைகறை நேரம். பரம கணபதிக்குக் கபிலர் பள்ளியெழுச்சி பாடுகிறார்.

சித்தி புத்தி கணபதி, கணனது படைப்பெருக்கம் கண்டு நகைமுகம் ஆயினர். சித்தி தேவியார் சீறினார்.

ஸ்வாமி! என்ன கூத்து இது? அன்பன் மேல் கணன், இவ்வளவு ஆவேசமாக வருகிறானே! உத்தரவு கொடும்! அவனை ஒடுக்கி விடுகிறேன்.

---

சில்லிக் குடத்துநீர் சிந்தா வியப்பதுபோல்,
அளவில்துளை உடலிலுயிர் நிற்பதுதான் ஆச்சரியம்.



உம். அப்படியே செய் என்றார் ஆனைமுக அத்தர்.

சிலிர்த்தது சித்தி தேவி திருமேனி. அதனிலிருந்து விறுவிறுத்த வீரர் பலர் வெளியாயினர். அவர்கள் கணன் படைகளை அழித்தனர். வீராவேசத்தொடு போரிட்ட அவன் பிள்ளைகளைச் சிறை பிடித்தனர். ஓங்காரரிடம் ஒப்படைத்தனர்.

கணன், இதுகண்டு கனன்றான். இதற்குக் காரணரான கபிலரை, வெட்டி வீழ்த்துகிறேன் என்று விரைந்தான். இவ்வளவும் அறியார் கபிலர்.

முன்னிளங் காலத்திலே பற்றினேன்; வெற்றி மீன்உயர்த்த
மன்னிளங் காமன்தன் மைத்துனனே! மணி நீலகண்டத்(து)
என்இளங் காய்களிறே! இமையோர் சிங்கமே! உமையாள்
தன்இளங் காதலனே! சரணம்உன் சரணங்களே!

என்று கனிந்து பாடியபடியே இருக்கிறார். ஆத்திரம் கொண்டு கணன் அணுகினன். தெய்வக் கணபதி, அவன் கண்கட்குத் தெரியவில்லை. கபிலர் தான் தெரிகிறார். வாளை ஓங்கினான். அதிர்ந்தது பூமி. குழம்பியது தர்மத்தின் குடல். ஆ! ஆ!!

விமல கணபதியின் மழுப்படை விரைந்தது. அநியாயக் கணன் தலை அறுந்து விழுந்தது. விவரம் உணர்ந்த அபிசித்து விரைந்தார். பக்தவற்சலா! ஞானநாயகா! ஆறுதல் கொள்க அத்தா என்று அலறினார்.

கண்விழித்த கபிலரிடம், சிந்தாமணியைத் தந்தார். அதன் பிறகு, விளைவைக் கபிலர் அறிந்தார். கஜானனா! இதன்மேல் வைத்த அபிமானத்தால், அடியேன் பட்ட பாடு போதும்! இது உமது திருமார்பில் இருக்கட்டும் என்று, சாந்தரான மூர்த்தியிடம் சமர்ப்பித்தார்.

மலர்ந்த திருமுகர் சுமுகர்; கபிலர் வழிபட்டவர் கபிலர்; விளங்கொளிச் சிந்தாமணி விநாயகர் என்று, அன்று முதல் இன்று வரை, போற்றி ஏரம்பரை உலகம் புகழ்கிறது.

வாழ்க கணபதி பக்தர்கள்!

ஓம்.

---

கலையளவு மதியொளி கவினும்; அதுபோல்தம்
நிலையளவு தர்மம் செய்வதுதான் நீதி.

# மனத்துக்கு உபதேசம்

(கி. வா. ஜ.)

நாம் எந்தச் செயலைச் செய்தாலும் மனத்தால் நினைத்த பிறகே செய்கிறோம். மனம் நல்லதை நினைத்தால் நல்லவற்றைச் செய்யலாம், அல்லாததை நினைத்தால் அல்லாததைச் செய்யலாம். இரண்டையும் கலந்து நினைப்பதனால் இரண்டு வகையான செயல்களையும் நாம் செய்கிறோம். எப்போதுமே தீய செயல்களைச் செய்பவர் யாரும் இல்லை. அப்படியே எப்போதுமே நற்செயல்களையே செய்பவர்களும் யாரும் இல்லை.

மனம் நல்லதையே நினைத்துப் பழகவேண்டும்; அதிகமாக நல்ல எண்ணங்களையே எண்ணவேண்டும்; அப்படி எண்ணுவது எளிதன்று. இயல்பாக ஆசையை வளர்க்கும் இயல்புடையது மனம். ஐந்து இந்திரியங்களால் உண்டாகும் இன்பத்தை மனம் அறிந்திருக்கிறது. மேன்மேலும் அத்தகைய இன்பங்களைப் பெறவேண்டுமென்ற எண்ணமே மனத்தில் இருக்கிறது. பொறியினால் நுகரும் இன்பத்துக்கு முடிவே இல்லை. காதினால் இசையைக் கேட்கும் அவா உண்டாகிறது, கேட்கிறோம். அப்போதைக்குத் திருப்தி உண்டாகிறது. ஆனால் மறுபடியும் கேட்கவேண்டுமென்ற ஆவல் எழுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளுக்கும் இரை போட்டுக் கொண்டே யிருக்கிறோம். ஆயினும் அவை, "இதுவரையில் நுகர்ந்தது போதும்; இனி வேண்டாம்" என்று திருப்தி அடைவதில்லை. அவை திருப்தி அடைவதில்லை என்று சொல்வதைவிட, அவற்றின் வழியே இன்பத்தை உணரும் மனம் மகிழ்ச்சி யடைவதில்லை என்று சொல்வதுதான் முறை. மேலும் மேலும் பொறிகளுக்கு இரை வேண்டுமென்ற நாட்டமே மனத்தில் இருக்கிறது.

---

மலையும் வில்லாகி வளைந்ததெனில், செல்வத்
தலையாயார் கர்வம் தலைசாயும் நாளும்வரும்.



அதனால் நம் வாழ்நாளில் பொறிகளுக்கு இரை போடுவதே பெரிய வேலையாகி விடுகிறது. வாழ்க்கை முழுவதுமே இதுதான் என்று சொல்லி விடலாம். ஆகவே மனம் நமக்கு வசப்பட்டால்தான் பொறிக்கு இரைதேடும் வேட்டை ஒழியும்.

பொறிகளாகிய ஐந்து வாயிலின் வழியே மனம் சென்று அவாவுகிறது. "மனமே, இந்த அவாவை ஒழித்து விடு" என்கிறார் அருணகிரியார்.

"எனக்கு இதுதானே வேலை? இதை விட்டு விட்டால் நான் வேறு என்ன செய்வது? பொறிகள் இருப்பதனால் தான் என்ன பயன்?" என்று மனம் கேட்கிறது.

அதற்குரிய விடையை அருணகிரியார் சொல்கிறார்.

(தொடரும்)

---

# திருப்பரங்குன்றம் திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
  உரைத்தி லன்பல மலர்கொடுன் அடியிணை
    உறப்ப ணிந்திலன் ஒருதவ மிலனுன தருள்மாறு
உளத்து ளன்பினர் உறைவிடம் அறிகிலன்
  விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
    உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன்
மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
  கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்
    கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செயல் ஒழிவற அழிவுறு
  கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
    கணத்தில் என்பய மறமயில் முதுகினில் வருவாயே

---

ஊமைக்குச் சாத்திரமும் குருடர்க்குத் தீபமும்போல்,
ஏமபொருள் ஏவல்இடம் அன்பிலருக்குக்கிருந்தென்னே?

வினைத்த லந்தனில் அலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெய் உகுதசை கழுகுண
விரித்த குஞ்சியர் எனுமவு ணரைஅமர் புரிவேலா!
மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே!
தினத்தி னஞ்சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொ தியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமு நிவரர்தொழ மகிழ்வோனே!
தெனத்த னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே!
(வினைத்தலந்தனில்......வேலா!)

(பதவுரை.) வினைத் தலந்தனில் அலகைகள் குதி கொள-கர்ம பூமியில் கொடிய பேய்கள் குதிபோட;

விழுக்கு உடைந்து மெய் உகு தசை கழுகு உண-கொழுப்பு உடைபட்டு, உடம்பிலிருந்து சிந்திய தசைகளை, கழுகுகள் (பறந்து வந்து, வாயில் லபக் லபக் என்று) விழுங்க;

விரித்த குஞ்சியர் எனும் அவுணரை அமர் புரிவேலா-தலைவிரி கோலர் எனப்பெறும் (ஆரவார) அசுரர்களை அடங்கும்படிச் செய்த ஞான சக்திதரா!;

(மிகுத்தபண்......உடையோனே!)

மிகுத்த பண்பயில் குயில் மொழி-மிகுதியான பண்களில் பயில்கின்ற குயில்போல் (கொஞ்சும்) மொழியினரும்;

அழகிய கொடிச்சி-அழகு மயமான பூங்கொடிபோன்ற (இடையினை யுடைய வருமான) வள்ளியாரது;

குங்கும முலைமுகடு உழும்-குங்குமக் குழம்பு பூசிய குயக் காம்புகள் வருடுகின்ற;

நறை விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே-பெருமணம் பரப்பும் சந்தனமும் கஸ்தூரியும் தோய்ந்த, (எடுப்பான) தோள்களாம் மலைகளை யுடையவனே!;

(தினத்தினம்......மகிழ்வோனே!)

---

நின்று பயன்தந்து நிலைசாய்ந்த வாழையின்கீழ்க்
கன்றும் வளர்ந்து. கனியுதவல் காணீரோ.



தினத்தினம் சதுர்மறை முனி-நாள்தோறும் நான்மறை அந்தணர் ஆகிய நான்முகர்;

முறை கொடு புனல் சொரிந்து அலர் பொதிய-ஆகம முறைப்படி நீர் கொண்டு அபிடேகித்து, (அளவிலாத) மலர்கள் போர்க்கும்படி அலங்கரித்து அர்ச்சிக்க;

விண்ணவரொடு சினத்தை நிந்தனை செயும் முநிவரர் தொழ மகிழ்வோனே-விண்ணவர்களுடன் வெகுளியை வெறுத்து விலக்கும் மாபெரும் தியான மேலோர் வணங்க மகிழ்பவனே!;

(தெனத்த......பெருமாளே!)

தென் அ..த-தென்னுடைய சிவனே!;

நந்தன என்று-(எந்நாட்டவர்க்கும்) இன்பச் சேயாக இருப்பவனே என்று;

வரி அளி-இசை பாடும் (இனிய) வண்டுகள்;

நறை தெவிட்ட அன்பொடு பருகும்-தேனைத் தெவிட்டும் அளவு பரிவொடு பருகும்;

திருப்பரங்கிரி தனில் உறை சரவண-திருப்பரங் குன்றத்தில் என்றும் இருக்கும் சரவணனே!;

பெருமாளே-பெரிய பொருள் எனப் பெறுபவனே!;

(உனைத்தினம்......தவமிலன்.)

உனைத் தினம் தொழுதிலன்-உன் முதன்மையை நாள் தோறும் (உணர்ந்து,) குவிந்த உளங்கொண்டு கும்பிட்டேன் இல்லை;

உனது இயல்பினை உரைத்திலன்-உனது (சொருப தடத்த) இயல்புகளை, (உள்ளது உள்ளவாறே) உரைத்தேனும் இல்லை;

பல மலர்கொடு உன் அடி இணை உறப் பணிந்திலன்-(காலை பகல் மாலைக்குரிய) பலவகையான மலர்களைப் பறித்து, உன் திருவடி நிழலில் இரண்டறக் கலக்கும் பாவிகத்துடன், (அர்ச்சித்துப்) பணிவு காட்டினேன் இல்லை;

ஒரு தவம் இலன்-ஒரு விரதமும் அனுட்டித்தேன் இல்லை;

(உனது அருள்......விழைகிலன்.)

---

கொடுத்திளைத்தார் தந்தை யென்று குமுறுமல்,
அடுத்து மைந்தர் நல்லறத்தை அன்பொடுசெய் வாரே!

உனது அருள் மாறா உளத்துள் அன்பினர் உறைவு இடம் மறிகிலன்-உனது பேரருள் நீங்காத இதய நடுவுள், (இன்ப) அன்பர்கள் (சொருப) உறைப்பேறி யிருக்கும் இடத்தில், (எனக்கும் இடம் கொடுங்கள் என்று) மறியல் செய்தேன் இல்லை.

விருப்பொடு உன் சிகரமும் வலம் வருகிலன்—

உன் மலைக் கோயில்களையும், (வாவும்) ஆர்வத்தொடு வலம் வந்தேன் இல்லை.

உவப்பொடு உன் புகழ் துதி செய விழைகிலன்-தியானிக்கத் தக்க திருப்புகழை, ஆர்வங் கொண்டு பாட ஆவலித்தேன் இல்லை;

(மலைபோலே......வருவாயே!)

மலை போலே கணைத்து எழும் பகடு அது பிடர் மிசை வரு-மலை போல் தோற்றங் காட்டி முழங்கிப் புறப்படும் எருமைக் கடாவின் முதுகில் ஏறி வரும்;

கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்-கருத்த நிறத்தரும் கடுஞ்சினத்தரும் ஆன காலனது ஏவலர்;

கதித்து அடர்ந்து எறி கயிறு அடு கதை கொடு பொரு போதே-ஆரவாரித்து, மிக நெருக்கமாக அணுகி, வீசும் பாசத்துடன், அழிவு செய்யும் தண்டு கொண்டு மோதும்போது;

கலக்குறும் செயல் ஒழிவற-கலங்கிக் குழம்பும் நிலை இல்லாது போக;

அழிவுறு கருத்து நைந்து அலமுறு பொழுதினில்-அழிந்த மனம், (மேலும்) நைந்து அலைமோதும் அச் சமயத்தில்;

கணத்தில் என் பயம் அற-கணப் பொழுதில் அடியேன் அச்சம் தீருமாறு;

மயில் முதுகினில் வருவாயே-(வாழ்விக்கும்) மயில்மேல் அமர்ந்து வந்தருள், (எ-று).

(விரிவுரை) கர்ம பூமி இது. இங்குள எவரும், பொல்லாத கன்மத்தைப் புசிக்க வந்தவர்கள். வினைப் போகமே தேகம். அனுபவித்துக் கழித்தபின், உடலை விட்டு உயிர் ஒதுங்கிவிடும். அகில உலகமும் இதனை

---

சூரியனைக் கண்டு சும்மா இருந்தகடல்,
கார்வான் மதிகண்டு, களித்தொலித்தல் காணுமோ?



அறிந்துளது; எனினும், ஊன்றி அதனை உணர்ந்திலது. உணர்ந்திருக்குமேல், அம்மவோ அம்ம! இதைவிட சிவ லோகம் வேறு இருக்க முடியுமா?

புண்ணிய தேவர்கள் செய்த பொல்லாத தீவினை, அளவிலா அசுர உரு ஆயின. ஆணவம் சூரனாகி அதிர்த்தது. மாயை சிங்க முகனாகி மடக்கியது. சஞ்சித வினை, யானைமுகம் கொண்டு பல காலமாகச் சதிக் கச்சேரி செய்தது.

அமரர் அலறினர். கடுந்தவ முனிவர் கலங்கினர். தேங்கி நின்றது தரும தேவதை. அது கண்ட விமல முருகா! நீ வெளிப்பட்டாய்! விண்ணவர்க்கும் முனிவர்கட்கும் விடுதலை! விடுதலை என்று, வீரநாதம் எழுப்பினை. அது கேட்டு, சீர்கெட்ட மும்மலம் சிரித்தது. அதன் அசட்டையை அறிந்து, வீறுமுகனாகி விறுவிறுத்தாய். நெடும் போர்க்களத்தில் நின்றாய். உன்னிலிருந்து, உத்தம ஞான சக்தி உதயம் செய்தது. அதன் ஒளியில், கடுமை இருள் கால் சாய்ந்தது. குரோதம் குன்றியது. மோகம் முடங்கியது. மதம் அதமாயது. ஆணவம் அடங்கியது. மாயை மடங்கியது.

தீய அவுணக் குடர்களை, பேய்கள் தின்று தீர்த்தன; அதனுடன், தெய் தெய் என்று குதித்துக் கும்மாளம் இட்டன. உருகி ஒழுகிய கொழுப்புகளை, தசைகளை கழுகுகள் உண்டு பசியாறின.

அவுணர்-தகாத உணவை உண்பவர்; கொன்றனர்; கொன்றதைத் தின்றனர்; அதனால் அவுணர் எனும் பெயரினராயினர். அவர்களால் இறந்தவைகள், அடுத்த பிறப்பில், கழுகுகளும் பேய்களுமாகிக் காத்திருந்தன. காலம் வந்தது. அன்று தம்மைத் தின்றாரை, இன்று அவைகள் தின்று தீர்த்தன.

"கொன்றனை யனைத்தும், அனைத்தும்நினைக் கொன்றன
தின்றனை யனைத்தும், அனைத்தும்நினைத் தின்றன."

இது பட்டினத்தடிகள் பாடல். இதற்கு இலக்கியம், அவுணர் வாழ்க்கைதான்.

---

இன்சொல்லால் அன்றி, இருநீர் வியன்உலகம்
வன்சொல்லால் என்றும் மகிழாதே.

திறுதிறு என்று நினைப்பது; குறுகுறுத்துச் சொற்களைக் கொட்டுவது; விறுவிறுத்து விரைவது; அமைதித் தேவதை அழுது கதற, ஆன்மா அலைமோத, வினை பாவம் தேடி விரைவது; இந்த அவசரத்தில், அவுணர்கட்குக் குடுமியை முடிபோடக்கூட நேரம் இருப்பதில்லை. அந்த 'விரித்த குஞ்சியர் எனும் அவுணரை', அழிப்புப் பெயரால், அமைதி பெறச் செய்தது உன் அருமை வேல். அதன் மூலம், வானகம் மண்ணகம் வாழ்ந்தது ஐய!

குயில்போல் குரலும் நிறமும் கொண்டவர் வள்ளியார். அவர் 'குணத்தில் சிறந்த மகராஜி'. இதயத்தால் வந்தித்த அந்த இச்சா சத்தியாரை, எதிர் வந்து சந்தித்தாய். இருமையில் ஒருமை நேர இணங்கினை. பேரமைதிக்கு உரிய பேறு இது.

படைப்புக் கடவுள், ஆகம முறைப்படி ஆராதிக்க, விண்ணவரும், சாந்தசில வித்தகரும், அவ்வமயம் தொண்டர்க்கு உரிய எளிமை தோன்றத் தொழுதல் செய்ய, அதுகண்டு ஆநந்தம் கொண்ட அத்தா!

உராய்ந்து செல்லும் எருமை. ஒதுங்கிச் செல்லும் பசுக் கூட்டம். பிள்ளையார் ஆணை யென்றால், உறுத்து வரும் தேள் ஒதுங்கிவிடும். இது, மக்கள் மனம்போல் அஃறிணையும் அமையும் நிலை. அருமை ஒழுக்கம் அழிந்தால், அஃறிணையும் மாறிவிடும். உயர்ந்த பண்டி வந்தாலும், ஒதுங்காது எருமை. எவரையும் பசுக்கள் இடித்துக் கொண்டு செல்லும். ஆணைக்குத் தேளும் பாம்பு அடங்காது. உயர்திணை மக்கள் இதனை உணர்ந்தால், உய்யுமே இந்த உலகம்.

தில்லை எல்லையில், அப்பர் ஸ்வாமிகள் அணுகினர். அவரைக் கண்டதும், "அறிவிற் பெரியவர் அணைகின்றார்"; வாருங்கள்! வந்து சேவியுங்கள்! பிறவிப்பிணி தீருங்கள்! என்று, சோலைக் குயில்கள் கூவின. அதுதானா!

"வந்தெதிர் அரகர என்றே
சிவமுன் பயில்மொழி பகர்கின் றனவளர்
சிறுமென் கிளியொடு சிறுபூவை"

என்று, அருமையாகச் சேக்கிழார் அறிவிக்கிறார்.

---

தென்றல் கண்டு மாமரம் திருந்துதளிர் காட்டும்
மன்றவருந்தும் சுழல்காற்று மருவுகின்ற போதே



அதுபோல், வானவரும் முனிவரும் வழிபடக் கண்ட வண்டுகள்,

தென்னாடுடைய சி[illegible]னே! [illegible]கும் இறைவா! என்று பண்ணமைத்[illegible] பாடுமேல், அதற்குப் பரிசாக, புதுத் தேனைச் சோலைகள் பொழிகின்றன. அத்தகைய தெய்வ வளம் உடையது திருப்பரங்குன்றம். அந்தக் குன்றில், மங்களமான சகர அனுபவம்; இன்ப அருளான ரகர அனுபவம்; அறக்கருணை மறக்கருணை யதிகரிக்கும் வகர ணகர வழக்காறுகள், என்றும் விளைய எழுந்தருளி யிருக்கும் பெரிய பொருளே! நின்னை, 'சரவணப் பெருமாளே!' என்று புனித உலகம் புகழ்கிறதே!

அகில உலகிற்கும் அமைதி அளித்தாய்; அன்பின் வள்ளியாரை அணைத்தாய். வாழ்வார் வழிபாட்டை மகிழ்ந்தாய். அஃறிணையையும் உய்வித்து, திருப்பரங்கிரியில் என்றும் பெருமாளாக எழுந்தருளி யிருக்கின்றாய்.

"உச்சிக் கூப்பிய கையினர்"

எனவுள பெருமக்களை, அருமைத் திருமுருகாற்றுப் படையில் அறிகிறோம்.

"சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்"

எனவுள பலரை, திருவாசகம் தெரிவிக்கின்றது.

"கைகாள்! கூப்பித் தொழீர்"

என அப்பர் பெருமானும் அறிவிக்கிறார். அந்த அறிவிப் பின்படி, உன்னைத் தக்க உன் முதன்மையை, தொழும்பின் நிலை தோன்றத் தொழுதல் வேண்டும்; அது செய்தேன் இல்லை.

"வாயே வாழ்த்து கண்டாய்"

என்றார் அப்பர்; மேலும்,

"நாவார நம்பனையே பாடப் பெற்றோம்"

என்றும் அறிவித்தார். நக்கனைப் பாடுவது நாக்கு; மற்ற நாக்கு, சாரம் அற்ற பிண்ணாக்கு. சொருப தடத்த நின்

---

நல்லோர் வரவால் நகைமுகம்கொண் டின்புறீஇ,
அல்லோர் வரவால் அழுங்குவார்—சான்றோர்.

இயல்புகளை, தூய்மை தோன்றச் சொல்வதே நாவின் தொழில்; நானோ,

'உனது இயல்பினை உரைத்திலன்.'

பூவால் அருச்சிப்பது புற வழிபாடு; கருவி கரணங்களை யெல்லாம், அருள் ஞானத் திருவடியில் இடுவது அக வழிபாடு. அதை எண்ணி, மலர்கொண்டு உன் திருவடியில் இடுகின்றபோது, இரு திருவடி நிழலில் உணர்வு இணைந்து விட வேண்டும். இச்சினைவில்,

"பல மலர்கொடுன் இணையடி உறப் பணிந்திலன்."

அழலிற் பட்ட மெழுகுபோல் அகமுருகி, அன்பு மயம் ஆகச் செயும் விரத சீலமெல்லாம், 'தவம்' எனப் பெறும்.

அத்தகைய 'ஒருதவம்' கூடச் செய்திலன்.

அகத்தமர்ந்த அன்பினர் அந்தரங்க நிலையினர்; இன்ப இதயத்தில் அவர்கள் என்னை எண்ணுவரேல், வளமார்ந்து வாழ்வு வளருமே! ஆ! அப் பேறும் பெற்றிலனே.

வாழ்விக்கும் ஆலயத்தை வலம் வரலாம். உன் புகழ் பாடி உவகை யடையலாம். ஒன்றுமே செய்திலனே! கடை நாளில் வரும் கால தூதர், கட்டுவரே! தண்டு கொண்டு தலையில் தட்டுவரே! எருமை மேல் வரும் எம தூதர் செயல் இதுவாயின், அடியேன் வெந்து மனம் நொந்து வீழ்வேன்; அச் சமயத்தில்,

வேலா! புயவரை யுடையோனே! மகிழ்வோனே! சரவண! பெருமாளே! மயில்மேல் வா ஐயா! வந்து என் பயம் தீர் ஐயா என்று, வெம்பிக் கதறி விண்ணப் பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்!

வாழிய அருணை முனிவரர்!!

ஓம்

---

எவ்வுறுப்பில் நோயெனினும் இருகண்ணீர் சிந்தல்போல்
எவ்வெவர்தம் நோயும் தம்நோய்போல் எண்ணுகவே!



# பாம்பனடிகளும் பன்னிரு கைப் பெருமானும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A., B.T.)

## சிதம்பரச் சிறப்பு

இயங்கு இயல் பொருள்களும் நிலையியல் பொருள்களும் நிறைந்தது இவ்வுலகம். இதனை இயக்கும் பேராற்றல் உடைய இறைவன், அசைவற நிற்கும் நிலையையும் விட்டு அசைந்து ஆடல் இயற்றுகிறான். ஏனெனில் அவனன்றி ஓர் அணுவும் அசையாது. கூத்தனார் கூத்து அண்டத்திலும் பிண்டத்திலும் நடைபெறுகின்றது. அண்டத்தில் நடைபெறுவது ஊன நடனம். பிண்டத்தில் நிகழ்வது ஞான நடனம். இவ்விரு நடனங்களையும் செய்யும் நாதர் எழுந்தருளும் தலம் சிதம்பரம். புறத்தால் இது சோழநாட்டிலுள்ள ஒரு தலத்தைக் குறிக்கும். சித்+அம்பரம் என்றால் ஞான+வெளி என்று பொருள். அகமுக நாட்டத் தனுபவிகளுக்கு சிதம்பரம், தகராகாசம் என்னும் இதய வெளியை நினைவூட்டும்.

## வேறு பெயர்களும் காரணமும்

சிதம்பரத்திற்கு மற்றொரு பெயர் தில்லை. ஆலமரங்கள் நிறைந்தது ஆலங்காடு. வாழை மரங்களால் பெயர் பெற்றது திருப்பைஞ்ஞீலி. வில்வ மரங்களால் சிறந்தது வில்வாரண்யம். மருத மரத்தால் உயர்ந்தது திருவிடைமருதூர். இவை போல்வன பிறவுமுள. எனவே தில்லை மரங்களுடையது தில்லைவனம்.

பெருமான் நடம் புரிதற்கு அமைந்த சபைகள் பொதுவாக ஐந்து என்றும், திருப்புத்தூர்ப் புராணத்தின்படி ஏழு என்றும் கூறப்படும். அவை:

1. பொற்சபை—சித்ம்பரம்
2. ரசித (வெள்ளி) சபை—மதுரை

---

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்,
எழுத்தறிவார் காணின் இலையாம்.

3. தாம்பிர சபை—திருநெல்வேலி
4. சித்திர சபை—திருக்குற்ருலம்
5. இரத்தின சபை—திருவாலங்காடு
6. சிற்சபை—திருப்புத்தூர்
7. சர்வ சம்மார சபை—மயானம் எனவாம்.

[இவைகளின் சிறப்பும் பிறவும் "அமிருதவசனி" இதழ்களில் வெளிவந்த 'நடமாடும் நம்பன்' என்ற கட்டுரைகளில் விவரித்துள்ளேன்.]

இவைகளில் பொற்சபை அல்லது பொன்னம்பலம் என்பது சிதம்பரமே. சிற்சபேசன் ஆடும் இந்தச் சபையைச் சோழன் பொன் ஓடுகளால் வேய்ந்து அழகுபடுத்திப் பணி செய்த வரலாறும் உண்டு. எனவே அது பொன்னம்பலமாயிற்று.

ஆடும் இடம், பலர் கூடும் இடம்—இவற்றிற்கு அம்பலம் என்பர். பெருமான் ஆடுவதாலும், தேவர் முனிவர் கூடுவதாலும் இவ்விடம் 'மன்று,' 'அம்பலம்' எனப்படும்.

வைணவர்கட்குப் பெரிய கோயில் என்பது திருவரங்கம். அதுபோல் சைவர்களாய நமக்குக் 'கோயில்' என அடைமொழி இன்றிக் கூறப்படுவது சிதம்பரமே. இதனுல்தான் நமது அப்பரடிகள் இங்குப் பாடியருளிய தாண்டகமும் 'கோயில் திருத்தாண்டகம்' எனப்படுகிறது.

விராட் புருடனது இதயமாக இத்தலம் உள்ளது. ஆகவே புண்டரீகபுரம், (புண்டரீகம்-(இதய) தாமரை.) தகராலயம், இதயாம்பரம் முதலிய பெயர்களும் உண்டு. ஞான நடனப்பிரான் எழுந்தருளி யுள்ளதால் ஞான (சித்) சபை சிற்சபை எனவும் படும். புலி முனிவரான வியாக்கிரபாதர் வழிபட்டதால் புலியூர் எனவும் கூறப்படும்.

## ஆடல் அனுபவம்

சிவனுர் இங்கு மாதொரு பாக நோக்கி ஆதியும் முடிவுமில்லாத அற்புதத் தனிக் கூத்து ஆடுகின்ருர். இதனைக் கண்ட அப்பமூர்த்திகள், நடங்காணப் பெறும் 'மனித்தப்

---

மாணிக்கம் கொண்டரவின் விடத்தை மறுப்பார்போல்
ஏனும் அறிவேற்றுத், தாழ்வுபிற எண்ணுரே.



பிறவியும் வேண்டுவதே' என்று வியந்தார். 'தில்லைச் சிற்றம் பலம் மேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே' என்ருர் ஆளுடைய பிள்ளை. 'ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள, ஆனந்த எல்லையில் தனிப் பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியுள் மலர்ந்தார்' ஆளுடைய நம்பிகள். திருவாசகப் பொருளாவான் 'தூசகல் அல்குல்வேய்த் தோளிடத்தவனே' என்று, அணிகொள் தில்லை அம்பல வாணன் அடியினில் மறைந்தார் ஆளுடைய அடிகள்.

"திரிபுர மெரிசெய்த கோவே நமோநம
சிவசிவ அரஹர தேவா நமோநம"

என அம்பலத்தாடியை அறுமுகச் செம்மலாய்த் தரிசித்து ஆனந்தங் கொண்டார் அருணகிரிநாதர். இவ்வித ஆடலின் சிறப்பைச் சேந்தனுர், தெய்வச் சேக்கிழார், குமரகுருபரர், உமாபதி சிவம், பட்டினத்தடிகள் முதலியோரும் பலவாறு அனுபவித்துள்ளனர்.

## பாம்பனடிகள் அநுபவம்

இத்தலத்தில் நடைபெறும் விழாக்களில் மிக மிகச் சிறப்பானவை ஆனித் திருமஞ்சனமும், மார்கழித் திருவாதிரை விழாவும் ஆம். நமது அடிகளார், ஆண்டுகள் தோறும் இத்தல வழிபாட்டை, இவ்விழாக் காலங்களில் செய்யும் நியமங் கொண்டிருந்தனர். இங்குள்ள நடேசனுர் தாம், தமது இதயத்தமர்ந்த குகேசனுர். ஆதலின் சிதம்பரம் தகராலயமாகவும், நடேசனுர் குகேசனுராகவும் கொண்டு, இவருற்ற அநுபவத்தை ஒரு பதிகமாகவே பாடியருளினுர். இப்பதிகத்தில் சிதம்பரத்தின் பலவேறு திருநாமங்களும், பெருமான் திருநடச் சிறப்பும், தமது உள்ளங் கவர்ந்த உண்மை அநுபவமும் காண வுள்ளன:

மேலும் இப்பதிகம் சென்ற சார்வரி 1900-இல் பாடப் பட்டது. இதை இந்தச் சார்வரி 1960-இல் படிப்பது பொருத்தமல்லவா?

---

எறும்பூரக் கல்குழியும் செய்திபோல், என்றும்
அறியும் விரததிடம், ஆசையினுல் கால்சாயும்.

"மட்டில் சிதம்பரம், தில்லை,
பொன்னம்பலம், மன்று, நடக்கோயில்,
தட்டில் நறும் புண்டரீகபுரம்,
தகராலயம், மாஇதய
இட்டர்தொழும் பிரமபுரம், சிற்சபை,
என்னும் புலியூரில்
திட்டை தரும்குகன் என்மனதைக்
கவர் நீர்மை அறியேனே."

"மாசறு வானவர் மானவ ரேத்திட மங்கைச் சிவகாமி
ஏசறு தூவுள நன்கு களிக்க இயங்கு கரம்வீசி
ஆசறும் ஓர்சிவ ஞானருள் நாடக மாடும் புலியூரில்
நேசம காகுகன் என்மன தைக்கவர் நீர்மை அறியேனே."

"கோவில் அருந்தவ மோங்கு பதஞ்சலி
கூர்த்த புலிக்காலன்
நாளு மகிழ்ந்திட ஞான மணங்கமழ் நாதர்
உயர் வேள்வி
யாளர் புகழ்ந்திடச் சங்கரர் நாடகம்
ஆடும் புலியூரில்
நீள அயில்குகன் என்மன தைக்கவர்
நீர்மை அறியேனே."
"பொன்றிக ழும்குய மான்மகள் வான்மகள்
புந்தி களி கூர
என்றுமி யங்குமெம் மான்புகழ்க் கோர்இறை
என்று துதிபாடு
இன்றவர் வெங்கவல் நீங்கி நலங்கொளக்
கேடில் புலியூரில்
நின்றருளுங் குகன் என்மனதைக் கவர்
நீர்மை அறியேனே."

—திருவலங்கல்.

(புகழ்க்கோன் - அருணகிரி)

---

வேம்புகனி காகம், மலர்விரும்பும் வண்டு;
ஆம்நாட்டம் மேலோர்க்கு, அழிநாட்டம் கீழோர்க்காம்.



"இதய பங்கய குகரமே குகை
என்பதாரிய பாடையில்
அதனு ளாயசி தம்ப ரத்தினில்
அமலஞான விண் மெய்ய னாய்ச்
சதத மும்சுக நடன மேபுரி
தம்பிரானையோர் குகனெனுக்
கதறும் மாமறை அவனைஅன்றி ஓர்
கடவுள் நாம்அறி யேமரோ."

—தகராலயரகசியம்

இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல், நம் அடிகளார் இத்தலத்தில் ஈடுபாடு பெற்றிருந்தமை, மேற்போந்த பாக்களினால் நன்கு விளங்குகின்றது. இதனால்தான் நமது திருமூலரும், "புளிக் கண்டவர்க்குப் புனல் ஊறுமாப்போல்" அருள்நடம் கண்டார்க்கு ஆனந்த மூற்றெடுக்கும் என்றனர்.

"கண்டவர்க்குப் போகமனம் கால்
எழா; கைதலைமேல்
கொண்டவர்க்கு மெய்அசைவு
கொள்ளாது"

என்றார் பிறரும்.

---

# உள்ளத்தே விளையும் கள்!

(அ. ராமமூர்த்தி.)

இவ்வுலகம் விரிந்து பரந்து கிடக்கின்றது. இதைப் போன்ற இன்னும் இரண்டு அண்டங்களும் உள்ளன என்று ஆன்றோர் கூறியுள்ளனர். இந்த மூன்று உலகங்களிலும் என்றும் உள்ளதாகிய பொருளையே அவர்கள் தேடினர். அவர்கள் தேடிய அப்பொருள் அவ்வுலகங்களிலும், அவற்றிற்கு அப்பாலும் இருப்பதாய் அவர்கள்

---

கல்லா அறிவின் கயவர்பால், கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நன்றாரே. (கனம் நன்றார்-பெருமையடையார்.)

கண்டனர். ஆம்! அந்தப் பரம்பொருள் உள்ளேயும் புறம்பேயும் வியாபித்திருப்பதை உணர்ந்தனர்.

கண் முன்னே தோற்றப்படும் இவ்வுலகப் பொருட்கள் அனைத்திலும் அப்பொருளின் தத்துவம் வேறுன்றியிருந்தாலும், அது புறம்பே உள்ளதுதான் என்றும் எண்ணினர். எப்படி எண்ணினாலும் அப்படி உணரப்படுவதற்கு அது இடந்தருவதையும் கண்டு வியந்தனர்.

அப்பொருளை உள்ளத்திலே நினைக்குந்தோறும், அடியார்களுக்கு மகிழ்ச்சி யுண்டாகிறது. சாதாரண மகிழ்வன்று. கள்ளைக் குடித்ததினா லேற்படக்கூடிய மாதிரியில் ஆனந்த வெறியே ஏற்படுகிறது. அந்த ஆனந்தத்தில் அவர்கள் பிறவற்றை யெல்லாம் மறந்து, அப்பொருளின் இன்பத்திலேயே கலந்து மகிழ்கிறார்கள்.

பெறுதற்கரிய அப் பேரானந்தம் அடியார்கள் உள்ளத்தே முற்றி விளைந்த ஒன்றாகும்.

ஆம். ஆனந்தம் ஏற்பட உள்ளம் முற்றி விளைய வேண்டும். உள்ளத் தெளிவே அதனுடைய விளைவுமாகும்.

எல்லோருக்கும் உள்ளம் தெளியாது. அடியார்கள்தான் அத் தெளிவைப் பெறுவர்.

குழம்பிய நீரைத் தெளிய வைக்காமல் குடிக்கக்கூடாது. இவ்வுலகம் பிரச்னைகளால் குழம்பிக் கிடக்கிறது. அக் குழப்பம் ஆண்டவனைச் சிந்தையில் நிறுத்தும் அடியார்களுக்கு எளிதில் தெளிந்து விடுகிறது. அத் தெளிவே ஞானமாகும்.

"தெளிவு வேண்டும்" என்ற எண்ணமேகூட தெளிவுக்கு வழி வகுத்துக் கொடுக்கும். குழப்பம் நீங்கிய நிலையில் எஞ்சியிருப்பது எதுவோ அதுவே தெளிவு.

உள்ளம் தெளிந்தால் உலகம் தெளியும். தெளிந்த உலகம் தெய்வ சந்நிதியே யன்றோ?

தெளிவைத் தவிர வேறு எதையும் தெய்வ சந்நிதியில் வேண்ட முடியாது. ஏனென்றால் வேறு எதுவும் அங்குக் கிடைக்காது!

---

விண்ணளவாக் காண விளங்கும் கதிரொளிபோல்,
எண்ணளவாம் தேகமல; இயல்புலமை தான்பெரிதே.



உலக சம்பந்தம் உள்ள வரையில் கூட்டம் வேண்டியதுதான். ஆனால் எத்தகைய கூட்டம் நமக்குத் தேவை?

அன்பர்களுடைய கூட்டம் வேண்டும். அன்பர்கள் எனப்படுவோர் தெளிவை வேண்டும் இறைவனது அடியார்கள் தாம். வேறு கூட்டத்தைச் சார்வோர் சேற்றையே பூசிக் கொள்வர்.

எதையும் வேண்டுவது மனமே. அம் மனத்தில் இறைவனுடைய திருக்கோலமே அன்பர்களுடையதா யிருக்கும். எனவே அவ்வன்பர்களுடைய கூட்டத்தையே நாம் கொள்ள வேண்டும்.

சமயமே அன்பர்களை நம்மோடு சேர்ப்பிக்கும். நமது சமயத்தில் இல்லாதது பரசமயத்தில் இல்லை. முற்றிலும் பரத்தை—அதாவது பரம்பொருளைக் காட்டுவது நமது சமயம்.

சமய ஈடுபாட்டினால் சத்சங்கம் கிடைக்கிறது. சத்சங்கத்தினால் சமய ஞானமும் வஸ்து விவேகமும் ஏற்படுகின்றன. பூரண விவேகத்தினால் அடைய வேண்டியதாகிற தெளிவு கிடைக்கிறது.

உள்ளத்தே விளையும் கள்ளே ஆனந்தம். அதுவே தெளிவு.

அத் தெளிவை விரும்பிய அடியார்களில் ஒருவர் அபிராமி பட்டர். அம்பிகையை வழிபட்டவர். அதாவது பரம்பொருளை அம்மையின் உருவத்திலே கண்டவர். அவர் உள்ளம் உருகி அம்பிகையாகிய அபிராமியிடம் பின் வருமாறு பாடுகிறார்.

"கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாத
அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே"

—(அபிராமி அந்தாதி)

---

மென்றுசுவை நாவிற்(கு) உதவும்வன் பற்கள்போல்
கைம்மா(று) உகவாமல் கற்றோர் உதவுவரே.

"மூன்று உலகங்களுக்குள்ளும் உள்ள பொருளே, நீ எப்பொருட்கும் புறம்பே உள்ளனை. உன்னைத் தேடும் அன்பர்களுடைய உள்ளத்தே முற்றி விளைந்த இன்ப மாகிய கள் நீ. இக் கள்ளினால் கிடைக்கும் மகிழ்ச்சி யானதும் நீயே. உன்னை என் மனத்தின்கண் கொண்டு வரும்போது வேறு சமயம் எதையும் நான் விரும்பேன். நின் திருக்கோலத்தை மனத்தில் கொள்ளாத அன்பர் களுடைய சேர்க்கையை நான் கொள்ள மாட்டேன்" என்று கூறுகிறார்.

இம்மாதிரி அடியார்களுடைய உள்ளத்திலே விளையும் கள் வெறியை யூட்டாது. நெறியையே ஊட்டும். போதை யைத் தராது. போதத்தையே தரும். கலப்பற்ற இன் பத்தை, தடையற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும்.

அடியார் உள்ளத்தில் விளையும் அக் கள், நமது உள் ளத்திலும் சுரக்கட்டும். வெறியற்ற நெறியைக் காட் டட்டும்!

---

# திருவெழுகூற்றிருக்கை

[அருணகிரிநாதர்]

## எழு கூற்றில் ஒரு கூறு

(இலந்தையடிக் கவுணிய வித்துவான்
இராஜ சிவ. சாம்பசிவ சர்மா)

## I

திரு+எழு+கூற்று+இருக்கை—நான்கு சொல் மூன்று சந்தியாய்ப் புணர்ந்த சொற்றொடர். திரு-செல்வம்; இங்கு அழியா மூரிச் செல்வமான முத்தி இன்பத்தைக் குறித்து நின்றது.

எழு—வினைப் பகுதி. முக்காலத்திற்கும் பொதுவாய்க் கூற்று என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவி வினைத்தொகை யாக நின்றது. எழுந்த, எழுகின்ற, எழும் கூற்று என விரிக்க.

---

காய்தனிலும் வாழைபயன், கனிந்தஎட்டி போல்பலரால்;
காய்வினிலும் ஈவர், சிலர் கனிந்திருந்தும் லோபியரே.



கூற்று - கூறப்படுவஃது; சொல். இருக்கை - இருப்பிடம். எனவே, முத்தி இன்பத்தை எழுப்பும் சொற்களின் இருப் பிடம் என்பது திருவெழுகூற்றிருக்கை என்பதின் திரண்ட பொருள்.

திருவெழுகூற்றிருக்கை என்பது தமிழ்மொழியில் வழங் கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது எண்ணலங்காரம் பொருந்த விளங்கும்.

திரு - இலக்குமி ஆதலின், இலக்குமி நடமாடவும் வீட் டின்பம் தரவும் அமைந்ததான பதிகம் என்க.

திருவெழுகூற் றிருக்கைக்குரிய இலக்கணத்தை மாற னலங்காரம் என்னும் அலங்கார நூலின் ஆசிரியரான திருக் குருகைப் பெருமாள் கவிராயர் அவர்கள், தம் நூலில் சொல்லணி இயலில் 297-வது சூத்திரத்தில் கூறியுள்ளார்.

"ஒன்று முதலா வோரே ழீறுச்
சென்றவெண் ணீரேழ் நிலந்தொறுந் திரிதர
வெண்ணுவ தொன்றும் எழுகூற் றிருக்கை"

என்று கூறுகிறார்.

செய்யுளகத்து எண்ணப்பட்ட ஒன்றென்னு மெண் ணென்று முதலாக, வோரேழீறாக நிகழ்ந்த எண்களைப் பதினாலு நிலந்தொறு மீள வெண்ணுவ தொன்றுகும் எழுகூற் றிருக்கை.

தேர் போன்று அமைப்பது இரதபந்தம் எனப்படும். இரதத்தில் பீடத்தின்மேற் கட்டப்படும் விமானத்தில் நடுப் பகுதி நேராக ஏழறைகளைக் கொண்டதாய், இருபக்கங் களிலும் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று என ஏழு அடுக்குகளைக் கொண்டதாய்க் கட்டங் கள் அமைத்துக் காணில், தேரின் மேற்பகுதி அலங்காரமான விமானம் போன்றிருக்கும்.

திருஞானசம்பந்தர் வாக்கின் மன்னரை வழியனுப்பிய பின், சீகாழிப் பதியில் வேதவடிவான திருத்தோணியில் எழுந் தருளி யிருந்த விண்ணவர் பெருமானைச் செந்தமிழ்ப் பாமாலை விகற்பங்களால் பாடத் திருவுளங்கொண்டு, மொழி

---

கடவுள் திருவடியிற் கருத்திருத்தும் ஞானிகள்தாம்,
உடற்குவரும் இடர்கண் டுள்ளம்உடை வாரோ?

மாற்று, மாலை மாற்று, திருவியமகம், ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை முதலானவற்றை அருளிச் செய்தார். எனவே, சொல்லலங்காரம் பாடப்படுவதாகும் என்பது விளங்கும்.

## II

திருவெழுகூற்றிருக்கை என்னும் பிரபந்தம் பாடியோர் நால்வராவர்.

1. திருஞானசம்பந்தப் பெருமானார் திருவாய்மலர்ந் தருளியது திருவெழுகூற்றிருக்கை. இது சைவத் திருமுறைகளில் முதல் திருமுறையில் அமைந்துள்ளது.
2. நக்கீரதேவ நாயனார் என்பார் இயற்றி யருளிய திருவெழுகூற்றிருக்கை, சைவத் திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.
3. வைணவ சமயத்தின் சிறந்த நூலான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கை யாழ்வார் என்பார் இயற்றி யருளிய திருவெழுக்கூற்றிருக்கை ஒன்று உள்ளது.
4. திருப்புகழ் பாடி யருளிய அருணகிரிநாதர் பாடி யருளிய திருவெழுகூற்றிருக்கை.

திருஞானசம்பந்தப் பெருமான் திருவெழுகூற்றிருக்கை பாடியதற்கு ஒரு வரலாறு உண்டு. ஞானசம்பந்தப் பெருந்தகை மொழிமாற்று முதல், சக்கரம் ஆதியாகச் சாற்றிய பதிகங்கள், "மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற" என்று கூறியிருப்பது இங்கு உணரத்தக்கது. என்னையோ எனில், இச் செய்யுள் விகற்பப் பதிகங்கள் எல்லாம் சொல்லலங்காரம் படமட்டும் சொன்னவை யல்ல. இவை மூல இலக்கியங்களாகவும், எல்லாப் பொருள்களையும் தம்மகத்தே கொண்டிருப்பன என்பதும் ஓர்ந்துணரத்தக்கது. அதனால் திருவெழுகூற்றிருக்கை பாடற்குக் காரணமாக ஒரு வரலாறும் எழுந்தது.

திருஞானசம்பந்தர் தம் பரஞானப் பேரறிவாலும் ஓதாதுணர்ந்த (உம்பர் தம்பிரான்) அருளாலும் திருவாய்மலர்ந் தருளிவந்த தெய்வச் செந்தமிழ்ப் பதிகங்களை யெல்லாம், அப்பெருமானாரின் தந்தையாகும் புண்ணியசீலரான சிவபாத

---

வெள்ளத்தின் முன்அணை வேயார்போல், காலன்
கொள்ளுமுன் அறம்செயாது பின்னர்க் குமுறுவதோ?



விருதயர் நாள்தோறும் ஓதிப் பயின்று வந்தார். சம்பந்தப் பெருமான் நாள்தோறும் பதிகங்கள் பாடப் பதிகங்கள் பெருகி வருதலால், முற்றும் பயிலப் பெறாது தந்தையார் வருந்தலானார். அதனை யுணர்ந்த சம்பந்தப் பெருமான், தந்தை மனக்கிலேசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, எந்த ஒரு பதிகத்தை விதிப்படி ஓதினால் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பயனைப் பெறலாகுமோ, அத்தகைய சீர்த்தி வாய்ந்த பீடுறு பெரும் பதிகமாய் விளங்கும் 'திருவெழுகூற்றிருக்கை' என்னும் பதிகத்தைப் பாடியருளினார். இக் குறிப்புப் பொருளை யுணர்த்தவே சேக்கிழார் பெருமான்,

"எந்தைக்கு எழுகூற்றிருக்கை" என்று கூறியருளினார். 'எந்தை' என்ற சொல், யாவர்க்கும் தந்தையாகிய திருத்தோணியப்பரான சிவபெருமானைக் குறிக்குமேனும், மாலைமாற்று முதல் சக்கரம் ஈறாகக் கூறிய செய்யுள் விகற்பப் பதிகங்கட்கு இத்தகைய அடைமொழி கொடாது, திருவெழுகூற்றிருக்கைக்கு மட்டும் இத்தகைய அடைமொழி கொடுத்திருத்தலால், 'எந்தைக்கு' என்பதற்கு எம் தந்தைக்கு ஏற்பட்டுள்ள மனக்கவலையை மாற்றும் பொருட்டு அவருக்காகப் பாடி யருளியதெனக் கொள்வதால் குற்றமில்லை. மற்று, சிறப்புடையதும், குறிப்பா யுணர்த்தியதும், ஏற்புடையதும், தேவாரம் முழுவதையும் ஓதியுணர மாட்டாதார் கைக்கொண்டொழுக வேண்டிய நெறியைக் காண்பித்ததுமாகுமன்றோ? மற்றும் ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய பதிகங்கள் யாவும் கிடைத்தில. சிலவே கிடைத்துள்ளன. கிடைக்கப் பெறாதனவற்றுள் எத்தகைய விழுப் பொருள்கள் இருந்தனவோ! அவற்றை ஓதியுணர்ந்து உறுபயன் கொள்ளும் பேற்றினை யிழந்தோமே என்று உளங்கவன்றுறையும் மெய்யன்பர்கட்குத் திருவெழுகூற்றிருக்கை என்னும் இந்த ஒரு பதிகத்தை முறைப்படி பாராயணம் செய்தலால், அப்பேற்றினைப் பெறலாம் என்னும் உறுதி தோன்றி, உய்யும் நெறிக்கு உறுதுணையு மாகின்றது. எனவே, தேவாரம் முழுமையும் ஓதிய பயனைத் திருவெழு கூற்றிருக்கை என்ற பதிகம் ஒன்றே விதிப்படி ஓதின் தரும் என்பது பெற்றோம்.

---

உடல்மேல் விழும்அடியைத் தடுக்கவிரை கைகள்போல்,
திடஅறிஞர் பிறர்துயரைத் தீர்க்கப்பின் வாங்காரே.

# III

முருகப்பெருமானிடம் பக்தி பூண்டொழுகும் மெய்யடியார்கள் யாவரும், அருணை முனிவரான அருணகிரிநாதரை அறியாதவர் யாரே! அருணகிரிநாதர் முருகப் பெருமானின் அருளையும், காட்சியையும், உபதேசத்தையும், செபமாலையும் பெற்றவர். திருவருணை, வயலூர், திருத்தணி, திருச்செந்தில், பரங்குன்றம், குருமலை எனும் திருவேரகம், திருச்செங்கோடு, திருப்பழநி முதலான தலங்களைப் பாடுங்கால், உள்ளம் உருகி நைந்து தம் வசம் இழந்து பாடுகின்றார். அவரே சந்தக் கவிக்குத் தந்தையாவர். திருப்புகழைக் கிடைத்துள்ள வரையில் பார்க்குங்கால் எவ்வளவு சந்த பேதங்கள் காணப்படுகின்றன. இத்தகைய சந்த பேதங்களைத் தோற்றுவித்து முருகனது திருவருட்டிறனைச் செந்தமிழ்த் தொடையால் பாடுதல் என்பது, கந்தனது திருவருள் பூரணமாகப் பெற்றிருந்தாலன்றி இயல்வதாமோ! மற்றும் அவர் வாக்கு அருள் வாக்கு, வேத வாக்கு எனலாம். அதனாலன்றோ 'வாக்கிற்கு அருணகிரி' என்றார்.

அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப்புகழ் பாடினர் என்பது, 'எம்மருண கிரிநாதரோது பதினாறாயிரந் திருப்புகழ் அமுதுமே" என்று திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழில் மார்க்க சகாயதேவர் கூறியுள்ளார். திருத்தணிகை யுலாவில் கந்தப்பையர்,

> "அருணகிரி நாத னறைந்த பதினாறு
> யிரங்கவிதை யென்றுலகில் யாரும்—உரைபுகலும்
> தெய்வத் திருப்புகழ்"

என்று கூறுகின்றார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் பாடிய பதிகங்கள் பதினாறாயிரம் என்பர் ஆன்றோர். அவற்றுள் இப்பொழுது கிடைத்திருப்பன முந்நூற்றெண்பத்து மூன்று பதிகங்களே. இருவரும் பாடல் தொகையளவால் ஒப்புமை யுடையராவர்.

அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ்ப் பாடல்கள் பதினாறாயிரத்தில் இப்பொழுது கிடைத்திருப்பன 1304 திருப்புகழ்ப் பாடல்களே.

---

அறியாக் குருட்டுக்கண் அஞ்சாது இருள்; அதுபோல்
அறியார் பழிபாவம் அறிவில்லா ரென்பவரே.



அருணை முனிவரது திருப்புகழினை ஓதுங்கால் அவர் திருஞானசம்பந்தரிடம் கொண்டிருந்த பக்தி மேம்பாடு இனிது விளங்குகிறது. சமயகுரவர் நால்வரில் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர் திருஞானசம்பந்த சுவாமிகளே ஆவர். அருணகிரிநாதர் சம்பந்தப் பெருந்தகையின் அடிச்சுவட்டைப் பின்பற்றி யொழுகப் பேரார்வம் கொண்டவர். அருணகிரிநாதருக்குச் சம்பந்த சுவாமிகள் முருகப் பிரானின் திருவவதாரமே என்ற கொள்கை உள்ளத்தில் வேரூன்றி நின்றது. அதனைத் தாம் பாடி யருளிய பல திருப்புகழ் பாடல்களில் சம்பந்தர் அருட்செயலை முருகன் அருட்செயலாகவே கொண்டு கூறியுள்ளார். எனவே அப்பிரான் முருகன் வேறு சம்பந்தர் வேறு எனக் கருதியவர் அல்லர். அதனாலன்றோ,

> "பூமியதனிற் பிரபுவான
> புகலியில்வித் தகர்போல
> அமிர்தகவித் தொடைபாட
> அடிமைதனக் கருள்வாயே"

என்று ரசதகிரி (வெள்ளியங்கிரி)ப் பெருமாளை வேண்டுகின்றார். அங்ஙனம் வேண்டிய அருணகிரிநாதர், அப்பரும் சுந்தரரும் பாடாது சம்பந்தர் மட்டும் பாடி யருளிய திருவெழுகூற்றிருக்கை என்ற பதிகத்தை முருகவேளுக்குத் தாமும் பாடியருளினார். எனவே, எப்படிச் சம்பந்தர் பாடிய திருவெழுகூற்றிருக்கையை முறைப்படி ஓதினால் தேவாரம் முழுமையும் ஓதிய பயனைப் பெறலாகுமோ, அதுவேபோல் அருணகிரிப் பெருந்தகை பாடி யருளிய முருகவேளுக்குரிய திருவெழுகூற்றிருக்கையைப் பாடினால், திருப்புகழ் முழுவதையும் ஓதிய பயனை உறுதியாகப் பெறலாம் என்பது உணரலாகும்.

மற்றும் ஒரு சம்பந்தமும் உள்ளது. சம்பந்தப் பெருந்தகை தம் திருவெழுகூற்றிருக்கையில் கணேசனையும் முருகனையும் தல விசேடம் குறிக்கும் முகத்தால் குறித்துள்ளார்.

---

பால்பழ வேட்கையர்தாம் காடியுண்ணப் பார்ப்பாரோ
மேல்மக்கள் கற்றவரை யன்றியயல் மேவாரே!

'அறுமத முரலும் வேணுபுரம் விரும்பினை'

என்னுமிடத்துச் சிவபெருமான் கசமுகனைக் கொன்று வேணு என்னும் இந்திரனுக்கு இந்திர பதவியை அளிக்குமாறு கட்டளையிட்ட செய்தியையும்,

'இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை'

என்பதால் அமராபதியைச் சூரபதுமனாகிய அசுரர் கவர்ந்து இந்திரன் முதலானவர்கட்கு இடுக்கண் விளைத்தபொழுது சிவபெருமான் சுப்பிரமணியரைத் திருவுளத்துக் கொண்டு அழைத்து, சூரபதுமாவை வெற்றி கொண்டு, தேவர்களைத் தேவருலகில் வாழுமாறு செய்து வருமாறு கட்டளை யிட்டருளியதைக் குறிப்பிட்டுக் கூறியதையும் குறித்துள்ளார். எனவே முருகன் அருட் செயலும் சம்பந்தப் பெருந்தகையால் திருவெழுகூற்றிருக்கைப் பதிகத்தில் குறிக்கப்பட்டதே. ஆகவே, அதனை மனத்துட் கொண்ட அருணகிரிநாதரும், முருகப்பெருமான் மீது திருவெழுகூற்றிருக்கை பாட வேண்டும் என்று ஆர்வம் கொண்டார் எனில் வியப்பொன்று மில்லை.

## IV

அருணை யண்ணலின் திருவெழுகூற்றிருக்கையைக் காண்போம் :

ஓருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகை தோற்றத் திருமர பெய்தி
ஒன்றுயொன் றி யிருவரிற் றேன்றி
மூவா தாயினை; 1
இருபிறப் பாளரி னொருவ னாயினை; 2
ஓராச் செய்கையி னிருமையின் முன்னாள்
நான்முகன் குடுமி இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள் வேண்ட
ஒருசிறை விடுத்தனை; 3
ஒருநொடி யதனில் இருசிறை மயிலின்
முந்நீர் உடுத்த நானிலம் அஞ்சநீ
வலஞ் செய்தனை; 4

---

தன்னுயர்வு பேசித் தாழ்விந்த மாமலைபோல்
தன்பெருமை கூறுவான், தாழ்வடைவான் மேலோர்முன்



நால்வகை மருப்பின் மும்மதத் திருசெவி
ஒருகைப் பொருப்பன் மகளை வேட்டனை;

ஒருவனாக வடிவினி லிருவகைத் தாகிய
மும்மதன் தனக்கு மூத்தோ னாகி
நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள்
அறுகு சூடிக் கிளையோ னாயினை; 6

ஐந்தெழுத் ததனில் நான்மறை யுணர்த்து
முக்கட் சுடரினை இருவினை மருந்துக்
கொருகுரு வாயினை; 7

ஒருநாள் உமையிரு முலைப்பா லருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுக னிவனென
எழில்தரு மழகுடன் கழுமலத் துதித்தனை; 8

அறுமீன் பயந்தனை; 9

ஐந்தரு வேந்தன் 10

நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்
டன்றி லங்கிரி யிருபிள வாக
ஒருவேல் விடுத்தனை. 11

காவிரி வடகரை மேவிய குருகிரி இருந்த
ஆறெழுத் தந்தணர் அடியிணை போற்ற
ஏரகத் திறைவ னெனஇருந் தனையே. 12

இத்திருவெழுகூற்றிருக்கையின் திரண்ட பொருளாவது :

1. ஒரு பொருளாகிய பிரணவம் ஆகும் முழு முதலின் ஒரு வகையான தோற்றத்தில், (ஐந்து முகங்களோடு அதோ முகம் சேர்ந்த சிவத்தின் தோற்றத்தில் பார்வதியின் முகமும் சேர எனலுமாம்.)

சக்தி, சிவம் என இரண்டின் இலக்கணமும் கொண்டு, தான் ஓர் உருவாக அமைந்து, அச் சிவசக்திகளிடமிருந்து தோன்றி மூப்பில்லாமல் என்றும் இளையனாய் விளங்குகின்றவன் ஆயினை.

---

நல்லார்தம் கேண்மை, நாடோறும் நன்றாகும்;
அல்லார் செயும்கேண்மை ஆகாதே.

2. இரு பிறப்பாளரான அந்தணர் குலத்தில் ஒப்பில்லாதவன் ஆயினை.

[அந்தணர் வெறுக்கை.]

3. பிரணவத்தின் பொருளை ஓர்ந்து அறியாமல், விழித்த காரணத்தால் பெருமையுடன் (இருமையின்) முன்பு ஒரு நாள், பிரமனது குடுமியை இமைப்பில் களைந்து, அரன், அரி, இந்திரன் (முருகு) மூவரும் உன்னை யடைந்து வேண்ட, நீ சிறையிலிட்ட பிரமனைச் சிறைவீடு செய்தனை.

அ. புள்ளணி நீள்கொடிச் செல்வன்.

ஆ. மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வன்.

இ. யானை எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வன்.

4. ஒரு நொடிப் பொழுதிலே (இரு) பெரிய சிறகுகளை யுடைய மயிலின் மீது ஏறி கடலை (முந்நீர்) ஆடையாக உடுத்த பூமியை (நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) உலகமஞ்ச வலமாகச் சுற்றி வந்தனை.

5. நான்கு தந்தங்களையும் மூன்று மதத்தையும், இரண்டு காதுகளையும் ஒப்பற்ற துதிக்கை என்னும் ஒரு கையையுமுடைய மலையை யொத்த ஐராவதத்தையுடைய இந்திரன் மகளான தேவசேனையை மணம் செய்து கொண்டனை.

6. ஒருவகையான யானை வடிவில் இரண்டு வகைத்தான மழகளிறு, முதுகளிறு, (இளமையான களிறு, கிழக் களிறு) எனும் இரண்டு வகையாகவும் வரவல்ல மும்மதத்துடன் வந்த யானைக்கு மூத்தவனாகி விளங்கி, தொங்கும் துதிக்கையை உடைய முகம் பெற்ற ஐங்கரக் கடவுளான அறுகு சூடிய கணபதிக்குத் தம்பியாகிய இளையவன் ஆயினை.

[தினைப்புனத்தில் வள்ளி மணத்தின்போது முதலில் வந்தவன் முருகன், பின் வந்தோன் கணபதி. ஆதலில் மூத்தோன் முருகனன்.

---

கற்றறியார் செய்யும் கடுநட்பும், தாம்கூடி
உற்றுழியும், தீமையன்றி உண்மைபயன் நேராவே.



"முருகோட்டந் தரப்பாயும் மும்மதமு
மூற்றெடுப்ப முருவிற் கோட்டு
ஒருகோட்டு மழகளிற்றை இருகோட்டு
முதுகளிரா வுலவக் காட்டிப்
பருகோட்டு நறைவேட்டுப் பைங்கோட்டுத்
தினைப்புனத்தின் பரண்மேற் கொண்டு
குருகோட்டும் பெடைமணந்த குமரகோட் டத்தடிகள்
குலைத்தாள் போற்றி."

7. ஓம் நமசிவாய என்னும் ஐந்தக்கர மூலமாக, நான்கு வேதங்களும் கடவுளும் இவரே என்னும் மூன்று கண்களை யுடைய சுடர் போன்றவனும், நல்வினை தீவினை எனும் இரு வினைகளையும் நீக்கும் மருந்து போன்றவனும் ஆன சிவபெருமானுக்கு (ஒரு) ஒப்பற்ற குருவாக ஆயினை.

8. முன் ஒரு நாள் உமாதேவியாரின் (இரு) பெருமையான முலைப்பாலை உண்டு, இயல், இசை, நாடகம் என்ற (மூன்றான) முத்தமிழிலும் வல்லவனாய், ஆசு, மதுர, வித்தார, சித்திரம் என்னும் நான்குவகைக் கவிகளையும் பாடுதலில் கவியரசனாய், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்திந்திரியங்களுக்கும் உரிய உணர்ச்சிகட்கு உரியவனாய், (ஐம்புலன் அடக்கியவனாய், வென்றவனாய்) ஆறு முகங்களை யுடைய 'சண்முக வடிவினன் இவன்' என்று யாவரும் வியந்து புகழ்ந்து கூறும்படி, இளமை (எழில்) விளங்கும் அழகுடனே சீகாழி எனும் கழுமலப் பதியில் திருஞான சம்பந்தனாய்த் தோன்றினை.

9. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையினால் ஆறு நட்சத்திரங்களும் பெற்ற பெருமகனாக விளங்கினை.

10. சந்தானம், அரிச்சந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐந்து வகையான தெய்வத் தருக்களைக் கொண்ட பொன்னுலகம் எனும் தேவலோகத்திற்கு அரசனை இந்திரனாக விளங்கினை.

---

பொன்னுடையார் வேந்தர், புலையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றெவ்வார்.

இறைவன் எங்கும் உளன் எனில் எல்லாப் பொருள் களாகவும் விளங்குகின்ருன் என்பதும், எல்லாவற்றையும் இயக்குகின்ருன் என்பதும் மெய்ஞ்ஞானியர் கண்ட உண்மை. கற்றேரைக்கும், புற்றரவுக்கும் உணவளிக்கின்றவன் இறைவன்.

இத்தகைய இறைவன் எண்குணங்களை உடையவனுய் இருப்பினும், பேரருளுடைமை ஆகிய அலுப்தசக்தியின் வடிவ மாகவே உளன். அறக் கடலாக விளங்கும் ஆண்டவன், அணைத்தையும் அளித்துக் காக்கின்ருன். இவ்வுண்மையை உணரும் அறிஞர்கட்கு, ஞானியர்கட்கு மிக எளியனுக விளங்குகின்ருன். அவனை அன்பர்கள் அச்சுதன் என அழைப்பர்.

அன்பே உருவானவன் அச்சுதன். அவனே அயன், மால், ருத்ரன் என அழைக்கப்படுகிருன். சுதன் என்ற வார்த் தைக்கு மகன், பிறந்தவன், சிறியவன் என்பது பொருள். அச்சுதன் என்ருல் அவன் யாருக்கும் மகனல்லன். பிறவி யற்றவன், பெரியோனென்றும் சிறியோனென்றும் வரை யறுக்கப்படாதவன்.என்றென்றும் அழிவற்றவன் என்பதாம்.

அகண்ட பரம் பொருளாகிய இறைவன் தன்னை அணுகுவோர் எவராயினும் ஆதரித்தருள் புரியும் தன்மை யுடையவன்.

ஆலயங்களைச் சுற்றி வந்தும், ஆடம்பரமான பூஜைகள் செய்தும், ஆண்டவனை வழிபடுவோர்க்குள்ள தூரத்தைக் காட்டிலும் தம்மிடமே இறைவனைக் காணும் பண்பு படைத் தோருக்கு, மிக மிக அருகில் இறைவன் வதிகின்ருன். அவர் களின் துன்பங்களை நீக்குகின்ருன்.

இறைவன் எங்கும் உளன் என்று உபதேசித்த மைந்தன் பிரகலாதனின் உரைகளை மதியாமல் அஞ்ஞானத்தில் மூழ்கிய அரக்கன் இரண்யகசிபு, அகந்தையால் அச்சுதனை இகழ்ந்து பேசி அழிக்கப்பட்டான். தன்னிடமே இறைவனைக் கண்ட ஞானியாகிய பிரகலாதன் காப்பாற்றப் பட்டான்.

அனுதையாக, அபலையாக விடப்பட்ட திரௌபதி இறைவனை நினைந்து ஓலமிட்டாள். வைகுந்த வாசா!

---

நெல்லிற்கே அன்றிநீர் நெருஞ்சிமுட்குப் பாய்ச்சார்போல்
நல்லவர்க்கே அன்றி நலஞ்செய்யார் தக்கோரே.



துவாரகை வாசா! கண்ணு! பரமபத நாதா! என அலறியும், பராமுகமா யிருந்த இறைவன், திரௌபதி இருதய கமல வாசா! எனக் கூக்குரலிட்டவுடனே கருணை கூர்ந்தான். உடைகள் பெருகின. மானம் நிலைத்தது.

பாண்டவரின் இளையோனும் பரமஞானியுமாகிய சகாதேவனை இறைவன் சோதிக்கப் பல்லாயிரம் தோற்றங் களாய் நின்றபோது, அவன் தன்னிடமும் இறைவன் உளனென்றறிந்து தன் மூச்சையே அடக்கினன். இறைவன் தன் நிலை தடுமாறி தன்னை சகாதேவன் வெல்ல இயலுமென ஒப்புக் கொண்டனன்.

பூவுலக மாயையில் சிக்கி உழலத் தலைப்படும் சுந்தரரை ஆட்கொண்டான் இறைவன். அப்போது சுந்தரர் அவனது அருளை வியந்து பின் வருமாறு போற்றுகிருர்.

**ஊனுய், உயிர்ஆனுய்! உடல் ஆனுய்! உலகானுய்**
**வானுய், நிலன் ஆனுய்! கடல் ஆனுய்! மலைஆனுய்!**
... ... ... ... ...

கற்பாறையில் பிணைக்கப்பட்டு கடலில் எறியப்பட்ட திருநாவுக்கரசர், எங்கும் நிறைந்த இறைவன் தம்மைக் காப்பானென உறுதி கொண்டார். அவ்வாறே இறைவன் அவரைக் காப்பாற்றிக் கரையேற்றினன். அவர் நின்ற திருத்தாண்டகத்தில் இறைவனைப் பின் வருமாறு குறிப்பிடு கிருர்.

**தீயாகி நீராகி, திண்மை ஆகி**
**திசை ஆகி, அத்திசைக்கோர் தெய்வம் ஆகி**
**தாயாகித் தந்தையாய் சார்வும் ஆகி**
**தாரகையும் ஞாயிறும் தண்மதியும் ஆகி**
**காயாகி, பழமாகி, பழத்தில் நின்ற**
**இரதங்கள் நுகர்வானும் தானே ஆகி**
**நீயாகி நானுகி நேர்மை ஆகி**
**நெடும் சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே.**

பாண்டிய நாட்டின் தலை நகராகிய மதுரையில் வைகை நதி வெள்ளப் பெருக்கெடுத்து சீறிப் பிரவேசித்தது. ஏனெனில் மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனுல் தண்டிக்கப்பட்டு சுடும் மணலில் நிறுத்தப்பட்டபோது அவர்

கொடுந்துன்பத்திற்கு வருந்தாமல் அத்துன்பம் ஆண்டவனைச் சார்ந்தது எனக் கருதினார். அன்பர்களை ஆதரிக்கும் அருளாளனான இறைவன், சகியாமல் மாணிக்கவாசகரின் துன்பத்தைத் தவிர்க்கவும் பாண்டியனுக்குப் புத்தி புகட்டவும் வைகை நதி பெருகிவரச் செய்தனன்.

வந்தி என்றொரு பிட்டு விற்கும் கிழவி அவ்வெள்ளத்திற்கு அணையிடத் தனக்கு ஆதரவு யாரும் இல்லாததால், எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் தன்னிடமும் உள்ளான் என்ற உணர்ச்சியில் அவனே தனக்கு ஆதரவளிக்க வேண்டுமெனக் கோரினாள். உடனேயே இறைவன் கூலியாளனாகத் தோன்றினன்.

அரிமர்த்தன பாண்டியன் அவனை அடித்த அடி, அகிலசராசரங்களிலும் தன் மீதும் பட்ட பின்தான், வந்தவன் இறைவனெனவும், அவனது அன்பரான மாணிக்கவாசகரின் பொருட்டு லீலை புரிந்தானென்றும் உணர்ந்தனன்.

மாணிக்க வாசகர் இறைவனைப் பின் வருமாறு புகழுகிறார்:

போற்றி! இப்புவனம் நீர் தீக் காலொடு வானமானாய்!
போற்றி! எவ்வுயிர்க்கும் தோற்றமாகி நீ தோற்றமில்லாய்!
போற்றி! எல்லாஉயிர்க்கும் ஈறாய் ஈறின்மையானாய்!
போற்றி! ஐம்புலன்கள் நின்னைப் புணர்க்கிலாப்
புணர்க்கையானே.

வேதங்களின் நாயக மணியாகவும் ஞானசமுத்திரமாகவும் அன்பரின், குறைவுகளை நிறைவு பெறச் செய்யும் குணக்குன்றாகவும், உயர்வாகிய மோனநிலையின் சிறந்த இளமைத் தோற்றமாகவும், பரிசுத்தமாகிய இன்பப் பிழம்பாகவும், திரிமூர்த்திகளாகவும் அவர்கட்கும் உயர்வாகவும் இந்த ஸ்வரூபங்களே யற்ற தோற்றமாகவும் இறைவனை வடலூர் வள்ளல் காண்கிறார்.

மறைமுடிக்குப் பொருத்தமுறும் மணியே!ஞான
வாரிதியே! அன்பர்கள் தம் மனத்தே நின்ற
குறைமுடிக்கும் குணக்குன்றே! குன்றா மோனக்
கோமளமே! தூயசிவக் கொழுந்தே! வெள்ளைப்



பிறைமுடிக்கும் பெருமானே! துளவமாலைப்
பெம்மானே! செங்கமலப் பிரானே! இந்த
இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய் நின்ற
இறையே! இவ்வுருவும் இன்றி இருந்ததேவே!

—மகாதேவமாலை அருட்பா

கால, இட, சமய, சந்தர்ப்ப, ஜீவ, ஸ்தம்பனப் பொருள்களாக விளங்கும் உன்னை,

அருளாகி நின்றவர்கள் அறிவதல்லால் ஒருவர்
அறிவதற் கெளிதாகுமோ?
அண்ட பகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்தமான பரமே!

என மெய்ஞ்ஞானியாகிய தாயுமானார் இறைவனைப் பாராட்டுகிறார்.

இறைவனின் பெருமை அளப்பரியது. அவனது அன்பர்கள் அதனை அளந்து அறிந்து அதனைக் கடந்தும் விடுகின்றனர். ஏன்? இறைவன் அவர்கள்பால் அன்பைப் பொழிகின்றனன். உலகம் அறியுமாறு அவர்களது ஆற்றலை அதிகப்படுத்துகின்றனன். அவனது அன்பர்கள் அன்பனாகிய அவனது சோதனைக்குத் தளருவதில்லை. அதற்குப் பதிலாக அதிகக் கீர்த்தி பெறுகின்றனர். அவனது அன்பர்கள் யார்? உலக உயிர்களைப் பாரபக்ஷமின்றி நோக்குபவர்களும் கருணையுடன் அவற்றில் இறைவன் வதிவதை அறிந்து ஆனந்த மெய்துபவர்களுமேயாம்.

அன்பினால் அகிலம் தழைத்திடுக!

---

# Krishna & Skanda

The parallelism of these two avataras is remarkable. Their play is but the allegorical presentation of the ultimate truth. Krishna is represented as the realisation of the Gopis. Skanda is the realisation of the Gyanis. Krishna declared the truths of the Upanishads in the Gita.

Skanda expounded what the Upanishads taught in terms of 'OM', the meeting place of Bhakti & Gyana. Krishna declared "Vasudevam Sarvamiti." Skanda said "Kartikeyam Sarvamiti." The illumination of the human mind in terms of divine knowledge makes the whole world kin and this oneness was what both had taught—Gita Upadesam and Pranavopadesam. The peacock's feather on the crest of Krishna declares the oneness of all that is the crest of the Vedanta and 'Aum' of the Upanishads. This 'Aum' of Vedic thought is the peacock on which Skanda rides. Sri Andal sings of Krishna as the triumphal actor wielding the vel of incomparable sharpness, and power and Arunagiri declares this weapon as the adorning Strength of Skanda. The whole body of Skandapurana extols the prowess of His Vel and this Vel it is that destroyed Kamsa the asura, that brought down the ten heads of Ravana, that succoured the world under the shade of the uplifted Govardhana, and the abiding home of heaven for all Jivas. To sing of Vel is to sing of Krishna & Skanda as one.

வேல் வேல் வேல் எனவே பாடுவோம்—கந்தன்
உலகளந்த பேரின்பத்தில் கூடுவோம்—கண்ணன்
உளமளந்த ப்ரேமைதனை நாடுவோம்—(வேல் வேல்)

In the realisation of this unity lies the triumph of life.

*Thiruppugal Mani*

209017

அன்றறியாப் பருவத்தே அன்பின் அணைந்தாண்டான்
அருளின்பம் தந்துமறைந் தகன்றுவிட்டான், அந்தோ!
இன்றுநிலை யறிகின்றேன், இதயமும் நீருக
இரங்குகின்றேன், அழகனவன் என்னை மறந்தானோ?
என்றினிநான் காண்பேன், நான் என்றுமனம் குளிர்வேன்?
இரண்டற ஒன்றிக் கலந்தே என்றுசுகம் பெறுவேன்?
குன்றுதொறும் நின்றவனைக் கூட விழைகின்றேன்,
குமரனும் என் அருகில்வரக் கூவிடுவாய் குயிலே!

# Coffee
ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO. (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்பும் பெற்ற நகை வியாபாரிகள்

## சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி · மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113




## குடை மார்க் பினைல்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு,

சென்னை-3, டெலிபோன்: 2510

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி

129, மூர் தெரு

சென்னை-1, டெலிபோன்: 20[illegible]

## குகஸ்ரீ ரசபதியின் அருள்நூல் விரிவுரைகள்

விநாயகர் அகவல், கந்தர் அநுபூதி, திருவகுப்புகள், கந்தர் கலிவெண்பா, திருச்செ
முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கயிலாய ஞான உலா, கணபதி தாஸர்கள்
சிவநேயச் செல்வர்கள், தேவி தாஸர்கள், முருகனடியார்.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1


Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
[illegible] Vunder St. Madras-1

# அமிர்தவசனி

## தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர் 12<br>இதழ் 3 | சார்வரி [illegible] ஆனி [illegible]<br>ஜூன்—ஜூலை | [illegible]<br>ரூ. 3-00 |




முழுநீறு பூசிய முனிவர்
சித்திர விளக்கம் பக்கம் 112

## உள்பொருள்


பக்கம்

1. வகுப்பின் சிறப்பு (திருப்புகழ் மணி) ... 97
2. உய்யும் வழி (ஓ. வா. ஜகந்நாதன்) ... 99
3. பார்சுவர் பெற்ற பயன் (ரஸப்ரி) ... 102
4. முழுநீறு பூசிய முனிவர் (ஓ. வா. ஜ.) ... 112
5. 'விந்ததி நூறி' எனும் திருச்செந்தூர்த் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 115
6. இல்லறத்தின் பண்பு (ஆ. வி. ரங்கராஜன்) ... 124
7. பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) 127
8. உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) 131
9. காவடி (இளவழகனார்) ... 137
10. உள்ளத்து உள்ளான் (அ. ராமமூர்த்தி, ஹரித்துவார மங்கலம்) ... 140
11. 1960—Summer (Thiruppugal Mani) ... 143



### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3.50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1



# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 12 | சார்வரி ஹு ஆனி மீ<br>ஜூன்-ஜூலை—1960 | இதழ் 3 |
|---|---|---|


## வகுப்பின் சிறப்பு

(திருப்புகழ் மணி)

ஸ்ரீ அருணகிரியார் அனேக வகுப்புக்களை வகுத்திருக்கிறார். வகுப்பது சிருஷ்டியெனும் தொழில். பதினான்கு உலகங்களையும் பகவான் தன் கருணையால் வகுத்தார். படைக்கப்பெற்ற உலகைப் பக்தகவிஞர்கள் அன்பினால் வகுக்கின்றனர். தெய்வ பக்தியில் கிளர்ந்தெழுந்த உலகளந்த அன்பே ஸ்ரீ அருணகிரியார் பாடிய வகுப்புக்களாகும்.

"கற்றால் கற்றல் என்ன பலன்? கணக்கு அற்றாலன்றோ கற்ற பலன்" என்பது சித்தர் வாக்கு. கணித ஸாஸ்திரத்தில் வல்லவனொருவன் ஒரு ஞானியைக் கண்டான். "ஐயா! உமக்குக் கணிதம் வருமோ?" என்று கேட்டான். அவர் நான் அறிந்ததே அது. ஆனால் நீயறியாத கணிதம் ஒன்று எனக்குத் தெரியும் என்றார். எண்களைக் கூட்டியும், கழித்தும், பெருக்கியும், வகுத்தும் பயிற்சியில் மேம்பட்டது கணித

---

புண்ணியம் ஆம்; பாவம்போம்; போனநாள் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்.

(ஆம்-ஆகவேண்டும். போம்-போகவேண்டும். போனநாள்-முன் பிறப்பில்.)

மென்பர். "மற்ருெரு கணிதம் இருப்பதாகத் தெரிய வில்லையே" என்ருன். யானறிந்த கணிதத்தில் இவை யெல்லாம் உண்டு. இதற்கு மேலும் உண்டு. கணக் கற்ற கணிதத்தை நீயறியாயோ? கேள்!" என்ருர் ஞானி.

ஒன்ரும் உலகில் வேற்றுமை யற்று ஒன்றி நின்று கூடுவது கூட்டல் என்ருர். ஆசாபாச காமக் குரோதாதி களை, அவ்விடத்தே யொழிப்பது கழித்தல் என்ருர். திவ்விய நாம சங்கீர்த்தனத்தால் ஜீவராசிகளின் துன்பம் அகல, அவற்றின் ஆனந்தத்தைப் பெருக்கு வதே உண்மையான பெருக்கல் என்ருர்.

நான் வேறு நீ வேறு; ஊன் வேறு உடல் வேறு; ஜகத்தியாவும் வேறு என்ற வேற்றுமையை ஒழித்து, எல்லா ஜீவ ராசிகளையும் நேசத்தால் ஈசனெனக் கருதி, உலகையே சிவமென வகுத்தால்தான் உண்மையான வகுப்பு என்ருர்.

எண்களைக் கூட்டிக் கழிக்கும் வகையற்ற கணிதம் ஒரு கணக்குதான். மேற்சொன்ன வகையில் உலக ஜீவ ராசிகளின் இதயங்களைக் கூட்டிக் கூடும் அன்பினில், கும்பிடலே கணக்கு அற்ற கணிதம் என்ருர். இரண் டற்ற ஏகத்தில் மனதை நிறுத்தி, பேதமாம் குற்றத் தைக் கழித்தல் பெரும் விவசாய தருமம் என்ருர்.

சாதுக்கள் சங்கத்தால் ஆனந்தத்தைப் பெருக்கி, அதில் மூழ்கித் திளைத்து, உலகெலாம் ஒன்று என்று உணர்ந்து, ஈசனை எங்கும் நிறைந்தவனுய் யாதினும் ஒன்ருய் வகுத்து மகிழ்வதே மோன விளக்கம். இதை அடைவதே பிறவிப் பயன். இதைக் கேட்ட கணிதப் புலவர் எண்ணினுர். பிறகு, எண்ணமாகும் விண்பரந்த ஜோதியில் தன் ஜடகணித வித்தை எட்டாத பண் படர்ந்த பரமனைப் பாடித் துதித்து பரகதி அடைந்

---

சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்



தனராம். இதன் தத்துவப் பொருள் கொண்டது சித்தர் வாக்கியம். "கற்ருல் கற்ருல் என்ன பலன்? கணக்கற்ரு லன்ரே கற்ற பலன்"

"பெற்ருல் பெற்ருல் என்ன பலன்? பிறப்பற்ரு லன்ரே பெற்ற பலன்."

---

# உய்யும் வழி

*(கி. வா. ஜகந்நாதன்)*

ஐந்து பொறிகளால் ஐந்து வகை அனுபவங்களை உணர்கின்ருேம். கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் நுகர்கிருேம். மெய், வாய், விழி, நாசி, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியே மனம் அவாவைச் செலுத்தி உலகத்தில் உழலச் செய்கிறது. அவாவைச் செலுத்தி அநுபவத்தைப் பெறும் வாயில்களாக அப் பொறிகள் உதவுகின்றன. ஐந்து வாய் உள்ள ஒரு பிராணி அந்த வாய்கள் ஐந்தாலும் உணவு கொள்வதாக வைத்துக் கொள்வோம். அது போலத்தான் மனம் இருக் கிறது. ஆனுல் ஒரு வேறுபாடு. ஒவ்வொரு வாயிலும் ஒவ்வொரு வகையான நுகர்ச்சிப் பொருள் நுழைகிறது. சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களாகிய அநுபவங்கள் உண் டாகின்றன.

ஆசை இல்லாவிட்டால் முயற்சியும் அநுபவமும் இல்லை. ஆதலால் ஐந்து வாய் வழியே செல்லும் அவாவை ஒழித்தால் துன்பமும் கெடும். அது கருதி அருணகிரி நாதர் மனத்தைப் பார்த்து உபதேசம் செய்யப் புகுகிருர்.

"......மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல் லும்அவா வினையே."

---

(மேதினியில்)இட்டார்பெரியோர்.இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ளபடி. (பட்டாங்கில் - அருள் நூல்களில்)

## உள்பொருள்


பக்கம்

1. வகுப்பின் சிறப்பு (திருப்புகழ் மணி) ... 97
2. உய்யும் வழி (கி. வா. ஜகந்நாதன்) ... 99
3. பார்சுவர் பெற்ற பயன் (ரஸபதி) ... 102
4. மும்முறை பூசிய முனிவர் (கி. வா. ஜ.) ... 112
5. 'விந்ததி நாறி' எனும் திருச்செந்தூர்த் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 115
6. இல்லறத்தின் பண்பு (ஆ. வி. ரங்கராஜன்) ... 124
7. பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) 127
8. உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) 131
9. காவடி (இளவழகனார்) ... 137
10. உள்ளத்து உள்ளான் (அ. ராமமூர்த்தி, ஹரித்துவார மங்கலம்) ... 140
11. 1960—Summer (Thiruppugal Mani) ... 143


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முக்கிய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1


# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 12 | சார்வரி ஹு ஆனி மீ<br>ஜூன்-ஜூலை—1960 | இதழ் 3. |



1553 MADRAS


## வகுப்பின் சிறப்பு

(திருப்புகழ் மணி)

ஸ்ரீ அருணகிரியார் அனேக வகுப்புக்களை வகுத்திருக்கிறார். வகுப்பது சிருஷ்டியெனும் தொழில். பதினான்கு உலகங்களையும் பகவான் தன் கருணையால் வகுத்தார். படைக்கப்பெற்ற உலகைப் பக்த கவிஞர்கள் அன்பினால் வகுக்கின்றனர். தெய்வ பக்தியில் கிளர்ந்தெழுந்த உலகளந்த அன்பே ஸ்ரீ அருணகிரியார் பாடிய வகுப்புக்களாகும்.

"கற்றால் கற்றால் என்ன பலன்? கணக்கு அற்றாலன்றோ கற்ற பலன்" என்பது சித்தர் வாக்கு. கணித ஸாஸ்திரத்தில் வல்லவனொருவன் ஒரு ஞானியைக் கண்டான். "ஐயா! உமக்குக் கணிதம் வருமோ?" என்று கேட்டான். அவர் நான் அறிந்ததே அது. ஆனால் நீயறியாத கணிதம் ஒன்று எனக்குத் தெரியும் என்றார். எண்களைக் கூட்டியும், கழித்தும், பெருக்கியும், வகுத்தும் பயிற்சியில் மேம்பட்டது கணித

---

புண்ணியம்ஆம்; பாவம்போம்; போனநாள் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்.

(ஆம்-ஆகவேண்டும். போம்-போகவேண்டும். போனநாள்-முன் பிறப்பில்.)

மென்பர். "மற்ெருரு கணிதம் இருப்பதாகத் தெரிய வில்லையே" என்ருன். யானறிந்த கணிதத்தில் இவை யெல்லாம் உண்டு. இதற்கு மேலும் உண்டு. கணக் கற்ற கணிதத்தை நீயறியாயோ? கேள்!" என்ருர் ஞானி.

ஒன்ரும் உலகில் வேற்றுமை யற்று ஒன்றி நின்று கூடுவது கூட்டல் என்ருர். ஆசாபாச காமக் குரோதாதி களை, அவ்விடத்தே யொழிப்பது கழித்தல் என்ருர். திவ்விய நாம சங்கீர்த்தனத்தால் ஜீவராசிகளின் துன்பம் அகல, அவற்றின் ஆனந்தத்தைப் பெருக்கு வதே உண்மையான பெருக்கல் என்ருர்.

நான் வேறு நீ வேறு; ஊன் வேறு உடல் வேறு; ஜகத்தியாவும் வேறு என்ற வேற்றுமையை ஒழித்து, எல்லா ஜீவ ராசிகளையும் நேசத்தால் ஈசனெனக் கருதி, உலகையே சிவமென வகுத்தால்தான் உண்மையான வகுப்பு என்ருர்.

எண்களைக் கூட்டிக் கழிக்கும் வகையற்ற கணிதம் ஒரு கணக்குதான். மேற்சொன்ன வகையில் உலக ஜீவ ராசிகளின் இதயங்களைக் கூட்டிக் கூடும் அன்பினில், கும்பிடலே கணக்கு அற்ற கணிதம் என்ருர். இரண் டற்ற ஏகத்தில் மனதை நிறுத்தி, பேதமாம் குற்றத் தைக் கழித்தல் பெரும் விவசாய தருமம் என்ருர்.

சாதுக்கள் சங்கத்தால் ஆனந்தத்தைப் பெருக்கி, அதில் மூழ்கித் திளைத்து, உலகெலாம் ஒன்று என்று உணர்ந்து, ஈசனை எங்கும் நிறைந்தவனுய் யாதினும் ஒன்ருய் வகுத்து மகிழ்வதே மோன விளக்கம். இதை அடைவதே பிறவிப் பயன். இதைக் கேட்ட கணிதப் புலவர் எண்ணினுர். பிறகு, எண்ணமாகும் விண்பரந்த ஜோதியில் தன் ஜடகணித வித்தை எட்டாத பண் படர்ந்த பரமனைப் பாடித் துதித்து பரகதி அடைந்

சாதி இரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்



தனராம். இதன் தத்துவப் பொருள் கொண்டது சித்தர் வாக்கியம். "கற்ருல் கற்ருல் என்ன பலன்? கணக்கற்ரு லன்ரே கற்ற பலன்"

"பெற்ருல் பெற்ருல் என்ன பலன்? பிறப்பற்ரு லன்ரே பெற்ற பலன்."

## உய்யும் வழி

(கி. வா. ஜகந்நாதன்)

ஐந்து பொறிகளால் ஐந்து வகை அனுபவங்களை உணர்கின்ரேம். கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் நுகர்கிரேம். மெய், வாய், விழி, நாசி, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியே மனம் அவாவைச் செலுத்தி உலகத்தில் உழலச் செய்கிறது. அவாவைச் செலுத்தி அநுபவத்தைப் பெறும் வாயில்களாக அப் பொறிகள் உதவுகின்றன. ஐந்து வாய் உள்ள ஒரு பிராணி அந்த வாய்கள் ஐந்தாலும் உணவு கொள்வதாக வைத்துக் கொள்வோம். அது போலத்தான் மனம் இருக் கிறது. ஆனல் ஒரு வேறுபாடு. ஒவ்வொரு வாயிலும் ஒவ்வொரு வகையான நுகர்ச்சிப் பொருள் நுழைகிறது. சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களாகிய அநுபவங்கள் உண் டாகின்றன.

ஆசை இல்லாவிட்டால் முயற்சியும் அநுபவமும் இல்லை. ஆதலால் ஐந்து வாய் வழியே செல்லும் அவாவை ஒழித்தால் துன்பமும் கெடும். அது கருதி அருணகிரி நாதர் மனத்தைப் பார்த்து உபதேசம் செய்யப் புகுகிருர்.

"......மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல் லும்அவா வினையே."

(மேதினியில்)இட்டார்பெரியோர்.இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ளபடி. (பட்டாங்கில் - அருள் நூல்களில்)

"மெய் முதலிய ஐந்து வாய்களின் வழியே செல்லும் அவாவை நீ ஒழிவாயாக" என்றார். ஒழிவாய், ஒழிவாய் என்று இருமுறை கூறி வற்புறுத்தினார். அடியோடு ஒழி வாயாக என்று பொருள் கொள்ள வேண்டும்.

ஐம்பொறிகளின் வழியே செல்லும் அவாவை ஒழிப் பது அத்துணை எளிய காரியம் அன்று. நாமாக ஒரு நாள் நினைத்துக்கொண்டால் ஐம்பொறிகளும் செயலொ ழிந்து நில்லா. அதற்குத் தக்க பலமான துணை வேண்டும். அந்தத் துணை இன்னதென்பதை அருணகிரிநாதர் சொல் கிறார்.

ஒரு குழந்தை ஏதேனும் செய்யத் தகாத காரியத்தைச் செய்து கொண்டிருந்தால், அதைச் செய்யாதே என்று தடுத்தால் அது எளிதில் நில்லாது. அதன் போக்கிலே வேறு ஒன்றைச் செய்யும்படி மாற்றிவிட்டால் முன்பு செய்த காரியத்தில் ஈடுபடாது. மனமும் ஐம்பொறிகளின் வழியே அவாவைச் செலுத்தித் துன்புறுகிறது. அதை மாற்ற வேண்டுமானால் அதற்கு ஒரு போக்குக் காட்ட வேண்டும். "முருகனுடைய திருவடியைப் பெற்று நீ உய்தி பெறுவாயாக!" என்று உபதேசம் செய்கிறார் அருணகிரியார்.

"கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே!"

என்பது அவர் உபதேசம். "கையிலே வாய்த்த கிரணங் களையுடைய வேலை ஏந்திய முருகப்பெருமானுடைய திரு வடியை அடைந்து நீ உய்தி பெறுவாயாக, மனமே!" என்கி றார். மனம் இறைவன் கழலைப் பெறுவது என்பது, இடை விடாது அதனைத் தியானம் செய்வதுதான். 'சேர்தல் என் பது ஈண்டு நினைத்தல்' என்று திருக்குறள் உரையில் பரி மேலழகர் எழுதியுள்ளார். கண் சேர்ந்தால் பார்க்கும். காது சேர்ந்தால் கேட்கும். நாக்குச் சேர்ந்தால் சுவையை உணரும். அவ்வாறே மனம் சேர்ந்தால் நினைக்கும். முருகன் கழலை மனம் தன்னிடத்திலே இடைவிடாமல்

---

இடும்பைக்கு இடும்பை இயல் உடம்பு இதன்றே
(துன்பங்களை நிறைத்த தோல்பையே இந்தவுடல்.)



வைத்து நினைப்பதையே இங்கே பெறுதலாகச் சொன்னார் ஒருவன் ஒன்றைப் பெற்றால் அதைத் தன் உடைமையாக வைத்துப் பயன்படுத்துவான். மனமும் முருகன் கழலைத் தன்பாற்கொண்டு, எப்போதும் தியானிப்பதையே பெறு தல் என்று கொள்ள வேண்டும்.

மனம் ஒன்றை நினைக்க வேண்டுமானால் அதற்கு உரு வம் இருக்கவேண்டும். முருகன் கழலைத் தியானிக்கவேண் டும் என்பவர் அடையாளம் சொல்கிறார். அவன் அழ குடையவன்; அடையாளமுடையவன். தன் திருக்கரத் திலே வேலை உடையவன். இறைவன் மனமுடைய மக்க ளின் தியானப் பொருளாக வருவதற்காகவே, அருளினால் கரசரணாதி அவயவங்களைப் பெற்று எழுந்தருளுகிறான். கை என்பதால் கரத்தையும், கழல் என்பதனால் சரணத் தையும் சொன்னார். இவ்விரண்டு உறுப்புகளையும் சொல் லவே முருகன் திருவுருவத்தோடு எழுந்தருளுவான் என்பது தானே தெரிய வந்தது. அவன் கையில் கதிர் வீசும் வேலை உடையவன். அதனால் அவனைத் தியானம் செய்தால் மனத்தில் ஒளி படரும். நாம் கண்ணை மூடிக் கொண்டால் இருள் படர்வதைத்தான் பார்க்கிறோம். ஆனால் முருகனைத் தியானம் செய்யப் புகுந்தால் அவனு டைய கதிர் வேல் ஒளி விடும். முருகனது முழு உருவமும் தரிசிக்கவும் தியானிக்கவும் முடியாவிட்டாலும் அவனு டைய கதிர்வேலைத் தியானித்தால், பிறகு முருகனையும் தரிசிக்கும் நிலை வரும்.

முதலில் பளிச்சென்று தோன்றும் கதிர்வேலைத் தியா னிக்க வேண்டும். அது தன்னைக் காட்டிப் பின்பு தன்னைப் பற்றிய கையைக் காட்டும். கையின் வழியே தியானத் தைப் பலப்படுத்தினால் அழகுத் திருவுருவனாகிய முருகன் தன் திருக்கோலம் முழுவதையும் காட்டுவான். உடனே அவன் திருவடியைப் பற்றிக் கொள்ளலாம். அந்தக் கழலைப் பெற்றால் உய்ந்து விடலாம். அந்தக் கழலின் தியானம் ஏற ஏற ஐவாய் வழி செல்லும் அவா மெல்ல மெல்ல நழுவி விடும்.

---

இடும் பொய்யை மெய்என்று இராதே.
ஊட்டி வளர்க்கும் பொய்யுடலை நிலையென்று நினையாதே.)

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே! ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழிநா சியொடும் செவியாம்
ஐவாய் வழிசெல் லும்அவா வினையே.

[மனமே! கையில் வாய்த்த சுடர் வடிவேலை யுடைய முருகனது திருவடியைத் தியானம் செய்து பெற வேண்டியதைப் பெறுவாயாக! மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து வாயில்களின் வழியே செல்லும் அவாவை அடியோடு ஒழிவாயாக!]

---

கணபதி பக்தர்கள் 15

# பார்சுவர் பெற்ற பயன்

(ரஸபதி)

### தர்ம வாழ்வு

நீறணிந்த சிவம்போல், இறுமாந்துளது இமய மலை. அருந்தவர் பலர் அங்குளர். அவர்களுள் ஒருவர், சாலச் சிறந்த சவுபரி முனிவர்.

அருள் நூற்களில் ஆர்வம் கொண்டவர். அவரை அணுகுவர். பெரும் பயனை அதனால் பெறுவர். அகப்பற்று புறப்பற்று அழிய, சவுபரி, வந்த பிறப்பை நிந்திப்பார். சதா சிவத்தைச் சிந்திப்பார்.

அவர் தேவி, அழகின் சிகரம் ஆனவர். கற்பின் உயர்ந்த அக் காரிகை திருமுடி, காலந்தோறும் கணவர் திருவடிகளைச் சந்திக்கும். அவர் திருவுருவை, என்றும் இதயம் வந்திக்கும். அவர் பெயர் மனோமயை.

ஒரு நாள் வைகறை நேரம். புனித முனிவர், நீராடப் போயுளர். அவர் மீள்வதற்குள், இல்லறப் பணிகளில் மனோமயை, ஈடுபட்டு இருந்தார்.

### சோதனை வேதனை

கிரவுஞ்சன் எனும் ஒரு கந்தருவன், தன் எடுப்பான விமானத்தில் ஏறினன். விர்...விர்...என்ற ஒலியுடன்,

---

இடும் கடுக! உண்டாயின், வீடு உண்டாகும்.
(விரைந்து அறம் செய்யின் வீடு பேறு சித்திக்கும்.)



விண்ணில் விரைந்தது அவ் வானவூர்தி. மேல் நோக்கிச் சென்ற கிரவுஞ்சன், திடீரென்று கீழ் நோக்கினான். கற்பின் செல்வியான மனோமயையை, அவன் கண்கள் கண்டன. வனிதையின் அழகு, மனத்தை வசிகரித்தது. இருந்த அறிவை இழந்தான். இரைச்சல் காட்டிய ஊர்தியை, நிலத்தில் இறக்கினான்.

"உள்ளினும் சுட்டிடும், உணரும் கேள்வியிற்
கொள்ளினும் சுட்டிடும்; குறுகி மற்றதைத்
தள்ளினும் சுட்டிடும் தன்மை யீதினால்
கள்ளினும் கொடியது காமத் தீயதே"

என்ற அறிவுரையில், எவ்வளவு அனுபவம் இருக்கிறது! ஐயோ! கிரவுஞ்சன் விலங்கே ஆயினான். முன்னும் கண்டிலன். அவர் யாரென்றும் அறியான். அநியாய ஆசை, மாபெரும் தருமத்தை மறக்கச் செய்தது. விறு விறுத்து அணுகினான்.

### பாப சாபம்

ஒன்றும் வினவிலன். பாவையின் கரத்தைப் பற்றினான். பாதக சாதகனாகிப் பல்லிளித்தான்.

எதிர்பாராத இச் சம்பவத்தால், அதிர்ந்தது மனம். பூனைவாய்ப் பட்ட கிளிபோல், நடுங்கினர் நங்கையார். கொதித்துக் கோபம் கொப்புளித்தது. சீறியது அப்பெண் சிங்கம்.

பாவீ! கையை விடு! விடு!! சாம்பராய் விடுவை! எச்சரிக்கிறேன்! என்று அதிர உரைத்த அவ் அணங்கு, விடுதலை பெற கையை வெடுவெடுத்து உதறினர்.

கற்ற கல்வியும், பெற்ற அறிவும் துறந்த அப்பேதை, தொட்ட கையை விட்டிலன்.

நீராடப் போயிருந்த சவுபரி, அதே நேரத்தில் வந்தார். சம்பவத்தை யறிந்தார். கண்கள் நெருப்பைக் கக்கின. வேதம் ஓதும் அவர்தம் தூய வாயிதழ்கள் துடித்தன. புருவங்கள் நெறிந்தன.

என்ன துணிச்சல்! தூர்த்தா! தோகையைத் தொட உன் மனம் எப்படியடா துணிந்தது?

---

எண்ணி ஒரு கருமம் யார்க்கும்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்.(ஒண்ணாது-முடியாது.)

பிற மங்கையரை வலிந்து இழுக்கும் எவனும், இன்று முதல், மண்பறித்து வளை புகும் பெருச்சாளி யாகிப் பேதுறுக என்று, கொதித்துச் சாபம் கொடுத்தார்.

ஐயோ! என்றும் எங்கும் நடமாடும் பேரெலிகளின் கதை இதுதானா? எண்ணும் போதே இதயம் அதிர்கிறதே!

சாப வேகம் தன்னைச் சார்வதை, அறிந்த கிரவுஞ்சன் அலறினான். விமல முனிவர் திருவடிகளில், அடியற்ற மரம்போல் வீழ்ந்தான்.

ஸ்வாமி! அறிவிலா நாயேன் செய்த அபசாரம் பொறுத்தருளும்! இதுவரை என் வாழ்க்கையில், ஒரு தவறும் செய்தறியேன். விதி குறுக்கிட்டு விளையாடியுளது. மதியழிந்தேன்; கதியிழந்தேன் என்று, கிரவுஞ்சன் கதறினான்.

## ஆறுவது சினம்

தண்டால் மொத்துண்டு பிளவுபட்ட தண்ணீர், கணப் பொழுதில் ஒன்றாகிக் கலக்கும். அதுபோல்வது சான்றோர் சினம். கந்தருவன் கதறி யழுத கண்ணீர், முனிவரின் கோப வெப்பத்தைக் குறைத்தது.

கிரவுஞ்சா! தணலின் வெம்மையைத் தணிக்கலாம். தண்ணீரை வெந்நீர் ஆக்கலாம். அதுபோல் சோர்வுபட்டு, மாறுபடுவது இல்லை எம் சொற்கள். விக்கினம் தவிர்ப்பவர் விநாயகர். எவர்க்கும் அருளும் எம்பெருமான், உனக்கும் அருளலாம். இவ்வளவுதான் இப்போது சொல்ல முடியும்! என்று, புனித ஆஸ்ரமத்துள் சவுபரி புகுந்தார்.

பெரிய கந்தருவப் பதவிபோய்ப், பெருச்சாளியான கிரவுஞ்சன், மேருமலை நகர்வதுபோல், அங்கிருந்து அகன்றான்.

இந்திரன் கெட்டதும், சந்திரன் கெட்டதும், வாலி மாய்ந்ததும், இராவணன் கெட்டதும் பெண்ணாலே! பெண்ணாலே! என்று கீதம் பாடுவது பாவம். காரிகையரில் தாய்மையைக் கருதாது, அநியாய ஆசையால் ஆக்ரமித்து, ஆடவர்கள் பெருச்சாளி ஆனார்கள்! ஆனார்கள் என்று பாடுவதுதான் அறம்.

---

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின்என்றால் போகா.



## காலத்தின் கோலம்

இமயத்திற்கும் விந்த மலைக்கும், இடையில் உளது ஏமவதி நகர். அதை ஆளும் மன்னன் அபிநந்தனன். அம் மன்னன், அருமையான ஒரு வேள்வியை ஆரம்பித்தான்.

காலரூபி என்பது, ஒரு தேவதை. அது ஆக்கமும் செய்யும்; அழிவும் செய்யும். அக் காலரூபி, அபிநந்தனனுடைய புனித வேள்விக் களத்தில் புகுந்தது. குரூரமான விக்கின உருவம் பல கொண்டது. அவிர்ப் பாகத்தை அள்ளியது. இருந்த ஓம குண்டத்தை இடித்தது. நெடும் புழுதியை அதில் நிரப்பியது. உயர்ந்த பாத்திரங்களை உடைத்தது. அருமை வேள்வியை இப்படி அழித்த பிறகு, தீக் கூட்டம்போல் உருவம் கொண்டு, எல்லாத் திசைகளிலும் சென்றது. அதன் தொடர்பால், ஏதமிலாத வேதாகமங்கள், பேதம் கொண்டு பிணங்கின.

## பெருந்தவர் பிரார்த்தனை

நலம் சிறந்த முனிவர்கள் நடுங்கினர். செய்வது தோன்றாது சிந்தை கலங்கினர். ஒவ்வொரு திசையரும் ஒன்று கூடினர். ஆலோசித்தனர். முதல்வனைப் பிரார்த்திப்பது என்ற முடிவிற்கு வந்தனர். ஓங்காரம் ஆயினானை, உணர்ந்து உள்ளம் உருகினர்.

"எண்ணிலா உயிர்களின் இதய பங்கயம்
நண்ணும் நாயக! உயிர் நவிற்று கன்மத்தின்
அண்ணு சான்றாகிய அமல! எங்கள்பால்
திண்ணிய விக்கிநம் தீர்த்தல் வேண்டுமே!"

"பல்வகைப் பூதமும் படைக்கும் பண்ணவ!
தில்வகை அனைத்தையும் நிறுத்தும் நிர்க்குண!
கொல்வகை செய்தருள் கூட்டும் கொற்றவ!
புல்வகை விக்கிநம் புரட்டல் வேண்டுமே!"

"அங்கமே உபாங்கம் என்(று) அவற்றி னோடும்
துங்க நான்மறைகளும் சுவாசம் ஆகிய
வங்கண! அடியரேம் மாவின் நுங்கிட
பொங்கிய விக்கிநம் போக்க வேண்டுமே!"

---

நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

அடைக்கலம் பெரும! செய்வது தெரியாமல், நடைப் பிணமாக நலிவதோ நாங்கள்? என்று, விமல கணபதியை எண்ணி விண்ணப்பித்தனர்.

**நாத நலம்**

"விக்கினங்களை விலக்குவம். கூட்டு வழிபாட்டால், எம் உள்ளம் குளிர்ந்தது. அடியவர்க்குச் சேவை யருள, வரேண்ய மன்னன் மகவாய் வருவம். ஓம் சாந்தி சாந்தி சாந்தி:" என்று, நாற்புறத்தும் ஒரு தெய்வ நாதம் எழுந்தது.

அது கேட்ட அருந்தவர் யாவரும், அதிசயித்தனர். ஆக்கமான இவ் வாக்கு, ஆனைமுகர் அருளியது என்று, ஆறி மனம் தேறினர். யானை வதனு! வரேண்யர் மைந்த ராகவா வரப்போகிறீர்! அரிய உமது ஆடலை அளவிடுவார் யார் ஐயா? என்று, இன்பக் கண்ணீரை இறைத்தனர்.

**பொருள்முன் மருள்**

யார் அந்த வரேண்யர்? அவர் ஒரு மன்னர். முன்னைய பிறப்பில் தவத்தை முடித்தவர். பின்னைய பிறப்பில், வாழ்விக்கும் அறம் பல வளர்த்தவர்.

புனித அவர் மனைவி பெயர் புட்பகை. கருவுற்ற அத்தேவி, பத்தாம் மதியில் ஒரு பாலனைப் பெற்றுள்.

பிறந்த மகவு, கணத்தில் மறைந்தது. என்ன வியப்பு! அதே நேரத்தில் யானை முகமும், மழு முதலிய ஏந்திய நான்கு கரங்களும், நீண்ட ஒரு துதிக்கையும் ஆன ஒரு சேய், எதிரில் நகைசெய்து இருந்தது.

அதை மருத்துவச்சிகள் அறிந்தனர். அஞ்சினர். வாய் அடங்கி ஓடினர்.

கருவுயிர்த்த புட்பகை, பயந்த பிள்ளையைப் பார்த்தாள். மனம் அதிர்ந்தது. பிள்ளை ஒன்று இப்படியும் பிறக்குமா? கலங்கியது மனம். குழப்பியது குடர். கண்டவர் நகைக்க, பயனிலாப் பிள்ளையைப் பெற்றேனே பாவி! எங்கள் முதன்மை அறம், பாழாய் முடிந்ததோ? என்று, கூக்குரலிட்டுக் குமுறினள்.

---

எல்லாப் படியாலும் எண்ணினல் இவ்வுடம்பு,
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை. (குரம்பை - வீடு.)



அரசர் வரேண்யர், விவரம் அறிந்தார். விரைந்தார். பிரசவ அறையுள் புகுந்தார். கணபதியான பிள்ளையாரைக் கண்டார்.

அண்டங்களை அணுக்கள் ஆக்கி, அணுக்களை அண்டங்கள் ஆக்கும் எம்பெருமானை எதிர் கண்டும், இப் பிள்ளையால் இடர்வரும் என்று எண்ணினர்.

கைதட்டினர். வந்து காவலர் வணங்கினர். இந்த இரவிலேயே, ஊர்க் கோடியில் உள்ள மடுக் கரையில், வீணை இப் பிள்ளையை விட்டு விடுங்கள்! இதை ஒருவரும் அறிவது கூடாது என்று, கண்டிப்பான கட்டளையிட்டார்.

சிந்தை நொந்த ஏவலர்கள், சேயை எடுத்தனர். வேத உச்சியிலும், வித்தகர் உளத்தும் வீற்றிருக்கும் பெருமானை, அரிய தம் மார்பில் அணைத்தனர். விரைந்தனர். குறித்த மடுக்கரையைக் குறுகினர். பசுந்தழைகளைப் பரப்பினர். இன்பச் சேயை அதன்மேல் இட்டனர். கண்ணீரைக் காணிக்கை யாக்கினர். தேம்பினர். திரும்பினர்.

"கருணை நாயகன் குருவெனக் கடைக்கணித் தருளி
வருவன் ஆயினும், பருவம் இல்லார் மருவார்கள்;
பொருவி லாதவன் புத்திரனுய் மனைப் பிறந்தும்,
தெருள் இலாமையின், வரேணியன் தீர விட்டனனே"

என்று, இந்த இடத்தில் புகல்கிறது புராணம்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஓங்கார மூர்த்தி, உரிமை மைந்தனுய் வந்தான் என்பதை உணரும் உணர் விலா மன்னர், பரமனைக் கைவிட்ட செய்தி பரிதாபமாக இருக்கிறது அல்லவா! வலிய சேவைதர வந்தாலும் தெய்வத்தை மறுக்கின்ற உலகத்தில், எம்பெருமான் காட்சிதர எண்ணுவனே? எங்கே தெய்வம்? காட்டுங்கள் பார்க்கலாம் என்று கடாவுகின்ற கடாக்கள் முன், விடையாகி நின்று இதை விளம்பலாம். இன்றேல், இயற்கையே பதிலளிக்கும் என்று, கண்மூடி மௌனியாகி, சிவத்தைத் தனித்திருந்து சிந்தித்தல் செய்யலாம். அதுதான் உயர்ந்த அறம்.

---

நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனுலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (நல்கூர்தல் - வறுமையடைதல்.)

## தவம் தந்த தனம்

கயிலை மலைபோல், கபிலர் ஆஸ்ரமம் போல், மங்களம் காட்டுகிறது மடுக்கரை.

மரகதத்தின் மேல் மாணிக்கமா? கடல்நிற வண்ணர் மார்பில் கவுத்துபமா? கருங்கடலின் உச்சியில் கதிரவனோ எனும்படி, பசுந்தழைமேல் செவ்வொளி பரப்பி, நகைமுகம் ஆயுளர் நாத வடிவர்.

தீய விலங்குகளும், அவரைச் சேவித்துத் தம் தீமை நினைவு தீர்ந்தன. மெய்யறிவு மேவின. பாலர்க்கு நாற்புறமும் பாதுகாப்பா யிருந்தன.

திருமேனி ஒளி, வர வர விரிந்து வளர்ந்தது. அதனால் இரவு தீர்ந்ததென்று எண்ணிய விலங்குகள், இரை தேடச் சென்றன. பறவைகள் ஒலி யெழுப்பிப் பறந்தன. மதி யொளியும், விண் மீன்ஒளியும் மழுங்கின. குமுதங்கள் குவிந்தன. கமலங்கள் மலர்ந்தன. சேயிழையவரும் ஆடவரும், தம் தம் செயலில் இறங்கினர்.

அவ்வனத்தில், பராசுவர் என்ற அருந்தவர் ஒருவர். பொழுது விடிந்ததே! சந்தி செய் காலம் தவறியதே என்று அலறி எழுந்தார். தண்டு கமண்டலத்தொடு நீராடப் புறப்பட்டார். மடுக்கரையில், பசுந்தழைமேல் பளபளத்தது பேரொளி. என்ன இது? என்று, அதை அணுகினார். ஆம். அதிசயமான திருவுருவம்.

கலகல என்று நகைத்தார். பெருமா! இது என்ன கூத்து? இப்படியும் ஒரு திருவிளையாடலா? என்று, குவித்த கைகளால் கும்பிட்டார். சிவகுமரா! உமையாள் மகவாய் அமைவானே! இன்று யார்க்கு மகவானீர்? வீணர்கள் உம்மை உணர்ந்து கொளாது இங்கு விட்டனரா? இருக்கட்டும். என் குடிசையில் உமக்கு இடமுண்டு என்று, வரத கணபதியை வாரி எடுத்தார்.

கீழ்க் கடலில் பரிதி உதயம் செய்தான். ஓ! முன்னிருந்தது, பெருமான் திருமேனிப் பேரொளி என்று உணர்ந்தார். உவகையுடன் ஆஸ்ரமத்தை அடைந்தார்.

வீர்யவற்சலா! என்று கூவினார். விரைந்து வந்தார் அத் தேவியார்.

---

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்.



பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல், எங்கேயோ உதயமாகி, எனக்குச் சேவை தந்தான் எம்பிரான். வருத்தமின்றிப் பெற்ற பிள்ளைபோல், நீ வாங்கிக் கொள் என்றார்.

கற்பின் கொழுந்தான காரிகை கண்கள் களித்தன. குயங்கள் விம்மின. பால் சுரந்தன. கைகள் பதறின.

ஸ்வாமி! முதன்மை ஒளிகட்கு மூலம். வேத ஆகம வியன் பொருள். சேயுருவம் கொண்டதோ அச் செல்வம் என்று, வாய்ப்பான கணவரைத் தொழுது வாங்கினள். ஊறிய பாலை ஊட்டி உபசரித்தாள். வளர் பிறைபோல் பிள்ளையார் அங்கு வளர்ந்தார். அண்ட சராசரத்தையும் ஊட்டி வளர்க்கும் அத்தனை, பாலூட்டிச் சோறூட்டி வளர்க்கும் வீர்யவற்சலையின் புண்ணியம் விளம்ப ஆகுமோ?

## கருணை மறம்

பராசுவர் ஆசிரமத்தின் பக்கத்தில், வர வர இடிபுடை ஆட்டம் வளர்ந்தது. ஒரு நாள், சார்பான மலைகள் சாய்ந்தன. மற்றொரு நாள், விரிந்த நிழல்தரும் மரங்கள் வீழ்ந்தன. ஒருதினம், எடுப்பான வேதிகைகள், குண்டங்கள் இடிந்தன. உடைகள் பல கறிக்கப் பட்டன. சிறந்த நூல்கள் சிதைந்தன. அச்செயல்களைக் கண்ட முனிவர் அஞ்சினர். எவர் செய்யும் செயல்கள் இவை?

ஓ! பெருச்சாளி வேலையா? சாதாரண பெருச்சாளியா அது? சவுபரி முனிவர் சாப ரூபம் அல்லவா! மலைபோன்ற தோற்றம் உடைய அதனை, யார் மடக்க முடியும்? மேல் குறித்தவைகளை அகழ்ந்தும், கெல்லியும், கிண்டியும், தோண்டிப் பறித்தும், பற்களால் கடித்தும் பாழாக்கும் அதைப் பார்த்த பராசுவர் பயங்கொண்டார்.

கனிவு மிக்க பராசுவர் கவலையை அறிந்த கணபதி, இருந்த பாசத்தை ஏவினர்.

அதைக் கண்ட பெருச்சாளி, அஞ்சியது. நிலத்தை அகழ்ந்தது. பாதலம் ஏழையும் பாழாக்கியது. விறு விறுத்து எழுந்தது. விண்ணுலகங்களை வீழ்த்தியது.

---

ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே.

சிவலோகம் வரை சென்றது. சென்ற இடமெங்கும் விடாது தொடரும் வினைபோல், புண்ணியமான பாசம், பாவ எலியைத் தொடர்ந்து பற்றியது. இறுக்கிப் பிணித்து இழுத்து வந்தது. நிமலன் திருமுன் நிறுத்தியது.

தலையாய பெருமானைத் தலை நிமிர்ந்து நோக்கி, அந்த அருளாளர் பெருமானை அறிந்தது. ஊன்றிய சாபம் நினைவில் உதிக்க, ஆனைமுக அத்தா! அருள்க பெருமா! ஆள்க அரசே என்று, அழுது கதறியது எலியரசு.

கிரவுஞ்சா! முன்னைய பிறப்பில் எம்மை முன்னியவன் நீ! உன் வரலாறு, உலகிற்கு ஒரு சமிக்ஞை. உன் சரிதை யறிந்தும், அயல் மாதரை ஆவலிப்பவர், எரிவாய் நரகிற்கே இரையாவர். இன்று முதல் நீ எமது ஊர்தி என்ற பெருமான், அதன் மேல் அமர்ந்து, அகில உலகிலும் உலா வந்தான். இதுபோல் எத்தனையோ பெருச்சாளிகள், எம்பெருமானுக்கு ஊர்தியா யிருக்கின்றன. பிண்டத்தில் குண்டலினிகள். அண்டத்தில் பெருச்சாளிகள். பெரிய எலி மேல், பெரிய கரிமுகப் பிள்ளை என்று போற்றி உலகம் புகழ்ந்தது.

பார்சுவர் முதலினோர், இது கண்டு இன்பம் கொண்டனர்.

### காலக் காப்பு

அஞ்சினேம் தேவா! அடைக்கலம் ஐயா! என்று, அளவிலாத குரல்கள் எங்கும் அதிர்ந்தன. கால ரூபி, விக்கின உருவில் செய்யும் வேதனை பொறுக்க முடிய வில்லையே! புண்ணியத்தைப் பொசுக்குவதாம். வேள்வி களே செய்யக் கூடாதாம்!

கடவுள் வழிபாடு என்பது, கலைக்கு உதவாத செயலாம். விஞ்ஞானத்தை விருத்தி செய்வதாம். இப்படி விதண்டா வாதம் எழுகிறதே! வேதனை பெரிதும் விளைகிறதே! பெரியோர் சிறியோர் எனும் மரியாதையை மக்கள் மறந்தனரே! சந்தி செபம் ஆதிய வைதிகம் சரிந்ததே! உள்ளொன்று புறமொன்றுயது உலகம். உள்ளம் ஒட்டாத உறவு. உதட்டில் புன்னகை. எங்கும்

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.



காமக் களியாட்டம். வெறுங் கூத்தாட்டுக் கூட்டம். கால தேவதையின் சேட்டையைக் காணுயோ பெரும! அருளாயோ அமலா! என்று, அமர தேவதைகள் அலறின.

விநாயகப் பெருமான், உடனே அரிய தன் அங்கு சத்தை ஏவினன். விரைந்த அது, கால தேவதையான விக்கினனை, கழுத்தைப் பிடித்து இழுத்து வந்து, நிமலன் திருமுன் நிறுத்தியது.

விண்ணளாவிய சடைமுடி. கடைவாயில் கோரைப் பற்கள். இப்படியே அச்சுறுத்தும் பல வடிவு கொண்ட விக்கினன், பிரளய வெள்ளமாய்ப் பெருகினன். கம்பீரப் பறவையாகி, உலகமதிரக் கத்தினன். வடவைத் தீயானன். பல மலை உருக்கொண்டு பறந்தான்.

இறுதியில் எம்மான் ஏவிய ஆயுதம், அவனைப் படாத பாடு படுத்தியது. வலி தாங்க முடியாமல், அதிபாதகக் காலரூபி அலறினன்.

அருளாளா! குறி குணம் கடந்த கூத்தா! முத்தொழில் காரண முதலே! அநியாயம் பல செய்தேன். நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேன். வறண்ட அவைதிகத்தை வளர்த்தேன். செய்ததெல்லாம், முட்டாள்தனம் என்று முடிவில் உணர்ந்தேன்! இனி எக்குறையும் செய்யேன் என்று, வீழ்ந்து வணங்கி விக்கினன் வேண்டினன்.

ஏ காலரூபீ! சரணடைந்தாய்! இனி நீ வாழ்ந்தாய்! எம்மை எண்ணுவாரிடம் வால் ஆட்டாதே! துதிப்பவர் இடம் தலை காட்டாதே! காட்டினையேல், எம்மிடம் அங்குசம் இருக்கும் செய்தியை நினைவூட்டுவம்! உன் பெயர் முன்; எம் திருநாமம் பின். இன்று முதல் விக்கினராச விநாயகர் என்று இருப்பம். வழிபடுவார்க்கு அருள்வம். எச்சரிக்கிறேன் என்றுன் எம்பிரான். வானவர் மலர் மழை பெய்தனர்.

அன்று முதல், அமைதியாக வாழ்ந்த உலகம் இது. பழைய வரலாற்றை மறந்த கால தேவதை, இன்று தன் சுய சொரூபம் காட்டுகின்றது. அதை யறிந்தே ஞாயிறு

ஆவாரை யாரே அழிப்பர்; அதுவன்றிச்
சாவாரை யாரே தவிப்பார். (தவிர்த்தல் - தடுத்தல்)

அடியார் திருக்கூட்டம், கூட்டு வழிபாட்டைக் கொண்டுளது. அதன் மூலம், காலவேகம் அடக்கும் கணபதியின் கண்ணருளும் வாய்க்கும் என்று நம்புகின்றவர்கள் நாம்!

**வாழ்க, கணபதி பக்தர்கள்!**

---

# முழுநீறு பூசிய முனிவர்

**(கி. வா. ஜகந்நாதன்)**

சிவபெருமானுடைய அடியார்கள் அணிபவை சிவசின்னங்கள். அவை விபூதியும் ருத்திராட்சமும் ஆகும். கணவனையடைய சுமங்கலிகள் மஞ்சளும் தாலியும் அணிவது போல, இவ்விரண்டையும் அணிவது சிவனடியார்களுக்கு உரியது.

திருநீற்றின் பெருமை அளவிட ஒண்ணாதது. பஸ்ம ஜாபாலோபநிஷத் என்ற உபநிடதம் அதன் சிறப்பைக் கூறுகிறது. இமய முதல் குமரி வரையில் நீறணியும் வழக்கம் நெடுநாளாக இருந்து வருகிறது. மற்ற சமயத்தினரும் ஓரொருகால் நீறணியும் சடங்கை வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

வைதிக மதத்தினர் யாவரானும் நீறுபுனையும் சர்ந்தர்ப்பத்தை மாற்ற முடியாது. அக்கினி காரியம் செய்யும் போது முடிவில் ஹோமத்தில் விளைந்த நீற்றை எடுத்து ரக்ஷையாக இட்டுக்கொள்ள வேண்டுமென்பது விதி.

எல்லாப் பொருள்களையும் எரித்தால் அவை சாம்பலாகின்றன. எந்த வடிவம் உடைய பொருளாயினும், எந்த நிறம் உடைய பொருளாயினும், யாவும் வெள்ளைப் பொடியாக, நீறாக எரிந்து விடுகின்றன. அந்த நீற்றை மறுபடியும் எரித்தால் அது மாறுவதில்லை. எல்லாப் பொருளையும்

---

வயிறு வளர்க்கைக்கு, மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும்.

(யாசித்து வாழ்வதைவிட இறத்தல் நலம்.)



சங்காரம் செய்து தனி யுண்மைப் பொருளாக நிற்கும் சிவபெருமான், எப்படி எதனாலும் வேறுபடாமல் விளங்குகிறானோ அப்படி விளங்குவது திருநீறு.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆலவாயில் அருளிய திருநீற்றுப் பதிகம் இதன் சிறப்பை எடுத்தோதுவது. "வேதத்தில் உள்ளது நீறு" என்று பாராட்டுகிறார்.

திருநீற்றுக்குப் பல பெயர்கள் உண்டு. பஸ்மம், ரக்ஷை, விபூதி, கற்பம் முதலியவை வடமொழிப் பெயர்கள். நீறு, வெண்பொடி, பொடி, காப்பு முதலியன தமிழ்ப் பெயர்கள். சிவாகமங்களில் இதன் வகைகளைப் பற்றிய செய்திகள் வருகின்றன.

கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்று மூன்று வகையான திருநீறுகள் உண்டு.

கன்றை யீன்றதும், அழுக்கு நோய் இல்லாததுமான பசுவின் சாணத்தைச் சத்தியோஜாத மந்திரத்தைக் கூறி ஏற்றுக் கோஜலத்தை விட்டுப் பிசைந்து நிழலுலர்த்தலாக உலர்த்தி, சிவராத்திரியன்று சிவமதத்தால் செய்யும் ஓமத்தீயில் இட்டு எரித்து எடுத்த திருநீறு கற்பவிபூதி என்ற பெயர் பெறும்.

காட்டிலே உலர்ந்து கிடக்கும் பசுவின் சாணத்தைக் கொணர்ந்து பொடியாக்கிக் கோஜலம் இட்டுப் பிசைந்து, அஸ்திர மந்திரங்கூறி உருண்டையாக உருட்டி உலர்த்திப் பின்பு ஓமத்தீயில் இட்டு எடுக்கும் திருநீற்றை அநுகற்பம் என்று கூறுவர்.

பசுக்கள் மேயும் காட்டில் மரங்கள் பற்றி எரிந்து வெந்த நீறும், பசுக்களை கட்டி வைத்த இடங்களில் தீப்பிடித்து வெந்த நீறும், செங்கல் சுட்டகாளவாயில் உண்டாகிய நீறும் ஆகியவற்றைத் தனித்தனியே கோஜலம் விட்டும் பிசைந்து உலர்த்தி, மடங்களிலுள்ள சிவாக்கினியில் விதிப்படி இட்டு எடுத்ததை உபகற்பம் என்று சொல்வார்கள்.

---

சிவாய நமஎன்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை.

இந்த மூன்றும் சிவதீட்சை பெற்றவர்கள் அணிவதற்கு உரியவை.

மலையிலும் பூமியிலும் இடி விழுந்த இடத்திலும் தானே உண்டாகிய சாம்பலை அகற்பம் என்பர். தீக்ஷையில்லாதவர் அணிவதற்குரியது இது.

மேலே சொன்ன கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்ற மூன்றும் லௌகிக பஸ்மம் என்று கூறப்பெறும். அந்தணர் யாகம் செய்ய அதில் வந்த நீறு வைதிக பஸ்மம் எனப்படும்.

திருநீறைச் சிறிதளவு கையில் எடுத்து அகம் புறம் ஆகிய இரண்டிடத்தும் சுத்தி உண்டாகும்படி தியானித்து, சிறிது தென் மேற்கில் அஸ்திர மந்திரங்கூறித் தெறித்த பின்பு அணியவேண்டும். சிவசந்நிதியிலும், ஹோமத்தீயின முன்பும், குருவின் முன்பும், நடக்கும் போதும், தூய்மையற்ற இடங்களிலும் திருநீறு அணியலாகாது. அணியும் போது தரையிற் சிந்தாமல் அணிய வேண்டும்.

திரிபுண்டாமாகவேனும், பிறைவடிவமாகவேனும், தீபவடிவமாகவேனும், வட்ட வடிவமாகவேனும் திருநீற்றை அணியலாம். உடம்பு முழுவதும் வெண்ணீறு பூசுவது முனிவர்களின் இயல்பு.

தம் திருமேனி முழுவதும் திருநீறு பூசும் வழக்கமுடையவர்களை வடநாட்டில் மிகுதியாகப் பார்க்கலாம். தமிழ் நாட்டிலும் சிலர் உண்டு.

அத்தகைய அடியார்களைத் தொகையடியார்களில் ஒருவகையாராக்கி,

"முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியிருக்கிறார்.

---

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்.



திருச்செந்தூர்

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி யினிமேலோ
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்
வந்துவி நாச முன்கலி தீர
வண்சிவ ஞான வடிவாகி
வன்பத மேறி யென்களை யாற
வந்தருள் பாத மலர்தாராய்;
எந்தனு ளேக செஞ்சுட ராகி
என்கணி லாடு தழல்வேணி
எந்தையர் தேடு மன்பர்ச காய
ரெங்கள் சுவாமி யருள்பாலா!
சுந்தர ஞான மென்குற மாது
தன்றிரு மார்பி லணைவோனே!
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே!

(எந்தனுள்......பாலா!)

(பதவுரை) எந்தன் உள் ஏக செம் சுடர் ஆகி—அடியேன் உடலுள் ஒரே பேரொளிப் பிழம்பாக விளங்கி;

என் கணில் ஆடு தழல் வேணி எந்தையர்—என் கண்ணில் (நிழல்) ஆடுகின்ற நெருப்பு மயமான சடைமுடியுடைய எமது தனிப் பெரும் தந்தை யானவரும்;

தேடும் அன்பர் சகாயர்—அன்பால் தேடுகிற (உத்தம) அடியவர்கட்கு உதவுபவரும்;

எங்கள் சுவாமி அருள் பாலா—எங்கள் அருட்செல்வருமான மாதேவர் அருளிய மைந்தனே!

(சுந்தர...மார்பில் அணைவோனே!)

---

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
மன்றோரம் சொன்னார் மனை.

(மன்றோரம் - நியாயத்தில் பட்சபாத

சுந்தர ஞான மென் குற மாதுதன்—அழகும் அறிவும் மென்மையும் வாழும் குறக் காதலியான வள்ளியாருடைய;

திருமார்பில் அணேவோனே—தனிப்பெரும் மார்பைத் தழுவுபவனே!

(சுந்தரமான......பெருமாளே!)

சுந்தரம் ஆன செந்திலில் மேவு கந்த—எழில் மிக்க தான திருச்செந்தூரில் விரும்பி யெழுந்தருளிய கந்தப் பெரும!

சுரேசர் பெருமாளே—வானோர் தலைவர்க்குள் வளம் மிகுந்த தெய்வமே!

(விந்தின்...காயம்...வெந்தது கோடி.)

விந்து அதின் ஊறி வந்தது காயம்—(ஆணின்) வெண் பாலில், (பெண்ணின் செம்பாலில்) ஊறி வந்தது ஆகிய உடல்கள்;

வெந்தது கோடி—(கொடு நெருப்பில்) வெந்தவை கோடிக் கணக்கானவை;

(இனிமேலோ......மலர் தாராய்.)

இனி மேலோ—இனிமே லாயினும்;

விண்டு விடாமல்—(உடலை உயிர்)விட்டும், (பிறவியை) விடாமல் தொட்டும் வேதனை விளையாதபடி;

உன் பதம் மேவு விஞ்சையர் போல—உன் (சாலோக) பதம் சாரும் அறிவு மயமான அடியவர்கள் போல்;

அடியேனும் வந்து—அடிமையான இந்த எளியவனும் (சாமீப பதம்) சார்ந்து;

வினாச முன் கலி தீர—(அதன் பயனாக) பேரழிவு பிறப்பிக்கும் முன்னைய சஞ்சித வினை முறிபட;

வண்சிவ ஞான வடிவு ஆகி—(சார்பு) வளமான சிவ ஞான சாரூப கதி எய்தி;

வன்பதம் ஏறி—வன்மைச் சாயுச்ய (ப்பேறான) ஏற்றம் பெற்று;

என்களை ஆற வந்து—அடியேனது (பிறவித்) தாபம் தீர அணுகி;

---

நீறு இல்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டி பாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகுபாழ்.



பாத மலர் தாராய்—பதப்படுத்தும் திருவடி மலர் நிழல் தந்தருள். (எ-று).

**விரிவுரை**

இரு கண்ணும் புருவ நடுவை இடையறாது நோக்குமேல், உலகப் பல நோக்கம் ஒழியும். ஒரே நோக்கம் உருவாகும்.

வாய்ப்பான இந்நிலை வளர வளர, நலம் தரும் வச்சிரத் தம்பம் நாட்டியது போல், செவ்விய பேரொளி வெள்ளம், உச்சி முதல் உள்ளங் கால்வரை, நெடிதாகிக் காலூன்றி நிற்கிறது. அதன் பின், ஆடாமல் அசையாமல், செயலற்று விடுகிறது ஆக்கை; அலையிலாத கடல் போல், வீசும் காற்றில்லா இடத்து விளக்குப் போல், அமைதி யடைகிறது ஆன்மா.

அந்நிலையில் இதய சிற்சபையிலும், புற நோக்கிலும், நிமல தெய்வ நிழலாடுகின்றது; அந்தச் சொருப தெய்வம், தடத்த மேனியும் தாங்குகிறது.

ஆம். மாபெரும் சடையும் இமயம். திருமேனியே தெய்வத் இமயம். அமல விமல நிமல அவரே எமது பரம பிதா என்று, அறிந்து மகிழ்கின்றார் அனுபவிகள்.

"நெற்றிக்கு நேரே புருவத்(து) இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க, ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம்பலம் என்று, தேர்ந்து கொண்டேனே"

என்று, குறிப்பாக இந்த அனுபவத்தைக் கூறுகின்றார் திருமூலர்.

"ஒரு செழுஞ்சுடர் எழுந்தது, தொழுந் தகையது
ஆகும் அளவோ"

என்று, பாரதத்தில் சொருபத்தைப் பார்த்து மகிழ்ந்தவன் தனஞ்செயன்.

"இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருள் பிழம்பற எழுந்த

---

உடன் பிறப்பில்லா உடம்புபாழ்; பாழே
மடக்கொடி யில்லா மனை. (மடக்கொடி - மனைவி. மனை - வீடு)

"சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநல் சோதியுள் சோதி"

என்கிறார் திருமாளிகைத் தேவர்.

"நின் தாள் புகழுநர் கண்ணுள் பொலிந்தோய்"

என்கிறார் கல்லாடர்.

"கண்ணே! கருமணியே! மணியாடு பாவாய்! காவாய்"

என்று அலறுகிறது அப்பர் திருமுறை.

"நம்மின்—மிக்கவர் நும் கண்ணுள்ளார், விழித்தவர்க் காண்மின்" என்றார், மதுரை வைசிய மாதரிடம் வளையல் வணிகராய் வந்த சோமசுந்தரர்.

மிதிலையில் உள்ள கன்னியா மாட மாளிகை மேல், விமல சீதை நிற்கின்றாள். வீதி வழியே சென்ற இராகவன், நிமிர்ந்து மேற்புறம் நோக்கினன். காளையின் கண்கள் கன்னியைக் கண்டன. நங்கையின் விழிகள் நம்பியை நோக்கின. கண்ணும் கண்ணும் கலந்தன.

"கண்ணொடு கண்ணிணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்"

"நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேல்இணை
ஆக்கிய மதுகையான் தோளின், ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்,
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே"

"மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற்கு உயிர் ஒன்றாயினர்;
கருங்கடல் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ?"

என்று, ரூபகாலங்காரமாகக் கம்பர் குறிப்பிடும் இராம சானகி அனுபவத்தை, ஊன்றி உணர்ந்தால் உள்புலம் விளங்கும். இதனையும் காம ரசமாக்கிக் கதை சொல்வாரை, கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். பிறகு, இராமன் பிரிந்து செல்லும் சூழ்நிலை பிறக்கிறது. அப் பிரிவு பொறாத பிராட்டி,

---

ஒன்றை நினைக்கின், அது ஒழிந்திட்டு ஒன்றாகும்;
அன்றி அதுவரினும் வந்தெய்தும்.



"எண்ணுளே இருந்த போது, யாவரென்று தேர்கிலேன்;
கண்ணுளே இருந்தபோதும், என்கொல் காண்கிலாதவே"

என்று வருந்தும் இடமும், இங்கு எண்ணுவது நலம். இந்த அனுபவத்தை,

'எந்தனுள் ஏகசெஞ் சுடராகி,
என்கணில் ஆடு தழல்வேணி
எந்தையர்' என்று கூறி, இன்புறுகிறது அடியர் இதயம்.

நான் எனும் முனைப்பு, அடியவருக்கு இல்லை. இந்நிலையில், பரமன் பிரிவு பொறாத அப் பெருமக்கள், பிரான்! பிரான் என்று, சிவபிரானை அகத்தும் புறத்தும் தேடி அங்கலாய்க்கின்றனர். குரலெடுத்துக் கூவிக் குமுறுகின்றனர். அழைக்கும் இடம் எல்லாம் வந்து, அவர்கட்கு அருள்கின்றார் அத்தர். அவரை, 'தேடும் அன்பர் சகாயர்' என்று தெளிகின்றார் மேலோர்.

ஸ்வாமி எனும் வட சொல், அருட் செல்வம் எனும் பொருளை அளிக்கும். ஆம். ஆடல் பல காட்டி அருளும் பரமரை, 'எங்கள் சுவாமி' என்று உரிமை தோன்ற உரைக்கின்றார் நல்லோர்.

ஏகசெஞ் சுடர் ஆனார்; என் கண்ணில் ஆடுகிறார்; எந்தையர்; அன்பர் சகாயர் ஆன இறைவரது அருள் விழியிலிருந்து உதயமான நின்னை,

'எங்கள் சுவாமியருள் பாலா!' என்று வீரிட்டுக் கூவி நாங்கள் விளிக்கின்றோம்.

'மாதர்' எனும் சொல்லிற்கு, காதலை விளைவிக்கும் பெண்டிர் என்று, வித்தகத் தொல்காப்பியர் பொருளை விரித்தார்.

அன்பு, சிவம் ஆக்கும்; காதல், சிவத்தில் கலப்பிக்கும்; இது அருள் நூற்களின் அறிவிப்பு.

அழகிருக்கும், அறிவு இராது; அறிவு இருக்கும், அழகு இராது; இந்த இரண்டும் இருக்கும், மென்மையிராது. இது பெண்ணுலகப் பெருஞ் செய்தி. குறவர் குல

---

(ஒன்றை)நினையாமுன் வந்து நிற்பினும் நிற்கும்
(எதுவும்) எனையாளும் ஈசன் செயல்,

வள்ளியம்மையோ, சுந்தர மாது; ஞான மாது; மென்மை மாது; அவர், செந்திலின் கடற்கரைக் குகையில், அன்றும் இன்றும் அருந்தவக் கோலம் கொண்டுளர். அவரது அருள் மார்பை நீ அணைதல், புனித உயிரைப் புணர் செய்தி. அந்த அருமையை யறிந்தோம்;

'சுந்தர ஞான மென்குற மாது
தன்திரு மார்பின் அணைவோனே!'

என்று குறிப்பு வெளிப்படக் கூவுகின்றோமே!

(மாதுதன் – மாதினுடைய; மற்று, மாது - மாதை; தன் திரு மார்பின் அணைவோனே' எனினுமாம்.)

'செந்திலம் பதியில் சுந்தரம், சொல்லி முடிவது இல்லை. வேதஞர்ப்பம் எனும் கடலலையின் மந்திர நாதத்தைக் காத வித்து, அதன் கரையில், சுந்தர மாதுடன் அருள் மணம் வெளிப்பட அமர்ந்த பின்னை, 'கந்தா' என்று கூவிக் கதறுகின்றோமே!

பெரியர்க்கு எல்லாம் பெரியனும் நின்னை, 'சுர ஈசர் பெருமாளே!' எனுமல், வேறு எப்படி அழைப்பது?

பாலனாய், மணவாளனாய், கந்தனாய், சுரேசர் பெருமாள் எனும் செல்வமே! எம் கேண்மை முறையீட்டைக் கேட்டருள்! பிரபோ! கேட்டருள்!!

இருள் நெறி, ஒளிநெறி என இரு வழிகள் இருக்கின்றன. அளவிலாத தீமை செய்த ஆன்மா, மரணத்தின் பின், மனம் நையும். இருள் வழியிலே செல்லும். அளவிலாத் துன்பங்களை, நரகத்தில் அனுபவிக்கும்.

ஓயாது புண்ணியம் செய்த உயிர், சிறந்த ஒளி வழியிற் செல்லும். இனிய பூத சார உடம்புள் புகுந்து, அமர உலக இன்பங்களை அனுபவிக்கும்.

அதன் பின் எஞ்சிய வினைகளை அனுபவிக்க, மழை வழியே இந்நிலம் நோக்கி இறங்கும். காய் கனி தானியாதிகளிற் கலக்கும். அவைகளை உண்ணும் ஆண் உடல்களை, அடைக்கலம் என்று அடையும். கடுகடுத்து, அவர்

---

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந்து எண்ணுவன.



களது எழுவகைத் தாதுக்களிற் கலக்கும். பிறகு தேக சாரமான வெண்பாலில் தங்கும். ஊறுகாய், பாண்டத்தில் ஊறுவது போல், அவ் வெண்பாலில் ஊறி இருக்கும். வாய்த்த பக்குவத்தில், புழு உருவில் வளரும். கண்கட்குப் புலன் ஆகாத அணு உடல் முதல், மிகப் பெரிய உடல்கள் வரை, எந்த உடலிலும் ஏராளமான உயிர்கள் தங்கியிருக்கின்றன. இப்படி, கோடிக் கணக்கான உயிர்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது ஒரு ஆண் உடல். இந்நிலையில், விதி காமத்தை விளைவிக்க,

'ஒருமட மாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி'

ஒழுகிய வெண்பால், பெண்ணின் நுண்கருவுள் நுழையும். அவ்வெண்பாலில் உள்ள பல புழுக்கள், தாய்க் கருவில் தங்க, பொருபொருத்துத் தமக்குள் போட்டியிடும். அவைகளுள் ஒன்று, மற்றவைகளைப் புறந்தள்ளி, தான் முன்னேறிக் கருவுள் தங்கும். மற்ற புழுக்களுக்கு அஞ்சி, அபயம் அபயம் என்று அலறும். இயற்கையின் இரக்கம் மிக்க தாய்க் கரு, தன் மஞ்சள் நிறத்தி விருந்து தூய மென் தோலை உடனே தோற்றுவித்து, தன்னுள் பிற புழுக்கள் மோதி வந்து நுழையும் வழியை மூடிவிடும். இச் செயலால், மற்ற புழுக்கள் வீணே மடிந்து விடும். இப்படியே எந்த உடலிலும், இடம் கிடைக்காத ஆன்மாக்கள் ஒரு கோடி; இடம் பிடித்தவை மிகச் சிலவே.

அவைகளிலும், அஃறிணைக் கருவில் ஆயிரம்; உயர்திணைக் கருவில் ஒரு நூறு. உயர்திணையிலும் நாற்பாற் குலத்துள் மேற்பால் உடலில் நாலைந்து. கீழ்ப்பால் குலத்தில் பெரும்பான்மை. விதி செய்யும் விளையாடல் பல. இவைகளை உணரும் போதே, அந்தோ! நடுங்குகிறது நம் உடல்.

கருவில் தங்கிய உயிர், வரவர வளர்ந்து, குழப்பிய கொழுப்பு நீரில் குளித்து, இருண்ட அவ்விடத்தில் இடர்ப்

---

மாந்தர் குடிவாழ்க்கை, மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். (கலம் - பாத்திரம்.)

சென்னை-600 008

பட்டு, வேகவைக்கும் உதரத் தீயில் வெந்து, கசிவு அழுக் கில் உருவான கிருமிகளால் கடியுண்டு, பத்து மாதம் வரை படாத பாடு பட்டு,

"எட்டாம் மதியில் அங்கங்கள் எல்லாம் நிரம்பி, உந்திவழி
மட்டார் குழல்தாய் உணவு இரசம் மருவ நுகர்ந்து,
வளர்போது;
முட்டா முன்னைப் பவநினைப்பு நெஞ்சில் முளைப்ப,
நிரயத்திற்
பட்டாழ்பவரின் தனிவருந்தி, பாங்கு பெற இன்னன
நினையும்."

"அளவில் யோனிகளில் பிறந்தாம்; அளவில் கருமம்
பல நுகர்ந்தாம்;
அளவில் பேரூர் உற்றிருந்தாம்; அளவில் துன்பம்
அநுபவித்தாம்."

போதும் இப் பிறவித் தொல்லை; பிறந்தபின் பிரானை வழிபடுவேன்; துன்பம் தொலைவேன்; எம்மான் அடிநிழ லில் இன்புறுவேன் என்று, எண்ணுதும் ஆன்மா எண்ணு கிறது.

பத்தாம் திங்கள் பிறக்கிறது. பிரசூத வாயு, தலை கீழாக்கிச் சேயைத் தள்ளுகிறது. இங்கிலையில், பெறுகின்ற தாயும், பிறக்கின்ற சேயும், அம்மவோ அம்மா! என்று அலறித் துடித்து அவதி யடைகின்றனர். பிறக்கிறது பிள்ளை: போதுமடா அப்பா இந்த வாழ்வு! என்ற எண்ணம் இப்போது பிறக்கிறது.

இப்படி, 'விந்தநின் ஊறி வந்தது காயம்.'

இதன்பின், வளர்க்கும் படலம் வளர்கிறது. வளர்ச்சி யின் ஆரம்பத்தில், அறியாமையால் வரும் இடர் ஆயிரம். பள்ளிப் படிப்பில் பல தொல்லை. பருவத்தில் காமப் பசி. மயங்கும் பருவத்தில் மணம். இதுதான் சொர்க்கம் என்ற நினைவு. மனம் கெடு— வாழ்க்கையில் மக்கட் பேறு.

---

மரம் தழைத்தால் வெளவாலை வாஎன்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் இங்கு இல்லை.



'மதலையைப் பெறுநாள் துன்பம்; வளர்த்திடு நாளும்
துன்பம்
விதலை நோய் அடையில் துன்பம்; வியன் பருவத்தும்
துன்பம்;
கதமுறு காலர் வந்து கைப்பற்றில், கணக்கில் துன்பம்;
இதமுறல் எந்நாள்? சேயால் எற்றைக்கும் துன்ப
மானல்.'

இடையில், வந்தேன் என்று நரை திரை மூப்பு வரு கிறது. இன்னம் பலகாலம் இருப்பம் என்று, இட்ட திட் டங்கள் மிகப் பல. அது நிறைவேறுதற்குள், திடீரென்று உடலி விருந்து ஒருநாள் ஒழிந்து விடுகிறது உயிர். 'விட்ட வுடனே உடலைச் சுட்டு விடுகின்றனர் சுற்றத்தார்'. யாவரும் கைவிட, எவையும் கைவிட, பண்ணிய புண்ணிய பாவம் மட்டும், போன உயிர்க்குத் துணையாகத் தொடர்ந்து போகிறது.

பிறகு பழையபடி நரக சொர்க்கம். அதன்பின் நிலம் நோக்கி வருதல். ஆணில் தங்கிப் பெண்ணில் பிறந்து, வளர்ந்து வாழ்ந்து, இறந்த பின் உடலை எரிக்கின்றனர் உலகர். அடபாவமே! என்ன ஜன்மம் இது? இப்படியே தொடர்ந்து, 'வெந்தது கோடி'-உடலங்கள்.

ஒரு இடத்தில் இறப்பது; வேறு ஓர் இடத்தில் பிறப் பது. இப்படியே விண்டு போவதும், விடாது பிறப்பதும் யுகம் யுகமாக நிகழ்கிறதே! மட்டரகமான மதி, இப் பரி பவத்தை மறந்து விடுகின்றதே!

சுவாமி அருள் பாலா! வள்ளி மணளா! கந்தா! பெருமாளே! அடியேன் அறிஞர் பெறும் சாலோகம் சார்ந்து, அணுக்கர் பெறும் சாமீபம் கண்டு, சிவஞானப் பிழம்பாம் திருவுருவம் சிறந்து, ஏற்றம் தரும் சாயுச்யம் எய்தி, ஓயாது இறந்து பிறந்து உற்ற களைப்பு ஒழியுமாறு, வா ஐயா! தருமலர் அடிநிழல் தா ஐயா! என்று, வெம்பி யழுது விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்

---

கற்று தரல்போல் கரவாது அளிப்பரேல்,
உற்றார் உலகத்தவர்.
(கற்று - கன்றுடைய பசு. உற்றார் – உறவினராவர்.)

# இல்லறத்தின் பண்பு

(ஆ. கி. ரங்கராஜன்)

மிகப் பெரும் அறிஞர்கள் பலர் இவ்வாழ்க்கையையே, இல்லற தர்மத்தையே சிறப்பாக உரைக்கின்றனர். ஏனெனில் துறவறமானது துன்பத்தைத் தரும் என்பது அவர்களின் கருத்தாக உள்ளது. எம்பிரான் கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கையில், 'சகல தர்மங்களும் இல்லற வாசிக்கே செய்ய சுலபமாக இருப்பதால் இல்லறமே சாலச் சிறந்தது' என்று கூறுகின்றான்.

இளமையிலேயே துறவு பூண்ட ஔவைப்பிராட்டியாரும், இல்லறத்தை விட சிறந்த அறம் வேறு இல்லை எனக் கூறுகின்றார்.

மெய்ஞ்ஞானியும் பெரும் விஞ்ஞானியுமாகிய தாயுமானாரும், இல்லறம் சிறந்ததென்று கூறுவதுடன், இல்லறத்திலேயே துறவறத்தையும் அனுஷ்டிக்க வசதிகள் உண்டு, சாத்தியம் உண்டு என்று கூறுகின்றார்.

தெள்ளு தமிழ்ப் புலவர் திருவள்ளுவரும், இல்லறத்தின் சிறப்பை முதலில் உரைத்து விட்டே பிறகு துறவறத்தின் அங்கங்களைப் பிரித்து உரைக்கின்றார். இவ்வாறாகப் பலர் சிறப்பிக்கும் இல்லறத்தின் உயர்வையும் பண்பாட்டையும் இனி ஆராய்வோம்.

மக்கள், சுற்றம், நட்பு, தாம்பத்யம் முதலிய பலவும் செறிந்துள்ளதே இல்வாழ்க்கையாகும். இதோடு செல்வமும் அறிவு நுட்பமும் சேர்ந்துவிடின், அவரை நிகர்ப்பவர் எவருமிலர் எனலாம்.

இல்லற தர்மத்தினை ஒழுங்காக நடாத்தி உயர்வு பெற்றோர் அளவு கடந்தோராவர். உத்தம மக்கட் செல்வமும், பொருட் செல்வமும், நிலச் செல்வமும், உயிர்ச் செல்வமும், பணியாட்களும் உடையவரின் இல்வாழ்க்கை,

---

தாம்தாம்முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தான்மரையோ பொறிவழியே.

(தாமரையோன் - பிரமன். பொறி - விதித்த விதி.)



இல்லற தர்மத்தைக் கடைப் பிடித்து ஒழுகுவதாய் இருப்பின், அதைவிட உயர்வான குடும்பமொன்று இருக்க முடியாது. முனிவர்கள் எனக் குறிப்பிடப்படும் தவ சிரேஷ்டர்களெல்லாம் இல்லறத்தையே அனுஷ்டித்துள்ளனர்.

பிதுர்யக்ஞம், தெய்பக்தி, விருந்தினரை உபசரித்தல், பெரியோர்களைப் பணிதல், நண்பர்களை ஆதரித்தல் முதலியவற்றுடன், தனது குடும்பத்தினுள்ளும் ஒற்றுமை, அன்பு, தூய்மை, பெருந்தன்மை ஆகியனவும் கலந்துள்ளதே இல்லறம் எனப்படும்.

வெளி மயக்குக்கு எல்லாம் செய்துவிட்டு உள்ளுக்குள் மேற்கூறிய உயர் குணங்கள் இல்லாமல் இருப்பின், அது இல்லற தர்மமல்ல. தீய குணங்கள் பல நிறைந்து, தனது மக்களையும் மற்றவரையும் இம்சிப்பவர் இருந்தும் இல்லாதவரே ஆவர்.

பிறருக்கு உணவளிக்கவும், இடமளிக்கவும், துன்பமுற்றோரை ஆதரித்து உற்சாகமளிக்கவும், பெரியோர்களுக்குத் தொண்டு செய்யவும் இல்லற வாசிகளுக்கு மிகவும் சுலபமாகும்.

செல்வச் செருக்கினால் பிறரைக் கொடுமைப் படுத்தலும், தானே வாழ மற்றவரை ஏமாற்றுதலும், உயிர்களை வதைத்தலும் புரிபவர் இல்லற வாசியாக முடியாது.

தன்னால் மற்றவர் வாழவும், மற்றவரால் தான் வாழவும் திறமையுடன் செயல் புரிபவர், இல்லறவாசி என்று கூறத்தக்க உரிமையுடையவர் ஆவர். நல்லனவே செய்ய வேண்டும் என்ற திட சித்தம் இல்லறவாசிக்கு இருந்து அவ்வாறு நடப்பாராயின் அவர் வாழ்க்கை புனிதமடையும்.

மாந்தர் வாழ்வதற்கேற்ற நற்செயல்கள் பலவும் ஆற்ற இல்லற வாசிக்கு இயலும். அதற்காகப் பொன்மாரி

---

ஒறுத்தாரை என்செயலாம்; ஊர்எல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி. (ஒறுத்தாரை – கண்டித்தவரை.)

பொழியக் கவிபாடும் திறமையோ, பாலைவனம் சோலை வனமாக மாறும்படி உடனே (நினைத்த மாத்திரத்தில்) செய்யும் ஆற்றலோ தனக்கு வேண்டுமென்பதல்ல. அவசியமுமல்ல. அதாவது இயற்கையை மாற்றி அமைக்கவும் அழிக்கவும் மனிதன் உரிமை பெற்றவன் அல்ல.

இன்சொல், மலர்ந்த முகம், அன்பு, பொய்யாமை, பக்தி, பெருந்தன்மை, இரக்கம், ஈகை இவை அனைத்தும் நிறைந்து விளங்குவதே இல்லற மாகும்.

துறவு என்பது மனத்துறவே ஆகும். அதாவது எதிலும் பற்றின்றி விளங்குதலாம். யாவும் இறைவன் செயலே எனத் துணிந்து தனது கடமைகளை மட்டும் செய்து கொண்டிருப்பதற்கே துறவு என்று பொருளாம். தனக்கு மிகவும் முக்கியமான பொருள் எதுவோ, அதை மற்றவர்க்குத் திருப்திகரமாக உதவுதலே யக்ஞம் அல்லது வேள்வி எனப்படும். ஆனால்

தன் ஆயுதமும் தன் கைப் பொருளும்
பிறன் கைக் கொடுக்கும் பேதையும் பதரே

என அதிவீரராமபாண்டியர் கூறியுள்ளதுபோல, தனது கருவிகளையும், பொருள்களையும் மற்றவரிடம் விட்டுக் கொடுத்துவிட்டு ஏமாந்திருப்பது மதியீனத்தனமாகும். எவ்விதத்திலும் அது துறவு ஆகமாட்டாது.

காந்திமகான், ரமண முனிவர், அரவிந்தர், பரமஹம்சர், புத்தர், விவேகானந்தர் முதலியோரின் பொன்மொழிகள் மாந்தரின் உள்ளத்தைத் தூய்மைப் படுத்த வல்லன. தூய்மையும் வாய்மையும் இணைந்து இல்லற வாசியிடம் செயல்படின், அவன் செய்யும் இல்லறமானது பிரகாசிப்பதுடன், மாபெரும் உயர்வையும், உன்னத நிலையையும் அளிக்குமாதலின், நடத்தும் வகையறிந்து நடத்துவாராயின் இல்லறத்தைவிட சிறப்புவாய்ந்த அறம் வேறொன்றுமில்லை.

---

இழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று; சால
ஒழுக்கம், உயர்குலத்தின் நன்று.



நல்விருந் தோர்க்களித் துபசரித் திடுதலும்
அல்லலுற் றிடுபவர்க் காறுதல் உதவலும்
பல்புகழ் நல்வினை புரிதலும் உடையதோர்
'இல்லறம் அல்லது நல்லறம் அன்று.'

கொன்றை வேந்தன்.

---

# பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை B.A., B.T.)

## பாடலும் பரிசிலும்

பாம்பனடிகள் சிதம்பரத்தில் சிவசிதம்பரம் பிள்ளை என்பவர் இல்லத்தில் தங்கியிருந்தனர். சிவசிதம்பரம் பிள்ளை மிக்க உள்ளத் தூய்மை வாய்ந்த முருகனடியவர். ஒருநாள் அங்கு அடிகளாரிருந்த போது சைவத் திருவினரான பொன்னுச்சாமி பிள்ளை என்பவரும் வந்தனர். சுவாமிகளிடம் அன்பு மிக்க அவர் கேட்கும்படி நமது அடிகளார் தாம் இயற்றியிருந்த "தங்க ஆனந்தக் களிப்பு" என்ற நூலைப் படித்துக் காட்டினர். அதனைப் பக்தி பிறங்க மேலே சொன்ன பிள்ளையவர்களும் வீட்டுக்குடையவரும் கேட்டு மகிழ்ந்தனர். திடீரென்று பொன்னுச்சாமி பிள்ளை ஆவேசங் கொண்டெழுந்தார். வீட்டுக்குடையவரான சிவசிதம்பரம் பிள்ளையை அழைத்து, அன்ப! நீ உன்னிடமுள்ள புதிய உருத்திராக்கக் கண்டியைக் கொண்டு வந்து இவ்வடிகளார் கழுத்திலிடு" என்றனர். சிவசிதம்பரரிடம் உருத்திராக்கக் கண்டிகை உள்ள செய்தி அதுவரையில் எவருக்கும் தெரியாது. இதனைக் கேட்டதும், வீட்டுக்காரருக்கே பெருவியப்பு உண்டாயிற்று. அவர் முருகனருளைப் போற்றிக்

---

(வழுக்குடைய)வீரத்தின் நன்று, விட்டாரோய்; பழிக்கு அஞ்சாத்
தாரத்தின், நன்று தனி. (தாரம் – மனைவி.)

கொண்டே வீட்டுக்குள் சென்று புதிய உருத்திராக்க மாலையைக் கொணர்ந்து, இறை கட்டளைப் படியே சுவாமிகள் கழுத்திலிட்டு வணங்கினர். அதன் பிறகு ஆவேசக்காரர் அடிகளாரைப் பார்த்து, "அப்பாடலில் மீதியாயுள்ளதையும் பாடி முடித்திடுக" எனக் கட்டளை யிட்டார். அடிகளாரும் இவையனைத்தும் பன்னிரு கைப் பரமன் திருவருள் எனக் கொண்டு அவ்வாறே பாடி முடித்தார். அதோடு அன்றுமுதல் அந்த உருத்திராக்க மாலை மட்டும் அணிந்தே வருவாராயினர்.

## குமரன் கொடைச் சிறப்பு

கொடைக் குணம் பரம்பரைச் சொத்தாகப் பிறவியிலே அமையுமாயின் நல்லது என்பர். முருகப்பிரானே கொடை வள்ளல் குடும்பத்தவன். பாட்டிற்கு உவந்து ஆயிரம் பொன் பரிசளிக்கும் பெருவள்ளலான தியாகராசனின் மகன். ஒரு புலவர் புகலூரந்தாதி பாடினார். அந்தப் புலவர் அரசற்குரிய கடமை செலுத்தாமைக்குச் சிறையிடப்பட்டார். அவர் பாடலைக் கேட்ட ஒரு மங்கையின் மூலம் அக் கடனைத் தீர்த்து, அவரைச் சிறை நீக்கிய திருவருள் திறமும் மறக்கற்பாலதன்று. மீனாட்சி பிள்ளைத் தமிழ் பாடினார் குமர குருபரர். அதனை அரங்கேற்றும்போது திருமலை நாய்க்கர் மடியில் அர்ச்சகரது மகளைப்போல அமர்ந்திருந்து, முத்தப் பருவம் பாடும்போது அரசர் கழுத்தில் அணிந்திருந்த முத்து மாலையைக் குமர குருபரருக்கு மீனாட்சி அம்மை அளித்துச் சிறப்பித்தனர். அன்னையான அங்கயற்கண் அம்மை குமர குருபரரது பாடல் கேட்டு மகிழ்ந்து முத்துமாலை அணிந்தது போல, அம்மையின் அரும் புதல்வனான கந்தபிரானும் குமரகுரு தாசருடைய பாடல் கேட்டு உருத்திராக்க மாலை பரிசளித்து உவந்தான்போலும். இதனாலன்றோ,

"பொய்மை யாளரைப் பாடாதீர், எந்தை புகலூர்ப்
பாடுமின் புலவீர்காள்"

(சுந்தரர்)

---

ஆறு இடு மேடும் மடுவும்போல் ஆம்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்.
(ஆறு இடும் - வெள்ளமிட்ட ஆற்றால் உண்டான. மடு-பள்ளம்.)



'வஞ்சக லோப மூடர்தம் பொருளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது—பலபாவின்
வண்புகழ் பாரி காரி என்றிசை வாது கூறி
வந்தியர் போல வீணில்—அலையாதே
செஞ்சரண் நாதகீத கிண்கிணி நீபமாலை
திண்டிறல் வேல் மயூரம்—முகமாறும்
செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞானமூறு
செங்கனிவாயில் ஓர் சொல்—அருள்வாயே"

(அருணகிரியார்)

எனக் கூறும் வாக்குகளும் எழுந்தன.

## அகச்சான்று

மேலே கூறிய நிகழ்ச்சிகளை நமது பாம்பன் முனிவர் ஸ்ரீமத் குமார சுவாமியத்துள்

"தங்கமார் சுகக் களிப்பினை எடுத்தே
சாற்று ஞான்று சிதம்பரத் திடைஓர்
துங்க நாரர் உள் நின்று இதை அணிந்தே
சொல்க என்றுகண் வடம் எனக்கீ
செங்கை வேலவ... நான் மறப்பேனோ

(திருவருட் செயல் ஞாபகம்)

எனக் குறித்துள்ளனர்.

[தங்கமார் சுகக்களிப்பு-தங்க ஆனந்தக் களிப்பு என்ற நூல். கண் மணி வடம் - உருத்திராக்க மாலை. துங்க நாரர்-தூய அன்புள்ளங் கொண்ட பொன்னுச்சுவாமிப் பிள்ளை.]

## தங்க ஆனந்தக் களிப்பு

இந்நூலில் சில அடிகளை இனிப் படியுங்கள்:—

1. "சுயமான தங்கம் இத் தங்கம்—சிவ
சுப்பிரமண்ய மெனுந் தெய்வத் தங்கம்
அந்தரர் வேண்டொரு தங்கம்—ஈறில்
அறுசிகரக்கிரி நின்றெழு தங்கம்
சுந்தரமாய்ச் சுடர் தங்கம்—உமை
துங்க மலர்க்கரம் தங்கொரு தங்கம்

(சுயமான)

---

சோறு இடும்;) தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக,
உள்ளீர்மை வீறும் உயர்ந்து. (வீறும் - விளங்கும்.)

2\. "வேதத்திலே உள்ள தங்கம்—சுத்த
வித்தை சொல்லாகம நித்தியத் தங்கம்
நாதத்தின் மேலுள்ள தங்கம்—அந்த
நாதங்க டந்தபின் நாமடை தங்கம்

(சுயமான)

3\. "பார்ப்பவர்க் கின்புசெய் தங்கம்—சிவ
பாக்கிய மெல்லாம் பகுக்கின்ற தங்கம்
சீர்பர தத்துவத் தங்கம்—நிறை
சிற்பர தேஜோம யானந்தத் தங்கம்

(சுயமான)

4\. "யாதனையைத் தெறு தங்கம்—தெய்வ
யானை விழிக்கித மாயவிர் தங்கம்
ஏதணையா நறுந் தங்கம்—எழில்
ஏனலி னோர்கொடி தான்படர் தங்கம்

(சுயமான)

### விளக்கம்

இந் நூலில் இம்மைக்கு வாழ்வளிக்கும் செம் பொன்னுக்கும், மறுமைக்கு வாழ்வளிக்கும் செவ்வேளுக்கும் பொருந்துமாறு இரட்டுற மொழிதலாக 43 அடிகள், 43 கோணத்தியங்குவதாகக் கூறப்பட்டுள்ளன. சுப்பிரமணியம் என்றால் அழகிய ஒளிப்பிழம்பு எனப் பொருளாகும். கலப்பில்லாத தங்கம் நல்ல ஒளியுள்ளது. மேன்மை மிக்கவர் (செல்வர்) அணிவர். மலையினின்று கிடைப்பது. அழகாய் ஒளிர்வது. பெண்கள் மோதிரம் முதலிய அணிகளாகக் கையில் அணிவது. எல்லா நூற்களும் சிறப்பிக்கும் உலோகமாவது. ரசவாதிகள் புகழும் சிறப்பை நிலையாக உடையது. ஒலியுள்ள உலோகங்களுக்கெல்லாம் மேலாக ஒலி தராத மேம்பாடுடையது. காண்பார்க்கு இன்ப மூட்டுவது. மங்கலச் செல்வ மெல்லாம் தரும் சிறப்பினது. தானே தலையானது. மேலோங்கும் ஒளியால் அணிந்தார் இன்பமுறுவர்.

---

கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர்.



சுப்பிரமணியமான சத்திய தெய்வ ஞான ஒளித் தங்கம் சுயம்புவானது. தேவர்கள் அதனை விரும்புவர். ஆறு முடிகளாகிய மலையினின்று எழும். மாறா அழகுடன் பிறங்குவது—உமாதேவியின் மலர்த்திருக் கரத்தில் ஒளிரும் வேதத்தினால் 'ஹிரண்யபாஹு' முதலிய வாறாகப் புகழப் பெறும். நாதநிலை கடந்த ஞானதத்துவத்தில் நாம் அடையும் பேறாகத் திகழ்வது. தரிசித்தார்க்கு பேரின்ப முதவுவது. சிவபாக்கியமாக விருக்கும் பேறனைத்தும் உதவ வல்லது—மேலான (பரத்துவப்) பொருளாவது. ஞான ஒளி மயமான ஆனந்தப் பொருளா யமைவது. வேதனை யனைத்தும் மாற்றுவது—தெய்வயானை விழிக்கு இன்பூட்டுவது — மலமாசுகளில்லாதது. தினைப்புனக் கொடியான வள்ளி படரநிற்பது. இவை போல்வன மேலும் உள. விரிவஞ்சி விடுத்தோம். இந்நூல் சுவாமிகளது 'பத்துப் பிரபந்தம்' என்ற நூலில் அடங்கியுளது. அதனை அன்பர்கள் படித்து அருள் வாழ்வு பெறுக.

---

# உபநிஷதங்களின் உள்ளொளி

(ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி)

### கதோபநிஷதம்

ஓங்காரத்தின் சிறப்பையும் அதன் உண்மையை அறிந்தோர்களின் மேன்மையையும் காலதேவன் கூறினான். நசிகேதஸ் அவ் வார்த்தைகளை ஆவலுடன் கேட்டுப் பருகினான். அவன் உள்ளம் ஞானிகளின் உயர்வையும் சிறப்பையும் எண்ணி வியந்தது. 'பிரம்ம தத்துவத்தின் வடிவமே ஓங்காரம். அத்தத்துவத்தை அறிபவர் பிரம்மலோகத்தில் பூஜிக்கப்படுகின்றனர்' எனும் வாக்கியம், நம் செவிகளிலும் ரீங்கார மிடத்தான் செய்கிறதல்லவா! பரம்பொருளை, மேலான தத்துவத்தை அறிந்தவர்கள் நமது பூஜைக்கும் வழிபாட்டிற்கும் அருகதை உடையவர்களா

---

(இல்லானை,) இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லாது அவன்வாயின் சொல்.

வர் அன்றோ! எனவேதான் ஞானம் நிறைந்த நல்லோர்களின் திருநாமத்திற்கு முன் 'பூஜ்ய ஸ்ரீ' என்று சேர்க்கிறோம். இனி மேலே போவோம்.

## அழியாத ஆத்ம தத்துவம்

ஹிந்து மதத்தின் தனிச் சிறப்பு என்று சில தத்துவங்களைக் கூறலாம். அதில் தலைசிறந்தது ஆத்மாவின் அழிவற்ற தன்மையை உரைத்து, ஆத்மாவுக்கும் உடலின் செயலுக்கும் சிறிதும் சம்பந்தம் இல்லை என்பதை உணர்த்துவதாகும். மிகச் சிறந்த ஞான நூல் என்று போற்றப்படும் இவ்வுபநிஷதத்தில் ஆத்மாவின் அழிவற்ற தன்மை வெகு அழகாக விளம்பப் படுகிறது. பகவான் ஸ்ரீ கிருஷ்ணனால் உலகோர் பொருட்டு அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டுள்ள ஸ்ரீமத் பகவத் கீதையை உபநிஷதங்கள் எனும் பசுவிலிருந்து கறக்கப்பட்ட சுவை மிகுந்த பால் என்று மேலோர் கூறுவர். "ஸர்வோபநிஷதோ காவோ, தோக்தா கோபால நந்தன: பார்த்தோ வத்ஸ: ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்"—எல்லா உபநிஷதங்களும் பசு. இப் பசுவைக் கறப்பவன் கோபால நந்தனாகிய ஸ்ரீ கிருஷ்ணன். பார்த்தனே இப்பசுவைச் சுரக்கச் செய்யும் கன்று. கீதை எனும் அம்ருத மயமான பால் இதனிடத்திலிருந்து பெருகுகிறது. தேர்ந்த அறிவாளிகளாகிய ஞானிகள் இதைப் பருகும் பாக்கியவான்கள்" என்று இந்த சுலோகம் கூறுகிறது. ஆத்மாவின் அழிவற்ற தன்மையைப் பற்றி இனி காலதேவன் கூறப்போகும் வாசகங்களுக்கும் கீதையின் அருள் மொழிகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதைக் காணலாம். கருத்தில் மாத்திரம் நெருக்கம் என்றில்லாது, சொல்லிலும் ஒத்திருப்பதைக் காணக்கூடும். அர்ஜுனனின் மோகத்தை, துக்கத்தை ஒழிப்பதற்கென்றே 700 சுலோகங்கள் கொண்ட ஸ்ரீமத் பகவத்கீதை உபதேசிக்கப்பட்டது. இதைப் பதினெட்டு அத்தியாயங்களாக வகுத்துள்ளனர். இப்பதினெட்டு அத்தியாயங்களில் கூறப்படும் கருத்துக்

---

பூவாதே காய்க்கும் மரமும் உள; மக்களுள்ளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே.

(ஏவாது - எவரும் தூண்டாமல்.)



களை, நூலின் சாரத்தை முகவுரையில் தருவது போல, இருபதே சுலோகங்களில் பகவான் கூறுகிறார். இரண்டாம் அத்தியாயத்தின் "முதல் 30 வரை உள்ள பகுதியே அது. கீதையின் எல்லாப் பாகங்களும் சிறந்ததுதான். எனினும், அதன் மிகமிகச் சிறந்த பகுதியாக, மணிகளுள் மாணிக்கம் போல, அது மதிக்கப்படுகிறது. இப்பகுதி உபநிஷதப் பாலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெயாக விளங்குகிறது. அவற்றுள் இரண்டு சுலோகங்கள் கதோபநிஷதத்தின் சொற்றொடரை அப்படியே கொண்டுள்ளது. கூர்ந்து நோக்கத் தக்கது. அந்த மந்திரங்களை இனிப் பார்ப்போம்.

ந ஜாயதே ம்ரியதே வா விபச்சின் நாயம் குதச்சின் ந ப$^{3}$பூ$^{4}$வ கச்சித் | அஜோ நித்ய: ஶாஶ்வ தோऽயம் புராணோ ந ஹன்யதே ஹன்யமானே ஶரீரே ॥ என்பது உபநிஷத் மந்திரம். ந ஜாயதே ம்ரியதே வா கதா$^{3}$சின் நாயம் பூ$^{4}$த்வா ப$^{4}$விதா வா ந பூ$^{4}$ய: | அஜோ நித்ய: ஶாஶ்வதோऽயம் புராணோ ந ஹன்யதே ஹன்யமானே ஶரீரே ॥ இது சுலோகம். இரண்டின் பொருளும் அநேகமாக ஒன்றாகவே உள்ளது. அறிவு மயமான ஆத்மா பிறப்பதில்லை. இறப்பதுமில்லை. அது ஒன்றிலிருந்து தோன்றுவதுமில்லை. அதனிடத்திருந்து எதுவும் தோன்றுவதில்லை. பிறப்பற்றது. நித்தியமானது. என்றும் இருப்பது. மிகத் தொன்மையானது. இவ்வுடலைக் கொன்ற போதிலும் ஆத்மா கொல்லப்படுவதில்லை.

"பொன்றுவது உடம்பு. அதனுள் நின்ற பொருள் பொன்றாது, என்றும் ஒரு இயல்புடன் நிற்கும்" எனும் கருத்தை விளக்குகிறான் காலன். சாவிற்கு அப்பாலுள்ள இரகசியத்தைக் கேட்கிறான் நசிகேதஸ். காலன் விடை பகர்கிறான்: "அப்பா! பிறப்பும் இறப்பும் உடலுக்கேயன்றி ஆத்மாவுக்கு அல்ல. ஆத்மா பிறப்பதில்லை. வேறு ஒன்றைப் பிறப்பிப்பதுமில்லை. பிறப்பு இருந்தால் அல்லவோ அது ஒழிந்த இறப்பும் உண்டு? இறப்பு பிறப்பு

---

விரைத்தாலும் நன்றாக வித்தெனவே, பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு.

(விரைத்தல் - விதைத்தல். நன்றாக - நலம்பெற விளையாத.)

இரண்டுக்கும் அப்பாற்பட்ட அது என்று தோன்றியதென்றோ, என்று மறையுமென்றோ சொல்ல இயலாது. அது புராணம் அல்லது புராதனமானது. என்றும் நிலைத்திருக்கும் சாஸ்வத வஸ்து என்று கூறுகிறான் எமதர்மன். இதே கருத்தைத் தண்டமிழில் ஸ்ரீ பாட்டனார் கூறுவதைக் காண்போம்.

ஊறுபட ஒன்றினுளே பிறத்தல், பிறந்து உளவாதல், வேறுபட வளர்தல், வளர்ந்து அயலொன்றாய் விளைந்து அமைதல், மாறுபடத் தேய்தல், அறயாய்தலென வருகின்ற ஆறு இயல்பும் உடம்பன்றி அறிவு அடையா.''

காலதேவன் மேலும் கூறுகிறான்: ''நான் கொல்கிறேன் எனக் கொல்பவனும், 'நான் கொல்லப்படுகிறேன்' எனக் கொல்லப்படுபவனும் கருதினால் இருவருமே அறியாதவர்கள் ஆகின்றனர். ஏனெனில், ஒருவரும் கொல்வதில்லை, கொல்லப்படுவதில்லை. ''நாயம் ஹந்தி நஹன்யதே". நுண்ணியவற்றுளெல்லாம் நுண்ணியதும் பெரியன அனைத்திலும் பெரியதுமாகிய ஆத்மா எல்லா ஜீவராசிகளின் இதயத்திலும் வாழ்கிறது. எவன் ஆசைகளினின்றும் விடுபட்டவனாய், மனம், புலன்கள் ஆகிய இவற்றைக் கட்டுப்படுத்தியவனாக இருக்கிறானோ அவன் ஆத்மாவின் பூரண ஸ்வரூபத்தை, அதன் மேன்மையை உணர்ந்தவனாகிறான். அவன் துன்பங்களினின்றும் விடுபட்டவனாகிறான்.'' காலதேவன் கூறக்கூடிய இந்த வாக்கியம் சநாதன தர்மமாகிய வேதத்தின் திரண்ட வெண்ணெய் போன்றுள்ளது. இந்த மந்திரத்தில் மனமும் இந்திரியங்களும் "தா$^{4}$து" என அழைக்கப் படுகின்றன. உடலைத் தாங்கி நிற்கும் பொருள்களானபடியால் அவை தாதுக்கள் என அழைக்கப்படுகின்றன. புலன்களும் மனமும் சாந்தி பெற்று, அமைதியுற்று நிற்குமேயானால் துன்பத்திலிருந்து விடுபட்டு ஆத்மாவை அறிந்து, அவ்வானந்தத்தில் திளைப்பது பற்றி என்ன சந்தேகம்?

தர்மராஜனின் விளக்கம் மேலும் தொடர்கிறது. ஆத்மாவின் சர்வ வியாபகத் தன்மையை விளக்குகிறான்.

---

போதம் தனம் கல்வி பொன்றவரும் காலத்தே
மாதர்மேல் வைப்பார் மனம்.(போதம் - அறிவு. பொன்ற - அழிய.)



இருந்த இடத்திலிருந்து அது வெகு தொலைவிற்குச் செல்கிறது. படுத்தபடி எங்கும் பரந்து விளங்குகிறது. சுகிப்பவனும் சுகிக்காதவனுமாகி, ஒட்டியும் ஒட்டாமலும் நிற்கும் இவ்வாத்மாவின் தன்மையை யார் அறிய முடியும்? (யாரே அறியவல்லார்? என் போன்று ஞானம் வாய்க்கப் பெற்றவர்களே இதைப் பூரணமாக அறிய முடியும்.) இம் மந்திரத்தில் மதா$^{3}$மதம்$^{3}$—என்று ஓர் சொல் வருகிறது. அது சுகிப்பவனும் சுகியாதவனும் என்று பொருள்படுகிறது. ஆத்மா தன்னைப் பொறி புலன்களுடன் ஒன்றிடச் செய்து, வஸ்துக்களைக் கண்டு நுகருமாயின் அது சுகிப்பதாகிறது. தன்னைப் புலன்களில் செலுத்தாது, தன்னில் தான் ஒன்றியிருந்தால் அதற்கும் உடலின் செயலுக்கும் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை. இந்நிலையில் அது சுகியாததாக, சாக்ஷிமாத்திரமாக விளங்குகிறது. ஒன்றுக்கொன்று ஒவ்வாததாகத் தோன்றுகிறது 'மதாமதம்' எனும் சொல். எனினும் ஆத்மாவுக்கும் உடலின் செயல்களுக்கும் சம்பந்தமில்லை என்பதை அறிந்து உணர்ந்து வாழ்வதே முறையான வாழ்க்கையாகும். ஆனால் இத்தகைய அறிவும் அனுபவ ஞானமும் வாய்க்கப் பெற்றவர் மிகக் குறைந்தவர்களே. இந்தத் துர்லபம் பற்றியே என்னைத் தவிர வேறு யார் அறிதல் கூடும்? என்று காலன் வினவுகிறான். உடல் என்னும் சிறு கூட்டுக்குள் ஆத்மா இருப்பினும் அது சர்வ வியாபகமாக இருப்பதால் அது உட்கார்ந்தபடி எட்டச் செல்கிறது என்றும், படுத்தபடி எங்கும் பரந்து விளங்குகிறது என்றும் கூறப்பட்டது.

''மஹத் தன்மை (மேன்மை) யுற்றதும், எங்கும் பரவி நிற்பதும், அழியும் உடலுள் ஸ்திரமாகத் தங்குவதுமான இவ்வான்மா சரீர மற்றது (அஸரீரம்) என எந்த ஞானி அறிகிறானோ அந்த தீரன் துயருறுவதில்லை. 'தீ$^{4}$ரோ ந ஶோசதி' என்னும் இச்சொல்லில்தான் என்ன கம்பீரம்! துயரும் துன்பமும் 'நான்' என்று உடலை எண்ணுவதால் தான் ஏற்படுகின்றன. தேகத்தை ஆத்மா என்று தவறு

---

வினைப்பயனை வெல்வதற்கு, வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை. (இல்லை - வழியில்லை.)

தலாகக் கருதும் புத்தி ஒழிந்து, ஆத்மா சரீரமற்றது. இன்ப துன்பங்கள் அதனைச் சாரா என்று உணர்பவர் தீரர்கள் தான் அன்றோ. அவர்களை மயக்கம் ஒழித்த மஹா வீரர்கள் என்று போற்றுவது மிகப் பொருத்தம் தானே! அத்தகைய பெருமக்களை ஆரியர் என்று அழைக்கிறார் மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தில் எறிந்தே
ஐயுறலின்றிக் களித்திருப்பார் அவர்
ஆரியராம் என்றிங் கூதேடா சங்கம்.

## வாக்கு மனம் அணுகாத பூரணப் பொருள்

தற்காலத்தில் எங்கு பார்த்தாலும் ஆத்மாவைப் பற்றிய பேச்சே மிகுந்துள்ளது. பலரும் வேதாந்த தத்துவங்களைக் கூறும் நன்னூல்களைப் படிக்கின்றனர். சிலர் அதை ஆராய முற்படுகின்றனர். ஆனால் இத்தகைய ஆராய்ச்சியாலும் அறிவின் திறங் கூடியபேச்சாலும் ஆத்ம அறிவு கிட்டக் கூடுமோ? அதுதான் இல்லை என்பதுதான் காலதேவனின் பதில்.

"நாய மாத்மா ப்ரவசனேன லப்$^4$யோ ந மேத$^4$யா
ந ப$^3$ஹுனா ஶ்ருதேன|
யமேவைஷ வ்ருணுதே தேன லப்$^4$யஸ் தஸ்யைஷ
ஆத்மா விவ்ருணுதே தனும் ஸ்வாம்||

இந்த ஆத்மா (வேதம் போன்ற பல்கலை நூற்களைப்) படிப்பதனால் கிட்டாதது. அறிவினாலும் அறியப்படாதது. கேட்பதனாலும் உணர முடியாதது.

(தொடரும்)

கண்ணுறுவது அல்லால் கவலைப்படுதல் நெஞ்சே!
விண்ணுறுவார்க்கே இல்லை விதி.

(கண்ணுறுவது - நினைவே (வினையாயது என)எண்ணுவது.
(விண்ணுலகார்க்கு—விடுபேறு விரும்பினர்க்கு



# காவடி

(இளவழகனார்)

காவடி வழக்கம் முருகக்கடவுள் திருக்கோயில்களில் நிகழ்கின்றது. திருத்தணி, பழனி முதலிய பல திருக்கோயில் களில் காணலாம். முருகக் கடவுளுக்கும் காவடிக்கும் என்ன தொடர்பு? என்று அறிய விருப்பம் மீதூரும்.

காவடியை பத்தி மிக்கவர் எடுக்கின்றனர். அந்நிலையில் அவர்கள் வடிவமாகவே முருகக் கடவுளும் ஆவேசித்து நிற் கிறார். மக்கள் உயிரறிவில் 'ஞானக் கண்' பதிதலை அது காட்டும்.

ஞானக் கண் என்பது வெறும் அறிவு நிலை அன்று; ஏதொன்றையும் தன் வயமாக்கப் பார்க்கும் உணர்வு நிலை. பத்திமிக்க மக்கள்மேல் இறைவன் சக்தி புகுந்து ஆடுதல் ஏனைத் தேவர்களைவிட முருகக் கடவுள் வகையில் மிகுதி யாக நிகழ்கிறது. காவடிப் பாட்டுக்கள் மேலும் மேலும் மிக்க பரவசத்தைக் கொடுக்கும். பாட்டும் ஆட்டமும் உலகை மறந்து, தம்மையும் மறந்து தலைவனைத் தெளித லாகிய நிலைக்கு உயர்த்தி விடுகின்றன.

முருகக் கடவுளுக்கும் உணர்வுமிக்க ஆன்மாக்களுக் கும் நேர்த் தொடர்பு உண்டு. முத்தி நிலைக்கு உயிர்கள் முன்னேறி உயர்ந்தால், அந்நிலையில் அவர்களை 'சோமாஸ் கந்தர்' உரு என்று சாத்திரம் பாராட்டும். அன்பிற் சிறந்த மெய்யன்பராதலின் தியாக உணர்வாகிய அவ்வன்பின் நிலையைக் கருதித் 'தியாகராசர்' என்றும் சிறப்பிக்கும். தியாகர் நடனம் இந்நிலைக்கு ஏனையோரையும் பரவசப் படுத்தி உணர்த்தும். யோக பஞ்சாக்ஷரத்தில், முக்திக்கு அணுக்கமாக உலக நிலைகளின் பற்றுவிட்டு உருக்கத்தால் உயர்ந்து நிற்கும் ஆன்மாவின் எழுத்து, 'சோமாஸ்கந்தர் எழுத்து' என்றும் அம்மையப்பருக் கிடையில் நிற்கும்.

தியானத்துக்குரிய திருவைந்தெழுத்து அத்துடன் "அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால், அடியேன்

சேவித்தும், சென்றிரந்தும், தெள்நீர்க் கடல்கடந்தும்,
பாவித்தும், பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்.

(போவிப்பம் வீண்காலம் போக்குகிறோம்.)

உன் அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரிவாய்" என்று மணிவாசகப் பெருமான் அருளிச் செய்தபடி. இத்தகைய நிலையில் உயரும் நன் மக்கள் காவடி எடுத்துத் திருக் கூட்டத்தினிடையில் ஆட்டமும் பாட்டமும் உடையவர்களாய்த் திகழ்கிறார்கள்.

அந்நிலையில், அவர்களுடைய பக்குவ நிலை இரு வினையொப்புப் பெற்று விடுகிறது. அது மலத்தின் பரிபாகத்திற்கும், அருளாற்றல் வந்து நிறையும் நன்னிலைக்கும் அடையாளம்.

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பன ஒன்றுக்கொன்று காரணமாய் உடன் நிகழ்வன. இதனால், இவற்றில் ஒன்றைக் குறிப்பிட்டாலும், ஏனை இரண்டின் நிகழ்வையும் அதுவே புலப்படுத்தும். அதனாலேதான் மணிவாசகப்பெருமான், "என் வினை ஒத்தபின் காட்டினாய்க் கழுக்குன்றிலே" என்று ஒன்றை மட்டும் குறிப்பிட்டார்.

இருவினை என்பன இதம் அகிதங்கள், நன்மை தீமைகள்; இவை ஒத்தல் என்பது நன்மைக்கான உணர்ச்சியும் தீமைக்கான உணர்ச்சியும் வேறு வேறாய் உணரப்படாமல், எல்லாம் இறைவன் திருவருள் வழியே நிகழக் காண்பது. வினைகள் திருவருள் வழியில் ஒத்தபின் என்பது, "என் வினை ஒத்தபின்" என்பதன் கருத்து.

நன்மையோ தீமையோ தன்னுணர்ச்சியில்செய்வதல்ல. நிகழ்வனவெல்லாம் திருவருட்செயலே என்று நன்மைதீமைகளை ஏற்றுக்கொள்வர் ஞானிகள். அந்நிலையில் அவர்களுக்குத் திருவருள் வழி என்பதொன்றே எண்ணம்; தம்மை மறந்த எண்ணம். நன்மைக்கு மகிழ்தலும் தீமைக்கு வருந்துதலும், வேண்டுதலும் வேண்டாமையும், அந்நிலையில் அவர்களுக்கு இல்லை. இத்தகைய அருமையான பக்குவ நிலையைக் 'காவடி' ஏந்துதல் புலப்படுத்துகிறது.

இடும்பன் என்னும் தக்கோன் இந்நிலை பெற்றவன். அவனுக்கும் காவடியுண்டு.

---

பாழின் உடம்பை, வயிற்றின் கொடுமையால்
நாழியரிசிக்கே நாம் (காலம் வறிது கழிக்கின்றோம்.)



'கா' என்பது இருபக்கமும் சமமான நிலையில் தோளில் தூக்கப் பெறுகிற ஒரு கருவியைக் குறிக்கும். 'திருவடி ஞானம்' என்றாலும் இந்தப் பக்குவ நிலையாகிய 'ஞானக் கண்' என்றாலும் ஒன்றுதான். அதனால் 'காவாகிய அடிகள்' என்னும் கருத்தில் காவடி என்பது வந்தது.

ஞானிகளுக்கு உலக நிலை அருள் நிலை இரண்டும் ஒன்றே. அருளின் வழி உலகியல் நடப்பதனாலும், உலகியல் அவர்களை தாக்காமையாலும், இரண்டும் ஒன்றே. புலன் வழியில் சென்றாலும் அருள் வழியே அவை நடைபெறுவதனால் இறை பணியே.

திருவடிகளில் ஒன்று உலகியல் வழியில் உதவுவது; மற்றொன்று தன் உண்மை நிலையில் விளங்குவது. இருப்பது ஒன்று; உலவுவது ஒன்று. முறையே இவை அம்மையப்பர் திருவடிகள் எனப்பெறும்.

நன்மையாய் இருப்பதாயும், நலம் விளைக்கவே உலக அழுக்குகளில் தானும் ஓர் அழுக்காகப் பாசம்போல் மறைந்து உலவுவதாயும், திருவடிகள் உள்ளன.

தீமைகள் என்பன 'ஞானிகளுக்கு நலம் விளைக்கும் முறைமையிலேயே நிகழும். தீமை தீமையை விளைவிக்காமல், நன்மை போலவே நலம் விளைக்கும் காரணமாய் நடக்கும்போது, நல் வினையை ஒத்தலாகவே தீவினையும் மதிக்கப்பெறும். அப்படித்தான் இருவினை தம்முள் ஒப்புமை பெற்றது.

அடியார் செயல்கள் இவ்வாறு நலந்தீங்குகள் என்னும் பிரிவினையின்றித் திருவடி ஞானத்தால் நிகழ்வதனால், 'கா' என்னும் ஒப்புமைக் கருவி, அடிகள் ஆயின. அதனால் 'காவடி' என்பது 'கந்த மூர்த்தி பாங்கிற் சிறந்து வரும் பக்குவமான நிலைமையுடைய அடியார்களின் உணர்ச்சிச் சிறப்பைக் காட்டும் ஓர் அடையாளமாய் திகழ்ந்து வருகின்றது. வாழி காவடி! வாழி கந்தன் கழலிணை!

---

பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், பேருலகில்
உற்றார், உகந்தார் (கும்பிட்டாலும் லோபிகள் கொடார்.)

# உள்ளத்து உள்ளான்!

## (அ. ராமமூர்த்தி, ஹரித்துவாரமங்கலம்)

"ஆலயங்கள் ஆயிரத்திற்கு மேல் சென்று வழிபட்டேன். வாயார மனமாரப் பாடித் துதித்தேன். அடியார் திருக்கூட்டங்களுக்கு அறுசுவை உண்டி படைத்து அடி பணிந்து அவர்களோடு அளவளாவினேன். பக்தர்களுக்கென என் சொத்துக்களை யெல்லாம் வாரி வாரி வழங்கினேன். எங்கு எவர் உபன்யாசம் செய்தாலும் அங்கு போய்ச் சிரவணம் செய்தேன். ஆயினும் என்ன பயன்? நான் வேண்டும் இறைவனைக் காண முடியவில்லை. நிம்மதியென்பது என் மனத்தில் அறவே இல்லை. அவன் மேலுலகத்திலே உள்ளான் என்று கூறின் அவனிருப்பிடத்திற்கு நான் எப்படிப் போவேன்? சிவலோகம், வைகுண்டம் ஆகிய எல்லாம் வெறுங் கற்பனை தானே? இப் பிறவி இப்படியே பயனற்றுத்தான் போய்விடுமோ? தெய்வீகத் துறையிலே என்னென்ன புத்தகங்கள் உண்டோ அத்தனையும் படித்தாயிற்று. என்றுதான் என் அப்பனைக் காண்பேனோ?' என்று அங்கலாய்த்துக் கொண்டார் எனது நண்பர்.

அவருடைய உள்ளம் பவித்திரமானது. அவர் படித்த அளவு நான் படிக்கவில்லை. ஒழுக்கத்திலும் ஈகையிலும் உலகிற்கு ஒரு உதாரணமாக அவரைக் கூறலாம். என் சம்பாஷணையால் அவரைத் திருப்தி செய்விக்க என்னால் முடியாது.

தமது ஆற்றாமையை என்னிடம் வெளியிட்டதன் மூலம் எனக்கே இப் பிரச்னையை உண்டாக்கித் தந்து விட்டார் அவர்.

ஏதாவது பிரச்னைகள் தோன்றும்பொழுது நான் என் புத்தக அலமாரியைத் திறந்து விடுவது வழக்கம். கைக்கு அகப்பட்டதை எடுத்து குறிப்பிட்ட ஒரு நோக்கமின்றி

---

தரையின் நிறம் தண்ணீர்; தக்கோர்குணம் கொடைநடை;
கண்ணின் நீர்மை கருணை; காரிகை நீர்மை கற்பாகும்.



ஏதாவதொரு பக்கத்தைப் புரட்டுவேன். அப் பக்கத்தில் அதிர்ஷ்டவசமாக எனக்கு ஆறுதல் கிடைத்தால் உண்டு.

அன்றும் வீட்டுக்கு வந்ததும் அம்முறையையே கையாண்டேன். கிடைத்த பக்கம் காரைக்கால் அம்மையாரது சரிதமாக இருந்தது. செய்யுள் வடிவிலே கீழ்க்கண்ட வரிகள் என் கண்களில் பளிச்சிட்டன.

"வானத்தான் என்பாரும் என்க; மற்று உம்பர் கோன்
தானத்தான் என்பாரும் தாம் என்க;—ஞானத்தால்,
முன் நஞ்சத்தால் இருண்ட மெய்யொளிசேர்
கண்டத்தான்
என் நெஞ்சத்தான் என்பன் யான்"

"அவன் வானுலகத்திலே இருக்கிறான் என்று கூறுபவர்கள் கூறட்டும். அவனிருப்பிடமாகிய கைலாயத்திலே இருக்கிறானென்று சொல்பவர்களும் சொல்லட்டும். ஆனால் நானோ அந்த விடமுண்ட கண்டனை என் உள்ளத்திலே காண்கிறேன்" என்று அவ்வம்மையார் அருளி யிருப்பதைப் படித்தேன்.

தொடர்ந்து மனம் சிந்திக்க ஆரம்பித்தது. உள்ளத்தே உள்ளானை உலகெங்கும் தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லை என்று நண்பர் வருந்தினாரே! காரணம் என்ன?

எங்கு தேடினாலும் உள்ளம் அவன் மயமாக மாறினாலன்றி அவனைக் காண முடியாது. பார்க்குமிடமெங்கும் நீக்கமற இறைவன் நிறைந்திருப்பது யாருக்கு? கண்களால் பார்ப்பவர்களுக்கல்ல! உள்ளத்தால் பார்ப்பவர்களுக்கு!

உள்ளத்தால் பார்ப்பதே உண்மைப் பார்வையாகும். அப்படிப் பார்க்கும்பொழுது அவன் காட்சியை மட்டுமே பார்க்க முடியும்!

பொய்யாம் உலகெங்கும் ஆண்டவனைத் தேடிய பொய்கை யாழ்வார்,

"வெள்ளத்தின் உள்ளானும்
வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான்"

---

வரும்திருவும், வாழ்நாளும், வஞ்சமிலார்க்கு எந்நாளும்
தரும் சிவந்த தாமரையாள் தான்.

of Gayatri. The high rank and respect in which Sri Anantarama Dikshitar is held by all sections of the community was evident by the crowds that gathered to taste the sweetness of the eternal joy as it boomed forth from the Dikshitar, who was making an irresistible appeal to the audience to the ways of blessedness indicated in the Ramayana.

The ways of blessedness are indicated in many other works also. At the same time, Bagavatam is being expounded to large audiences at Mylapore by Sri Narayana Dikshitar, the brother of Sri Anantarama Dikshitar. It is a great good fortune that the family of Dikshitar should have produced not merely his brother but also others who have gathered to themselves great spiritual attainments and a living working acquaintance with the Vedas & the Upanishads. Narayaneeyam is being expounded at Triplicane by Sri Amirtananda Yogi. Sri Ramakrishna Sastri of Kallidaikurichi is another messenger of God who is disseminating the messages of our Holy scriptures in other parts of the city. One has also to take into account the many Bhakta Associations affiliated to the Saivite forms of worship, the Tiruppugazh Associations and numberless other organisations of devotion. The Lord's mercy is overwhelming us in this expression of Bhakti, and may this continue for ever.

*Thiruppugal Mani.*

சென்னை-600 003

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடியெம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா(று) இசையே!

# Coffee

**Ours for Quality**

RAW, ROAST OR GROUND

GANESH & CO. (MADRAS). LTD. MADRA

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சொக்கலிங்கம் செட்டியார் & Co

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113




குடை மார்க் பின

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவு

49, லைசடன் ஹாம் ரோடு

சென்னை-3, டெலிபோன்: 2

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி

129, பூர் தெரு

சென்னை-1, டெலிபோன்: 2.

குகஸ்ரீ ரசபதியின் அருள் நூல் விரிவுரைகள்

விநாயகர் அகவல், கந்தர் அநுபூதி, திருவகுப்புகள், கந்தர் கலிவெண்பா, திருச்செ
முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கயிலாய ஞான உலா, கணபதி தாலர்க
சிவநேயச் செல்வர்கள், தேவி தாலர்கள், முருகனடியார்.

அமிர்தவசனி காரியாலயம் 34, பந்தர் தெரு, சென்னை-1


Printed by K. V. Jagannathan at the National Art Press
61, Mount Road, Madras—18